

10
கலை இலக்கிய இதழ்
விலை ரூபா. 350/-
ISSN : 9 773030 717002
மின்னல் வெளியீட்டகம் - ஒலுவில்

Since 2001

Issue 10 | April – June 2024

**பிரதம ஆசிரியர் :**
அஸீஸ் எம் பாயிஸ்

**அலுவலகம் :**
இல. 59/2, பழைய தபாலக வீதி,
ஒலுவில் –07 (கி.மா)
த.கு.எண் : 32360
இலங்கை.

**தொடர்புகள் :** +94776619949

**படைப்புகளை அனுப்ப வேண்டிய வாட்ஸ்அப் இலக்கம் :** +94758238199

**சஞ்சிகை ISSN இலக்கம் :**
9 773030 717002

**அட்டை வடிவமைப்பு :** சாஜித் அலி



**விலை :**
ரூபா. 350/–

**வெளியீடு :**
மின்னல் வெளியீட்டகம்,
ஒலுவில் (கி.மா.)
இலங்கை.




# The Editorial

ஏப்ரல் முதல் பகுதியிலேயே வெளிட வேண்டும் என்று பெரும் பிரயத்தனம் எடுத்துக் கொண்டாலும் எழுத்தாளர்களிட மிருந்து படைப்புக்களைப் பெற்றுக் கொள்வதிலுள்ள காலதாமதமே திட்டமிட் டபடி கொண்டு வர முடியாததற்கு காரணம்.

இன்னும் சிலர் கட்டாயம் படைப் புகளை தருவதாக வாக்களித்துவிட்டு இன்று வரை அந்த வாக்கிற்குமாறு செய்து நயவஞ்சகத்தனம் செய்து கொண்டிருக் கிறார்கள். ஒரு சஞ்சிகை படைப்புக் கோரி கால அவகாசம் கொடுக்கிறார்கள் என்றால் அர்த்தம் நாம் எப்போது வேண்டு மானாலும் படைப்புகளை அனுப்பலாம் என்பது அல்லவே. ஒரு வெளியீட்டின் பின்னால் உள்ள இரவு பகலான உழைப்பு சொல்லி விளக்க முடியாதது.

சஞ்சிகை வெளியீடுகளோ நூல் வெளி யீடுகளோ வெறும் புகளுக்காகவோ அல்லது இலாபகரமான நோக்கில் செய்கி றார்களோ என்ற எண்ணத்திலிருப்பவர் களானால் நீங்கள், நிச்சயமாக அந்த எண்ணத்தை மாற்றிக் கொள்ளுங்கள். இங்கு கிடைப்பது வெறும் ஆத்மதிருப்தி மாத்திரமே.

படைப்புகளை அனுப்பக் கோரும் போது முடியாதென்றால் முகத்தில் சொல்லி விடுங்கள் அது ஒற்றை வார்த் தையோடு நிறைவுற்றுவிடும் ‘‘நிச்சயம் எழுதித் தருகிறேன்’’ என்று வாக்களித்து நீங்களும் (முனாபிக்) நயவஞ்சகனாகி உங்களைப் பற்றிய நல்லெண்ணத்தை அடுத்தவர்கள் அழித்துக் கொள்ளும் அளவு நடந்து கொள்ளாதீர்கள்.

***அஸீஸ் எம் பாயிஸ்***
பிரதம ஆசிரியர்



# வாசல்


**கட்டுரைப் பிரதிகள்**

- ஆயிரம் காலத்து பயிர் - ஜனதா லத்தீ∴ப் /09
- நவீன நாஸ்திகத்தின் வரலாறும்... - அஷ்ஷெய்க் றிஷான் சுபைதீன் (நளீமி)/20
- பத்தி எழுதுதல் பற்றி – நளீபா அஸீஸ் அஸீம் /31
- கீறல் - ஒரு வாசகியின் பார்வை - சித்தி மிஸ்றியா அமீன் /57

**அனுபவப் பகிர்வு**

- சோலி குறைவான ஞாயிற்றுக் கிழமைகள் - லலிதாகோபன் /24

**சிறுகதைகள்**

- நிராகரிக்க முடியாத விண்ணப்பங்கள் - மரீனா இல்யாஸ் ஷாபி/05
- திரிபோஷா - திக்வல்லை கமால் /14
- மயிலிறகு - ஹமீட் யூ நிசார் /26
- தியாகத் திருநாள் - ஹுமைரா அல் அமீன் /45
- விதியின் வழியில் - வரிபத்தானசேனை ரஷ்மியா /53
- கமுக்கம் - ரோஷான் ஏ. ஜி∴ப்ரி /61

**மொழிமாற்றக் கவிதை**

- ஆங்கிலத்தில் - ரோஸ்மெர்ரி வாஹ்டோலா ட்ரோம்மர் (அமெரிக்கா)
  தமிழில் - ஸ்ரீ என் ஸ்ரீவத்ஸா (நொய்டா - இந்தியா)/ 19

**குறும்பா**

- அலெக்ஸ் பரந்தாமன் /10 # யாஸீன் ஸாலிஹ் (பின் அட்டையின் உள் பக்கம்)

**மரபுக் கவிதை**

- நினைவிலேற்று - மருதூர் ஜமால்தீன் /32

**சந்தக் கவிதை**

- பெண்ணின்றி அமையாது உலகு - கிண்ணியா சபீனா /49

**அறுசீர் விருத்தம்**

- மாண்புக்கு பெயர் மாதர் குலம் - கத. யேசுசகாயம் /12

**நூல் அறிமுகம்**

- கனதி – சிறுகதைத் தொகுதி குறித்து – கேணிப்பித்தன் ச. அருளானந்தம்/35
- புழுதி - காரையன் கதன்/39
- விசித்தரங்களால் நிறமூட்டப்பட்ட உலகு - குர்ஷித் மஜீத்/39

**நூல் விமர்சனம்**

- துயில் - (எஸ்.ரா) அகமட் பிஸ்தாமி/41

**கவிதைள்**

- சோலைக்கிளி/04
- அக்கரையூர் அப்துல் குத்தூஸ்/11
- பொத்துவில் அகமது ∴பைசல்/13
- அஸீஸ் எம் பாயிஸ்/17
- பாலைவன லாந்தர் (தமிழ்நாடு)/18
- பஹ்மி ஹலீம்தீன்/23
- ஜமீல்/30
- வசந்த தீபன் (தமிழ்நாடு)/33
- கம்மல்துறை இக்பால்/34
- நதிமகள் /37
- ஷபானா ஆதம்லெவ்வை/38
- பாலமுனை பஸீனா/40
- பதுளை சிபானா பதா/43
- சம்மாந்துறை முர்ஷிதா ஷிரீன்/43

**கவிதைள்**

- தோப்பூர் என்.எம். பாஜித்/44
- முபர்ரிஜ் நயீம்/44
- பாயிஷா அலி - கிண்ணியா/47
- தோப்பூர் முஸ்தபா மௌஜூத் /48
- சேனையூர் சப்றீன்/50
- ஜலீலா முஸம்மில் - ஏறாவூர்/51
- கலேவெல லரீபா பதுர்தீன்/52
- காத்தான்குடி - எம்.ஐ. நஸீஹா/52
- புத்தளம் சஜீலா இப்றாஹீம்/56
- ஒலுவில் மும்தாஜ் ஹமீட்/58
- சாய்ந்தமருது பானு ஜி∴ப்ரி/59
- சுபாஷினி பிரணவன் - கொழும்பு/59
- முப்லிஹா பிர்தௌஸ் காத்தான்குடி/60

# உலகக் கவிஞர்
# சோலைக்கிளியின் கவிதைகள்

## ஆடைபோல உலகம்


முறுக உலர்த்திய ஆடையில்
ஓரிடத்தில்
காயாமல் இருக்கிறது ஓர் ஈரம்
உலகம்போல ஆடை
ஈரம்போல ஒன்று

கொடியால் எடுத்துப்போட்ட ஆடையை
நோக்கிக்கொண்டிருந்தேன்
என் தத்துவவாதி எனக்குள் இருந்து
வெளிப்பட்டான்

ஓர் ஈரம்தானே உலகம் எங்கும்
கசிந்திருக்கிறது
புல்லு முளைக்கவும் அந்த ஈரமே
தேவையாய் உள்ளது

இங்கிருக்கும்
புழுதி அடக்கும்
அந்த ஈரம்

ஆடைபோல உலகம்
அதில்
காயாத ஈரம்போல
ஒன்று
என்றான்



கவிஞரின் முகநூல் பக்கத்திலிருந்து

## ஜவுளிக் கடைக்குள்

உடலும் குழந்தை
சிலரது முகங்களில்
சிலரது குழந்தை
பூக் கீறி விளையாடுகிறது
இரண்டு இதழ் பூ

குழந்தை பூ வரையும்
முகங்களில்
கண் வழுக்கி விழுகிறது
பூப் பறிக்க வந்து

கண் எழுதக் கூடியது
இவள் செவ்விதழ்
அழகியென்று
எழுதிவிட்டு
தான் வந்த பங்கிற்கு
இழுக்கு வராமல் மெல்ல
மானத்துடன்
வசிக்கும் இடத்திற்கு
எழும்பிப் போயிருந்து
ஜவுளிக் கடைக்குள்ளும்
பிறை பார்த்து ரசிக்கிறது
அவளில் அவளில் அவளிலெல்லாம்

சீலையில் மொய்க்கும் குருவிகளே
ஓலையில் மொய்க்கின்ற
என்னையும் பாருங்கள்
ஒரு பொம்மை மரத்தடியில் நிற்கின்றேன்

# நிராகரிக்க முடியாத விண்ணப்பங்கள்...!

(சிறுகதை)



மரீனா இல்யாஸ் ஷாபி

அவள் வீட்டுக்கு முதன் முறையாகச் செல்கிறேன். எனக்கு அவளை அவ்வளவாகத் தெரியாது. ஒருநாள் ‘கவுண்டன்’ சூப்பர் மார்கெட்டில் ஷாப்பிங் செய்து கொண்டிருக்கும் போது, யாரோ தமிழில் பேசும் சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தேன். “நியூஸிலாந்தில் ஒரு டாலர் என்றால், நம்ம ஊரில் எவ்வளவு...?” என்று அவள் தன் கணவரிடம் விசாரித்துக் கொண்டிருக்கும் போதே புரிந்தது, அவள் புதிதாக இங்கு வந்திருப்பவள் என்று.

பக்கத்தில் நான்கு வயது மதிக்கத்தக்க ஒரு சிறுவன். நான் திரும்பிப் பார்த்தபோது முதலில் சங்கடப் பட்டாள். பின்னர் சமாளித்துக் கொண்டு பக்கத்தில் வந்து, நீங்களும் தமிழ் நாடா என்று கேட்கிறாள்.
“இல்லை இலங்கை...” என்றேன்.
“நீங்கள் பேசுங்க நான் லிஸ்ட்டைப் பார்த்து சாமான்களை வாங்கிறேன்...” என்று புன்னகைத்தவாறே தன் மகனின் கையைப் பிடித்துக்கொண்டு கடந்து செல்கிறார் அவளது கணவன்.

நாங்கள் இருவரும் சில நிமிடங்கள் அங்கே பேசினோம். அவள் இருக்கும் தெருவுக்கு அடுத்த தெருவில் தான் என் வீடு இருக்கிறது என்றதும், சட்டென்று நெருக்கமாகி விட்டாள். உடனேயே தொலைபேசி இலக்கத்தையும் தந்தாள். எனது இலக்கத்தையும் கேட்டு வாங்கிக் கொண்டாள். அவளது பெயர் காவியா.

அதன் பிறகு பல தடவைகள் இதே சூப்பர் மார்கெட்டில் எதேர்ச்சையாகச் சந்தித்துப் பேசிக்கொண்டோம். நேரம் கிடைக்கும் போது வீட்டுக்கு வாருங்கள் என்று ஒவ்வொரு முறையும் நான் சொல்வேன். பதிலுக்கு ஒருநாள் கூட அவள் என்னை அழைத்ததில்லை. ஆனால், இடைக்கிடை தொலைபேசியில் நலம் விசாரித்துக் கொள்வோம்.

ஐந்து வருடப் பழக்கத்தில், இன்றுதான் முதன் முதலாக அவள் வீட்டுக் கதவைத் தட்டுகிறேன். இரண்டு வாரத்துக்கும் மேலாக சுகயீனமுற்று இருப்பதாக அவள் செய்தி அனுப்பி இருந்தாள். அதனால், வீட்டில் கொஞ்சம் சாப்பாடு சமைத்துக் கொண்டுபோய் கொடுத்துவிட்டு வரச் சென்றேன்

கதவைத் திறந்த காவியாவைப் பார்க்க அதிர்ச்சியாக இருந்தது. அவள் உடம்பு இளைத்துப் போயிருந்தது. முகம் வெளிறி, வாடியிருந்தது.

வற்புறுத்தி உள்ளே அழைத்தாள். உள்ளே போன எனக்கு சங்கடமாகவே இருந்தது. கூடத்தில் யாரோ தலைமுதல் கால்வரை போர்த்திக் கொண்டு படுத்திருந்தார். அதனால், அவள் என்னை அறைக்குள் அழைத்துப் போய் கட்டிலில் அமரச் செய்தாள்...

உடம்புக்கு என்ன என்று விசாரித்தேன். கண்களில் சட்டென்று கண்ணீர். வாஞ்சையுடன் அவள் கைகளைப் பற்றிக்

கொள்கிறேன்... அந்தக் கைகள் கரடு முரடாக இருந்தன. நான் கேள்விக் குறியுடன் அவளைப் பார்க்கிறேன். அவள் தன் பாதங்களை உயர்த்தி என்னிடம் காட்டுகிறாள். இரண்டு பாதங்களும் வீங்கி இருந்தன... ஏன் இப்படி என்று கேட்பதற்குத் தயக்கமாக இருந்தது.

அவளே சொல்ல ஆரம்பித்தாள்... "காலையில் ஒரு பேக்கரியில் வேலைக்குப் போகிறேன், எட்டு மணித்தியாலங்கள் நின்றுகொண்டே தான் இருக்க வேண்டும் இரவில் கிளீனிங் ஜாப் செய்கிறேன். வேலைத் தளங்கள் மூடப்பட்டதன் பின்பு, அங்கே சென்று தளபாடங்களை தூசி தட்டி கார்பெட்டை வெக்கியூம் பண்ணி, மலசலகூடங்களையும் கழுவ வேண்டும். வீட்டுக்கு வந்தால் ஆறு பேருக்கு சமைத்துப் போடவேண்டும் ... முதுகு வலி தாங்க முடியவில்லை" என்றாள்...

நான் சட்டென்று இடைமறித்தேன். "நீங்கள், கணவர், மகன் என்று மூன்று பேர் தானே இருக்கிறீர்கள் ...? ஆறு பேருக்கு ஏன் சமைக்கிறீங்க ?"

அடுக்குமாடித் தொடர் ஒன்றின் கீழ் பகுதியில் தான் அவள் வசிக்கிறாள். அவள் வீட்டில் இரண்டு அறைகள். ஒரு சிறிய குடும்பத்துக்கு அளவான வீடுதான். ஆனால், ஆளை விழுங்கும் வாடகை இந்த நாட்டில். மாத வாடகை இல்லை, வாரா வாரம் வீட்டுக் கூலி கட்ட வேண்டும்.

"எங்க நாட்டுக் காசுப்படி பார்த்தா ஒரு வாரம் அம்பதாயிரம் வாடகை. ஒரு மாசத்துக்கு ரெண்டு லட்சம் ... கரண்டு பில்லு, தண்ணி பில்லு, இன்டர்நெட் பில்லு... இன்னும் எவ்வளவு செலவு இருக்கு...?"அவள் தொடர்கிறாள் .

இரண்டு அறைகள் கொண்ட ஒரு சிறிய வீட்டில் கணவன், மனைவி, மகன் மூவரும் ஒரே அறையில் தூங்குகிறார்கள்.

அடுத்த அறையில் வாடகைக்கு இரண்டு நபர்களை வைத்திருந்தாள். சின்னதாய் ஒரு ஹோல். அதிலும் ஒரு கட்டில்... குறைந்த வாடகைக்கு கூடத்திலும் ஒருவர் குடி இருப்பதாக கூறுகிறாள். அவர்கள் தரும் வாடகைப் பணத்தைச் சேர்த்து ஊருக்கு அனுப்புவதாகச் சொன்னாள்.

நேரத்துக்குச் சாப்பிடவும் நிம்மதியாகத் தூங்கவும் முடியாமல் எதற்கு இப்படி ஒரு வாழ்க்கை தெரியுமா? ஊரில் கல்யாணத்துக்கு இரண்டு தங்கைகள் இருக்கிறார்கள். தாயின் இருதய மாற்றுச் சிகிச்சைக்கு பணம் அனுப்ப வேண்டும். தன் கல்யாணத்துக்காக தந்தை பட்ட கடனை அடைக்க வேண்டும் தம்பிக்கு ஓர் மோட்டார் சைக்கிள் வாங்கப் பணம் அனுப்ப வேண்டும்...

கணவரின் குடும்பத்தில் அண்ணன் சிறுநீரக மாற்றுச் சிகிச்சைக்காக காத்திருக்கிறார். விதவையான அக்காவும், அவளது மகளும் கணவரின் பொறுப்பில் தான் இருக் கிறார்கள். மூட்டுவாதத்தில் அவதிப்படும் அம்மாவின் வைத்தியத்துக்கு தொடர்ந்தும் பணம் அனுப்ப வேண்டும். அவளின் பட்டியல் நீண்டுகொண்டே போகிறது...

இடையில் அவளுக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வருகிறது. "தம்பி தான் லைன்ல இருக்கான். பேசலாமா?" என்பது போல அவள் என்னைப் பார்க்கிறாள்.
"நீங்க பேசுங்க ..." என்று கூறிவிட்டு எழுந்து நின்ற என் தோள்களை அழுத்தி மீண்டும் உட்கார வைத்துவிட்டுப் பேசுகிறாள். மறுமுனையில் அவள் தம்பி பேசுவது எனக்கும் துல்லியமாகக் கேட்டது.

"அக்கா... எனக்கு பைக் வேண்டாம். நாம கார் வாங்கினா, அப்பாக்கும் வசதியா இருக்கும் . ஹார்ட் சார்ஜெரி பண்ணினா அவருக்கு செக்அப் பண்ண காரிலேயே கூட்டிப் போலாம். அடுத்த அக்காக்கும் பெரிய எடத்துல மாப்புள பாக்கலாம்..." அவன் தன் கனவுகளை அடுக்கிக் கொண்டே போனான்...

அவன் கனவுகளைக் கலைக்க மனமின்றி அவள் மௌனமாகப் புன்னகைத்து விட்டு, பிறகு பேசுவதாகத் தொலைபேசியைத்

துண்டித்தாள். எனக்கு அவளைப் பார்க்கப் பாவமாக இருந்தது.

“வெளிநாட்டு வாழ்க்கை என்பது சொர்க்கம் போன்றது சொகுசு வாழ்க்கை, சொல்லில் வடிக்க முடியாத இன்பம், கைநிறையக் காசு, கஷ்டம், கவலை, துன்பம், துயரம் என்ற சொற்களுக்கு அப்பாற்பட்ட அனுபவங்கள்’’ உள்நாட்டில் வாழும் பலரின் கற்பனை இப்படித்தான் இருக்கிறது வெளிநாட்டு வாழ்க்கையை பற்றி...! நாங்கள் இருட்டில் வாழும் வாழ்க்கை பற்றி பலருக்கு தெரியாது. தெரிந்து கொள்ள அக்கறை காட்டுவதும் இல்லை .

“டீ சாப்பிடுறீங்களா ...?’’ அவள் என் மௌனத்தை மெதுவாகக் கலைக்கிறாள். நேரமில்லை என்று நான் அவசரமாக எழுந்து நிற்கிறேன். “டீச்சருக்கு நைட்டுல என்ன வேலை...?” அவள் குறும்புடன் புன்னகைக்கிறாள் .

“நானும் இரவு நேர டியூசன் வகுப்பு ஒன்று நடத்துகிறேன்’’ என்று சொன்னபோது அவள் புன்னகை மறைந்து கண்கள் விரிகின்றன. முப்பது வருட வெளிநாட்டு வாழ்க்கையில் உங்களுக்கும் இன்னும் பொறுப்புகள் முடியவில்லையா ? என்று அவள் கண்கள் கேட்பது புரிந்தது...

அவள் தோளில் தட்டிவிட்டு மௌனமாக வெளியேறுகிறேன். இன்னும் மூன்று வாரத்துக்குள் பள்ளித் தோழியின் மகளின் திருமணத்துக்கு பத்து லட்சம் அனுப்ப வேண்டும் என்று மனம் கணக்குப் போட ஆரம்பித்தது .

தோழி பரீதாவின் கணவன் பெரும் விபத்தொன்றில் சிக்கி, வேலைக்குச் செல்ல முடியாத நிலையில் இருப்பதாகவும், அவளின் வருமானத்தை மட்டும் நம்பி மகளின் திருமணத்தை நடத்த முடியாத நிலையில் இருப்பதாகவும் சொல்லி அவள் தொலைபேசியில் பல தடவை அழுதிருக்கிறாள். பரீதாவுக்கு உதவும் நோக்கிலேயே மேலதிக வகுப்புக்கள் நடாத்தி, கொஞ்சம் கூடுதலாகக் காசு உழைக்க வேண்டிய நிலை.

யோசித்தவாறே கால்கள் வேகமாக நடந்தன ... வீட்டை நெருங்கும் போது, பழுதடைந்த நிலையில் நிறுத்தி வைக்கப்பட்ட கணவரின் கார் கண்ணில் பட்டது. அதைத் திருத்துவதற்கென்று ஒவ்வொரு முறையும் பணம் சேர்க்கும் போது, ஏதாவது ஒரு விண்ணப்பம் வந்து சேரும். அதனால், திருத்த வேலைகள் பின்தள்ளப்படும்.

பல மாதங்களாக அவர் பஸ்ஸில்தான் வேலைக்குப் போய் வருகிறார்... பொதுப் போக்குவரத்துச் சேவைகள் இங்கு குறைவாக இருப்பதால், அவர் மிகவும் தாமதித்தே வீடு வந்து சேர்கிறார். அண்மையில் முட்டுக்காலில் சத்திர சிகிச்சை செய்து கொண்ட அவருக்கு பஸ் பயணம் சிரமமாகத்தான் இருக்கிறது. ஆனால், ஊருக்கும் உறவுகளுக்கும் அதைச் சொல்லிப் புரிய வைக்க முடியாதே...

பெருமூச்சுடன் வீட்டுக்குள் நுழைய முற் படும்போது, “ஸாலிஹா...’’ என்று பலவீனமான ஒரு குரல் அவள் முதுகுக்குப் பின்னால் இருந்து ஒலித்தது. கணவர் ஷிஹார் நிலை குலைந்து விழப்போன நிலையில், ஓடிப்போய் அவரைத் தாங்கிப் பிடித்து வீட்டுக்குள் உட்காரவைத்து விட்டு, சீனி கொஞ்சம் எடுத்து அவர் வாயில் ஊட்டுகிறேன். சர்க்கரை வியாதிக் காரரான அவருக்கு, சர்க்கரை குறையும் போது இப்படி மயக்கம் வருவது எனக்கு நன்றாகத் தெரியும்.

“பகல் சாப்பிடல்லையா...?” அவரது சாப்பாட்டுப் பெட்டியைத் திறந்து பார்த்துவிட்டுக் கேட்கிறேன்.

“கொஞ்சம் பிசியா இருந்தேன்...” அவர் புன்னகைக்க முயன்று தோற்றுப் போகிறார். சமைத்து வைத்திருந்த உணவை மைக்ரோவேவில் சுடவைத்து அவருக்குப் பரிமாறி முடிக்கையில், எனது கைத்தொலைபேசி சிணுங்கி, மாலை

வகுப்பு ஆரம்பமாவதை நினைவு படுத்தியது.

களைப்பை மறைப்பதற்கு முகம், கை கால் கழுவி, கம்ப்யூட்டர் முன்பு உட்காரும்போது ‘ஸ்ஊம்’ வகுப்புக்கு நேரம் சரியாக இருந்தது...

வகுப்பு நடாத்தும் போது, ஊரிலிருந்து தூரத்து உறவுக்காரர் ஒருவர் தொலைபேசியில் அழைக்க, அதை நான் துண்டித்து விட்டேன். மீண்டும் மீண்டும் அவர் அழைப்பெடுத்து தொந்தரவு செய்தபோது, தொலைபேசியை மூடி ஓரமாக வைத்து விட்டு, வகுப்பைத் தொடர்கிறேன்.

வகுப்பு முடிந்ததும் உறவுக்காரரிடம் திட்டு வாங்குவதற்கு என் மனம் தன்னைத் தானே தயார் படுத்திக்க கொண்டது... !

**(முற்றும்)**

## மனிதம் பற்றிய உளவியல் தகவல்கள்

1. ஏழாண்டுகளுக்கு மேலாக நீடிக்கும் நட்பு வாழ்நாள் முழுதும் நீடிக்குமாம்.

2. அடிக்கடி ஒருவர் நினைவு வந்து கொண்டிருந்தால் அவரும் உங்களை நினைத்துக் கொண்டிருக்கிறாராம்.

3. எல்லாவற்றுக்கும் எரிச்சல் படுகிறீர்கள் என்றால் யாரையோ “மிஸ்“ பண்றீங்களாம்.

4. குழுவாக அமர்ந்திருக்கையில் யாராவது ஜோக் சொன்னால் வாய்விட்டு சிரித்துக்கொண்டே யாரைப் பார்க்கிறீர்களோ, அவர்தான் உங்களுக்கு ரொம்ப பிடித்தவராவார்.

5. நாளொன்றுக்கு நான்கைந்து பாடல்களை யாவது கேட்பவர்களுக்கு நினைவாற்றல் கூடும், நோய் எதிர்ப்பு சக்தி வளருமாம், மன அழுத்தத்துக்கான வாய்ப்பு 80 சதவீதம் குறையுமாம்.

6. உங்கள் மனதை யாராவது காயப் படுத்திருந்தால், அவரை மன்னிப்பதற்கு உங்கள் மூளை சராசரியாக ஆறு முதல் எட்டு மாதங்கள் அவகாசம் எடுத்துக்கொள்ளுமாம்.

7. சர்ச்சைக்குரிய விஷயங்களில் கருத்து சொல்லாமல் விடுபவர்கள், பயந்தவர்கள் இல்லையாம், புத்திசாலிகளாம்.

8. மிக விரைவில் ஏமாற்றத்தை சந்திப்பவர்கள், யாரையுமே நம்பாதவர்கள் தானாம்.

9.முன்னாள் காதலர்கள் இருவர் நண்பர்களாக மட்டுமே இருந்தால் - ஒன்று, அவர்களுக்குள் காதல் இருக்கிறது. இல்லையேல், அவர்கள் ஒருபோதும் காதலிக்கவே இல்லை.

10. இது கொஞ்சம் சங்கடமான விஷயம் - யார் அதிகம் உபதேசம் செய்கிறார்களோ, அவர்கள்தான் அதிகமான பிரச்சினைகளில் இருக்கிறார்களாம்.

11. ஒருவர் ஒரு விடயத்தை செய்யவில்லை என்று அதிக முறைக்கூறி விவாதிப்பவரானால் அதை அவர் செய்திருக்கலாம் என்று உளவியல் கூறுகிறது.

12. ஒருவர் அதிகமாக விரல் நகம் கடிப்பவராக இருந்தால் அவர் பதற்ற நிலையில் உள்ளவராவார் (ஆரம்ப உளவியல் பிரச்சினைக்கு உள்ளாக போகின்றார்) என்று அர்த்தம்.

13.ஒருவருக்கு கோபம் அதிகமாக வருமானால் அவர் பதற்றமாக இருக்கிறார் என கருதமுடியும். அவர் அந்த பதற்றத்தினை குறைத்துக்கொள்ள வேண்டும்.

14. ஒருவர் அதிகாலையில் எழும்புபவராக இருந்தால் அவருக்கு பல்வேறுப்பட்ட ஆரோக்கியமான விடயங்களும், வாழ்க்கையில் வெற்றி பெறக்கூடிய விடயங்களும் காத்திருக்கும்.

15. ஒருவர் பகலில் உறங்கி இரவில் விழித்திருப்பவராக இருந்தால் இவ்வாறானவர்களுக்கு இதய நோய் வருவதற்கான வாய்ப்பு அதிகமாக இருக்கும்.


16. ஒருவர் அடிக்கடி Mobile phone யை பார்த்துக் கொண்டிருப்பது or Mobile சத்தம் (Notification tones) கேட்டால் உடனடியாக அதை பார்க்க வேண்டும் என்ற எண்ணம் இருக்குமானால் அவர் உளவியல் ரீதியாக பாதிக்கப்படிருக்கின்றார். என்று அர்த்தம்.

17. ஒரு மனிதன் ஆகக்குறைந்தது 6 மணித்தியாலங்கள் ஆழ்நிலையில் உறங்க வேண்டும். (எந்த ஒரு ஓசைக்கும் எழும்பாத ஆழ்நிலை தூக்கம்) இவ்வாறு தூங்குபவரானால் இவருடைய பல்வேறுப்பட்ட உடல், உளவியல் சார்ந்த நோய்கள் வராது.

18. ஒருவர் அதிகமாக Negative Thoughts (முடியாது/கிடைக்காது/இயலாது) என்று கதைப்பவராக இருந்தால் அவர் வாழ்க்கையில் பல்வேறுப்பட்ட ஆசைகள் நிறைவேறாமல் வாழ்ந்து இருப்பார். இவர்களே அதிகம் Negative Thoughts கதைப்பவராக இருப்பார். **(நன்றி: உளவியல் பிரிவு Amazon Campus உயர் கல்வி நிறுவனம், பம்பலப்பிட்டி) - இணையத்திலிருந்து**

# ஆயிரம் காலத்துப் பயிர்

## (சிந்தனைப் பக்கம்)



கவிஞர் ஜனதாலத்தீப்

இரு வேறு குடும்பங்களைச் சேர்ந்த ஒரு ஆணையும் பெண்ணையும் திருமணம் என்ற பந்தத்தின் கீழ் ஒன்றிணைத்து ஒரு குடும்பமாக வாழவப்பதையே இல்லறம் என்கிறோம்.

ஆனால் ஒரு தாய் தகப்பனுக்குப் பிறந்த பிள்ளைகளான போதும் ஒவ்வொருவரும் வெவ்வேறுபட்ட குணாதிசயங்களயும், சுபாவங்களையும், நடவடிக்கைகளையும், பல்வேறுபட்ட கருத்து வேறுபாடுகளையும் கொண்டவர்களாக இருக்கும்போது வெவ்வேறு குடும்பங்களைச்சேர்ந்த இருவர் இணைந்து வாழ்வதென்பது மிகவும் கடினமானது என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

ஒவ்வொரு குடும்பத்திற்கும் வெவ்வேறு வாழ்க்கை நடைமுறை பழக்க வழக்கங்கள் இருக்கும். இரு வேறுபட்ட வாழ்க்கை நடைமுறைகளைக் கொண்ட குடும்பங் களைச் சேர்ந்த ஒரு ஆணையும் பெண்ணையும் ஒன்று சேர்த்து வாழவைக்கும்போது சில கருத்து வேறுபாடுகளினால் பிரச்சினைகள் ஏற்பட்டு விவாகரத்தில் முடிவதைக்கூடக் காண்கின்றோம்.

ஆண் பிள்ளைகளைப் பெற்று வளர்க்கும் பெற்றோர்கள் தெரிந்துகொள்ள வேண்டியது தனது மகன், ஒரு பெண் பிள்ளையின் கணவன், அவனை நல்ல முறையில் வளர்த்து காலம் நேரம் வரும்போது அவனது மனைவியிடம் ஒப்படைத்து, அவனை தன் மனையுடன் மகிழ்ச்சியாக வாழ வைக்க வேண்டும் என்பதைக் குறிக்கோளாகக் கொண்டு அதற்கேற்ற வகையில் அவனை வளர்த்து ஒப்படைக்க வேண்டும்.

அதே போன்று பெண்பிள்ளையின் பெற்றோர்களும் தனது மகள் ஒரு ஆண்பிள்ளையின் மனைவி, அவள் எதிர்காலத்தில் தனது கணவனுடன் கண்கலங்காமல் வாழ வேண்டும் என்பதை மனதில் கொண்டு அதற்குத் தகுந்த முறையில் வளர்க்க வேண்டும்.

சொத்துக்களிலோ, காசு பணத்திலோ அல்லது அழகிலோ, ஆடம்பரத்திலோ குடும்ப வாழ்வின் மகிழ்ச்சி கிடைப்பதில்லை. கணவனுக்கு மனைவியும், மனைவிக்குக் கணவனும் ஒருத்தருக் கொருத்தர் ஆடையாக வாழும் போதுதான் இல்லறதில் உண்மையான சந்தோசத்தைக் காணமுடியும்.

நான்கு பேர்களுக்கு மத்தியில் கணவனும் மனைவியும் ஒருவரையொருவர் குறைகள் கூறுவார்களானால் உண்மையில் அவர்கள் இன்னும் உள்ளத்தால் இணையவில்லை என்பதே பொருளாகும்.

கணவன் சொல்வதை மனைவி ஏற்றுக்கொள்ள வேண்டும், அதேபோல் மனைவி சொல்லும் ஆலோசனைகளை கணவன் ஏற்றுக் கொள்ள வேண்டும், ஏனென்றால் இருவரும் சேர்ந்துதான் ஒரு முழுமையான குடும்பம் என்பதை இந்த உலகமே ஏற்றுக்கொண்டுள்ளது.

கணவனுடைய விலா என்பிலிருந்துதான் மனைவி படைக்கப்பட்டாள் என்பதால் கணவனின் ஒரு பகுதியே மனைவியாகும். கொள்கையளவில் பொருத்தங்கள் இருந்தாலும் கூட குடும்பங்களின் வேறுபட்ட நடைமுறைகள் காரணமாக முரண்பாடுகள் ஏற்பட்டு அது மணவாழ்வின் சந்தோசத்தின் எதிரியாக இருப்பதைப் பார்க்கிறோம்.

நாங்கள் திருமணம் செய்து கொள்ளவில்லை என்றால் உயிரைவிட்டு விடுவோம் என்னுமளவுக்கு பதிமூன்று வருடங்கள் மிக ஆழமாகக் காதலித்துத் திருமணம் செய்து கொண்டவர்கள்கூட குடும்ப நடைமுறைகளில் முரண்பட்டு மூன்றே மூன்று மாதங்களில் விவாகரத்துப் பெற்று பிரிந்ததெல்லாம் மணவாழ்க்கையில் இடம்பெற்ற சோகச் சரித்திரங்கள். பெற்றோர்கள் தனது பிள்ளைகளை இல்லறவாழ்வில் இணைத்துவிடும் வரை கணவனோடு மனைவியும், மனைவியோடு கணவனும் எவ்வாறு வாழ வேண்டும் என்பதை அவர்களுக்கு விழிப்புணர்வூட்டி வளர்ப்பார்களேயானால் ஆயிரம் காலத்துப் பயிர் அழிந்திடாமல் வாழும் என்பதில் எந்தவித சந்தேகமுமில்லை.

## Self Disciplince – சுய ஒழுக்கம்

உங்கள் குழந்தைகள் வாழ்க்கையை ஜெயிப்பதற்கு நீங்கள் கற்றுக்கொடுக்க வேண்டிய ஒரு பழக்கம் சுய ஒழுக்கம். சுய ஒழுக்கம் என்பது என்னவென்றால் பிடித்திருக்கிறதோ, பிடிக்கவில்லையோ செய்ய வேண்டிய வேலையை செய்ய வேண்டிய நேரத்தில் செய்வதுதான் சுய ஒழுக்கம்.

மழையடித்தாலும் சரி புயல் அடித்தாலும் சரி காலையில் 6 மணியானால் குளிக்கும் பழக்கத்தில் உங்கள் பிள்ளை இருந்தால் அதுக்குப் பெயர்தான் சுய ஒழுக்கம். கையை கழுவி விட்டுதான் சாப்பிடணும் என்று நீங்கள் சொன்னால் அதுக்கு பெயர் ஒழுக்கம் அதுவே அந்த பிள்ளையாக கையை கழுவி விட்டு சாப்பிட உட்கார்ந்தால் அதற்கு பெயர்தான் சுய ஒழுக்கம்.

சுய ஒழுக்கம் என்பது தானாக வராது. நீங்கள்தான் வளர்த்தெடுக்க வேண்டும். வியாழன் மாலையானால் நீங்கள் நகம் வெட்டுவதைப் பார்த்தால், வாரம் ஒரு முறை முகச் சவரம் செய்வதைப் பார்த்தால், மாதம் ஒரு முறை நீங்கள் முடி வெட்டுவதைப் பார்த்தால் இதே போல; discipline ஆக இருக்கணும் என்ற Self Discipline habit (சுய ஒழுக்கப் பண்பு ) உங்கள் குழந்தைக்கும் வந்துவிடும். இப்படி ஒரு நல்ல பண்பு போதும் உங்கள் குழந்தைகள் உலகை வெல்வதற்கு.

## புதுக்குடியிருப்பு அலெக்ஸ்பரந்தாமனின் குறும்பாக்கள்

வேலிதாண்டிப் போனதொரு ஆடு
விறகடி விழுந்ததாலது சாவு
சோலிபல உருவாகி
சொந்தமங்கு பகையாகி
தாலிசில அறுந்தனவே பாரு.

சோற்றுக்குள் கிடந்தது முடி
சொர்ணத்துக்கு விழுந்தது அடி
நேற்றைக்கும் இதுபோன்று
நெடுநாளா நடக்குதென்று
தூற்றியபடி கணவனெடுத்தான் தடி.

வேட்பாளர் முகத்தினில் சிரிப்பு
வீதியெங்கும் நிகழ்கிறது நடிப்பு
கூட்டாகப் பலர்வந்து
கும்பிட்டு நின்றபோது...
வீட்டிலங்கு இருந்தவர்கோ கடுப்பு.

மழையில்லை நிலமோ பாளம்
மாரியும் இல்லையிப்போ சோகம்
கழைநெல் அனைத்தும்
கருகி யழிந்தபின்
உழைப்பவர்க் கேதடாவிவ் வுலகம்?

பாலிலே கலந்தானவன் தண்ணி
பரிகசிப்பான் பசுவைக்குறை சொல்லி
சோலியில்லாச் சுகமென்றே
சுதந்திரமாய்ச் செய்ததொழில்
காலியாகிக் கலைந்ததுவே அருகி.

# அருட்கவி அக்கரையூர் அப்துல் குத்தூஸின் 02 குத்தூசிகள்

## ஒழுங்கற்ற உயர்திணை

வீட்டுக் கழிவு நீரை
வீதிக்கு கடத்துவது
மனசாட்சி இல்லாத
மனிதர்களின் செயற்பாடு

மற்றவன் உரிமையில்
மண்ணையள்ளிப் போட்டுவிட்டு
கற்றவன் போல் ஊராரின்
கண் முன்னே திரிகிறார்கள்

குளியலறை அழுக்கு நீரை
குழி தோண்டி அகற்றாமல்
நடைபாதைக் கனுப்புவது
நாகரிக செயலா என்ன?

அழுக்காடை துவைத்து வரும்
அசுத்தத்தை வடிய விடல்
இழுக்கான வேலையென்று
இவர்களுக்கேன் விளங்கவில்லை?


துர் நாற்றம் வீசுகின்ற
துவைத்த சலவை நீரை
தெருவுக்கு அனுப்பி விட்டு
திருப்தி காணல் நியாயம்தானா?

காட்டு வாழ் வேடர்களும்
கண் திறந்த காலம் இதில்
வீட்டு வாழ் மூடர்களின்
விழி திறக்க வில்லை ஏனோ?

நெஞ்சில் கசிவின்றி
நீர் கசிய விடுவதற்கு
கொஞ்சமும் தான் இவர்களுக்கு
கூச்சம் ஏன் வருவதில்லை?

பஞ்சமா பாதகம் தான்
பாவிகள் செயல் என்றில்லை
நஞ்சுதான் நடுத் தெருவில்
நாற்ற நீரை ஓட்டுவதும்

நோன்பெதிரே வருகிறது
நுணுக்கமுடன் அனுசரித்து
மாண்புடனே வாழ்வதற்கு
மனதில் உறுதி கொள்வோம்!



## தினந்தோறும் தீட்டு

முன்வீதி வீட்டுக்கு
முப்பது நாளும் தீட்டு
மூக்கில் அது வைக்கிறது
துர்நாற்ற வேட்டு

போகவர விடாமல்
போட்டிருக்கிறது பூட்டு
பாதத்தை நிலத்தில்
பதிக்கக் கணகாட்டு

கழிவுகள் நாள் தோறும்
கசிந்த வண்ணம் தானிருக்கும்
இழிவிதனைக் காணுகையில்
ஏளனத்தால் மனம் சுழிக்கும்

நாளாந்தம் வீதியிது
நனைந்தவாறு தானிருக்கும்
பாதசாரி எல்லோர்க்கும்
படம்காட்டிக் கொண்டிருக்கும்

வெட்கமின்றி வீதி
விநோதங்கள் காட்டும்
துக்கமிது நிற்காமல்
தொடர்ந்து சலிப்பூட்டும்

ஆம்
வீதியைக் கழிவு
விழுங்கிக் கொண்டிருக்கிறது
பாவம் வீதி
பேதிக்கு குடித்தவனின்
பின்புறம் போல் தெரிகிறது

பாதையில் சுத்தமாக
பயணிக்க மன வெறுப்பு
பாதத்தை முழுமையாய்
பதிப்பதற்கு அருவருப்பு

பார்த்தான பின்னும்சிலர்
இருபது இருபதை
பாவிக்கவில்லை ஏனோ
தலைக்குள் இருப்பதை

மாநகர ஆட்சியர்க்கு
மனுப் போட வைக்காமல்
பேரவலம் தீர்த்து வைத்தால்
பெருமகிழ்ச்சி எல்லோர்க்கும்



# மாண்புக்கு பெயர் மாதர் குலம்

(அறுசீர் விருத்தம் - மா மா காய்)

(1)

கூட்டில் வாழும் புள்ளினத்தில்
கூட்டுப் புணர்ச்சி கிடையாது
காட்டில் வாழும் விலங்கினத்தில்
காணத் தகுமோ வன்புணர்வு
கூட்டுப் புழுவாய் பெண்டிரையே
குறைத்து என்றும் எண்ணாதீர்
கேட்டுக் கொள்வீர் மானிடரே
கேலி இனியும் செய்யாதீர்.

(2)

அடுப்பை ஊதும் பெண்களுக்கு
அறவே வேண்டாம் பெண்கல்வி
எடுத்துக் கூறிய பெரியோர்கள்
எங்கோ மறைந்து போனாரே
கடுப்பை என்றும் காட்டாது
கருணை கொள்வோம் அவரிடத்தில்
துடுப்பைத் தேடும் படகாக
துணையாய் வேண்டும் பெண்குலமே !.

(3)

குடும்பம் தன்னைக் காத்திடுவாள்
குலத்தைக் காக்கும் தெய்வம்போல்
இடும்பைக் கண்டு அஞ்சாமல்
எதிர்த்து நீச்சல் போட்டிடுவாள்
உடும்பைப் போன்றே உள்ளத்தில்
உறுதி கொண்டு வாழ்ந்திடுவாள்
கொடுமை பலவும் தாங்கிடுவாள்
கொஞ்சும் மழலை வளர்ந்திடவே !.

(4)

எண்ணம் தன்னில் அனுதினமும்
எளிமை கொண்டு வாழ்ந்திவீர்
பெண்ணின் மகிமை பாடாது
பெருமை வந்து சேராது
மண்ணில் வாழும் மானிடரே
மங்கை குலத்தைக் காத்திடுவீர்
கண்ணைக் காக்கும் இமைபோல
கருத்தாய்ப் பெண்ணைக் காப்போமே...


(5)

வீட்டில் வேலை செய்தவர்கள்
விண்ணில் பறந்து செல்கின்றார்
ஏட்டுக் கல்வி கற்றதனால்
ஏற்றம் பலவும் பெற்றார்கள்
நாட்டில் நிலவும் வன்முறைகள்
நாளும் குறைய வழிவகுப்போம்
பாட்டில் மட்டும் பாடாமல்
பாங்காய் வாழ்வில் போற்றிடுவோம்.

**தமிழ்ப்புதல்வன்**
**கத.யேசுசகாயம்**
**கிரான் – மட்டக்களப்பு**

பொத்துவில்
# அகமது ஃபைசல் கவிதைகள்.





1.
கிளையில் வரிசையாய் நிற்கும்
மூன்றாவது இலைக்கு
என்ன மனவருத்தமோ!
ஆறாவது இலைக்கு
அடுத்த இலையும் அப்படித்தான்.
யாருமே குடிவராத வீட்டு வாசலில்
காலையில் வந்து நிற்கும்
சூரிய வெளிச்சம்போல் மாறியிருக்கு.
மனதுக்கும்
வருத்தத்திற்குமான இடைவெளியில்
மூன்று இலைகள்தான்
துளிர்த்து நிற்கிறதோ!

2.
நீரில் எப்படி நீர் மூழ்கும்?
இலைகளில் எப்படி நிறம் மிதக்கும்?
இருளில் எப்படி இருள் புதையும்?
காற்றில் எப்படி காற்று நழுவும்?
கண்கள் எப்படி காட்சிகளைச் சுமக்கும்?
முதல் நடையில்
குழந்தையின் பாதங்கள்
எப்படி பாதையை வரையும்?
உயரத்தில் எப்படி
தாழ்வு தொங்கிக்கொண்டிருக்கும்?
வார்த்தைகள் எப்படி
எழுத்துகளை அணிவகுக்கும்?
பல்லியின் வயிற்றுக்குள்
முட்டை ஏன் ஒளிந்திருப்பதில்லை?

என்ற கேள்விக் குறிகளுக்குப் பின்னால்
வசிப்பதற்கு நிறையவே இடமிருக்கிறது.

3.
காற்று
இலைகளுக்கு பேசக் கற்றுக் கொடுக்கும்போது
ஓர் ஊமைச் சிறுமி
தன் சுட்டுவிரலால் அந்தரத்தில்
எழுதக் கற்றுக்கொடுக்கின்றாள்.

4.
அவள்
கண்ணாடிக்கு முத்தமிட வருகிறாள் என்று
தலை வாரிக்கொண்டு நின்ற நான்
சற்று விலகி நின்றேன்.

அவள் திருமணத்திற்குப் பின்
மறுநாள் தெரிய வந்தது
அவள் என்னைத்தான்
முத்தமிட வந்தாள் என்பது.

5.
தாளின் வெற்றுப் பக்கத்தில்
முறையாக உறங்கலாம்
அங்குதான் யாருமில்லை
அங்குதான்
எந்த இரைச்சலுமில்லை.
யாரோ ஒரு சிறுமி
சூரியனை முதன் முதலாக
வரைந்து பார்க்கும் வரை,
அந்த வெற்றுப் பக்கத்தில்
முறையாக உறங்கலாம்.

6.
தகரக் கூரையில் விழும் மழைத்துளிகளின் வலி
காதுகளில் பின்னிய குளிர் வலையில்
சிக்கிக்கொண்டது.

மழையைவிட துளிகளுக்கு எவ்வளவு பெரிய வாய்.
மழையைவிட துளிகளுக்கு எவ்வளவு பெரிய கதறல்.
மழையைவிட துளிகள் எவ்வளவு பெரிய மழை.

மழையைவிட துளிகள்
கீழே விழும்போது
ஒரு சிறு பிள்ளையின் குரல்
பின்னால் வந்து தடுத்திருக்கலாம்.

# திரிபோஷா




திக்குவல்லை கமால்

பிள்ளையைக் கழுவித் துடைத்து பேபி ஜட்டங்களால் மணமூட்டினாள் மஸீதா பேகம். அந்த ஆண் சிங்கக் குட்டிக்கு ஒரு வருடமும் இரண்டு மாதங்களாகிவிட்டன. இரண்டு பெண்பிள்ளைகளுக்குப் பின் கண்ணே பொன்னே என்று வந்தவன்.

அவன் கண்கள் பளபளக்கச் சிரித்தபோது மீண்டும் ஒருமுறை அள்ளிக் கொஞ்சினாள் அவள். இப்படி அவனை உடுத்தி அழகுபடுத்துவதெல்லாம் அவனைத் தூக்கிச் சென்று ஒரு சுற்றுச் சுற்றிவரத்தான்.

“பர்ஸானா இன்னம் வரல்லயே” என்று அடிக்கடி ஜன்னலுக்கூடாக மலைப் பக்கமாகப் பார்த்துக் கொண்டாள்.

கிராம சேவகர் வட்டார A பிரிவு குழந்தைகளின் பாரம் நிறுக்கும் நாள் இன்றுதான். பெரிய கெடுபிடி இல்லாவிட்டாலும் ஒன்பது மணிக்குமுன் போவது நல்லது. பால் போத்தல், தண்ணீர்ப் போத்தல் உள்ளிட்ட கைப்பையையும் தயார்ப்படுத்திக் கொண்டாள்.

“மஸீதா மஸீதா” வெளியே பர்ஸானாவின் குரல் கேட்டது.

“உள்ளுக்கு வாடீ இன்னம் டைமீக்கி” அவள் மணக்க மணக்க வந்து புகுந்தாள். இனியில்லை என்ற அளவுக்கு மகனை அழகுபடுத்தியிருந்தாள். அவளது முதல் குழந்தை அல்லவா. கண்ணூறுபடாமல் வலக் கன்னத்தில் கரும்புள்ளியொன்று வேறு குத்தியிருந்தாள்.

“டேய் எங்கியன் பொகப் போற...ம்.. தொப்பியெல்லாம் போட்டுக் கொண்டு.... சிரிக்கிய சிரிக்கிய... ம்... வாப்பவேதான்”

“மெய்தான் மெய்தான் காணியவங்க எல்லாருமே செல்லிய. எங்கட குடும்பத்தட நாமநாத்தமாவது இல்ல. காட எடுத்துக்கொண்டோ...?”

“ஓ ஓ ஆட்டா ஒன்டில போமா?”பர்ஸானா கேட்டாள்.

“கிட்டத்தானே பேசிப்பேசி நடந்துபோம். ஓரடீல பெய்த்தேலும்”

இருவரும் வெளிக்கிட்டு மரைக்கார் வளவு ரோட்டால் நடந்தனர். குழந்தை அபிவிருத்தி நிலையத்திற்குப் போய்ச் சேர பத்து நிமிடத்திற்கு மேல் எடுக்காது. இன்னும் சிலரும் முன்னே முன்னே நடந்து கொண்டிருப்பது தெரிந்தது.

“நானென்டா தாரத்துக்காக எடுக்கிய. இவன் வாயிலயாலும் வெக்கியல்ல கையால தட்டுடுகிய துப்பிய. செரியான கொழுப்பக்காரன். மூத்தது ரெண்டும் அந்தக் காலத்தில இவனப் போல தின்னல்ல. பெருத்தாப் பொறகு தின்னிய. சும்ம தாரத்த அதியாலும் தென்னட்டே?

“ஓ... சின்ன புள்ளயளுக்கென்டே சரி பண்ணியதாமேன். இவனெண்டா தின்னிய. பகேட்டில போட்டீக்கிய மாதிரி ஒவ்வொரு நாளும் கணக்கா குடுத்தா. அந்த பேட்டாகச் செல்லே மூடித. தின்னியென்டு மிச்சம் குடுக்கேம் ஏலவேன்” பெருமைத் தனம் கலக்காமல் பர்ஸானா இயல்பாகப் பேசினாள்.

“செலவங்க வித்துச் சல்லியெடுக்கிய நபுஸு”

“அந்த சுல்லிபாருக்கென்டு ஒத்தனீக்கே அவனுக்கு வேல இதுதான். எப்பெப்ப குடுக்கியென்டெல்லாம் அவனுக்குத் தெரீம். இன்டக்கி அந்தி படச் செல்லே ஊடூடாப் பெய்த்து சேத்துவான். இதேம் யாவாரமாக்கிக் கொண்டு”

பேசிப் பேசியே இருவரும் உரிய இடத்தை நெருங்கிவிட்டார்கள். வேப்பமரத்தடியில் வந்தவர்கள் கூடி நின்று வருபவர்களை வரவேற்றனர்.

“அஸ்ஸலா மலைக்கும்” என்றவாறு இருவரும் முற்றத்திற்கேறினர்.

ஒரு காலத்தில் புத்தகப் பைகளைச் சுமந்தபடி பாடசாலை வளாகத்துள் புகுந்ததும் பெல்லடிக்கும் வரை கலகலத்தார்கள். இப்பொழுது பிள்ளைகளைக் கையிலோ வயிற்றிலோ சுமந்தபடி ஒன்று கூடும் இடமாக இது அமைந்துவிட்டது. பெரும்பாலும் ஒரே வகுப்பில் அல்லது ஒரு வருடம் முன் பின்னாகப் படித்தவர்தான் அவர்கள். அப்பொழுதெல்லாம் நிறையக் கனவுகளை அவர்கள் கண்டார்கள்தான். இப்படிப் பிள்ளைகளைச் சுமந்து திரியும் கனவுகளைக் கண்டார்களோ என்னவோ!

நிகழ்ச்சி நிரல் ஆரம்பிக்க இன்னும் ஐந்தோ பத்தோ நிமிடங்கள்தான் இருந்தன.

■■■

வந்த ஒழுங்கில் அட்டைகளை அடுக்கி வைத்திருந்த லீலாவதி மிட்வை.்.ப், பெயர் கூறி அழைக்கும்போது பிள்ளையோடு தாய் வரவேண்டுமென்பதே அவரது ஒழுங்கு. ஆனாலும் கொஞ்சம் அடிபிடிப்படாவிட்டால் இவர்ளுக்கு பத்தியமில்லையே.

“அஸ்மினா ராஸிக்”

அவள் பிள்ளையோடு நிறுவைத் தட்டருகே வந்தாள். நிறுவை உதவியாளர் நுணுக்கமாகப் பார்த்து நிறையைச் சொன்னாள்.

லீலாவதி மிட்வை.்.ப் அதனை ஒரு படிவத்திலும், குழந்தையின் சுகாதார வளர்ச்சிப் பதிவட்டையில் காணப்படும் வயது, நிறை வரைபடத்திலும் பதிந்து கொண்டாள்.

.்.பாத்திமா அஸ்மினா, பிந்தி ஹசமியா, சப்ரினா சப்ரி… இப்படி பெயர்கள் தொடர்ந்தன.

நிறுவை அலுவல் முடிந்ததும் ஒரு தொகுப்புரை நடக்கும். அதுவரை விட்ட கதைகளை ஆரம்பித்துவிடுவார்கள். இதை விட்டால் இப்படிக் கூடுவதற்கு வேறு வாய்ப்பில்லை என்பதை அவர்கள் நன்கு விளங்கியிருந்தனர்.

“சரி எல்லாரும் வாங்கொ”

எல்லோரும் உள்ளே வந்து அந்த சிறிய மண்டபத்தில் அமர்ந்து கொண்டனர். இன்று என்ன சொல்லப் போகிறாள் என்பதே எல்லோரது எதிர்பார்ப்பாக இருந்தது.

“இன்றைக்கு உங்கட வட்டாரத்திலிருந்து மூன்று பேர் வரல்ல. என்ன காரணமோ தெரியல்ல. ஒவ்வொரு முறையும் இப்படி ரெண்டு மூனுபேர் வராமல் விடுவார்கள்தான். இரண்டொருமுறை தொடர்ந்து வராமல் விட்டால் அது அவங்க தங்க பிள்ளைங்களுக்குச் செய்யும் துரோகம்”

இன்று வராதவர்கள் யார் யாரென்று அநேகமாக அங்கிருந்த எல்லோருக்கும் தெரிந்திருந்தபோதும் காரணம்தான் தெரியவில்லை.

“சில பிள்ளைகளின்ற பாரம் குறஞ்சிருக்கு. ஐந்து பேரட கூடியிருக்கு. பெரும்பாலும் மட்டுமட்டாத்தான் இருக்கு. உங்க பிள்ளைங்கட விஷயத்தில கவனமா இருங்கோ. நீங்க எவ்வளவுதான் செலவழித்தாலும் திரிபோஷா போல் போஷாக்கான உணவு கிடைக்காது”

“இதை ஒரு பக்கமாக வைத்துவிட்டு இரண்டு மூவாயிரம் செலவில் மாவாங்கிக் கொடுங்க.” ஒன்றும் பேசாமல் “ம்” மென்று நின்றனர்.

“சிலபேர் திரிபோஷவ விற்று காசெடுக்கிறதா கேள்விப்படுறோம். அது ஹலாலான பணமல்ல. ஹறாம். இன்னும் சிலபேர் போல பிடித்துப் பிடித்து நல்லா தின்றிட்டு பிளேன்ரீ குடிக்கிறாங்களாம். அது உங்களுக்கான ஹலால் இல்ல ஹறாம்தான். இது குழந்தைகளுக்கு மட்டுமே ஹலால். துஷ்பிரயோகம் செய்து பாவத்த தேடிக் கொள்ளாதீங்க.”

எல்லோரும் கப்சிப்பாக நின்றனர். பின்னர் முகத்தை முகம் பார்த்துக் கொண்டனர். லீலாவதி மிஸ் ஹலால் - ஹறாம் பேசுவது எல்லோருக்கும் வியப்பாகவே இருந்தது. பலரின் மனங்களை அந்த வார்த்தை சுட்டுவிட்டனவென்றால் அதில் தப்பில்லை.

“சரி நாப்பத்தொரு பேருக்கும் ஆளுக்கொரு பேக்கு இங்க இருக்கு. ஆளுக்கு ஒன்றா எடுத்துக் கொண்டு அறைக்கு வாங்க காட்தர” என்றவாறு எழுந்த லீலாவதி நேர் மறுக்கமாகத் திரும்பினார்.

அதற்கிடையில் வாங்கு அங்குமிங்குமாகத் தள்ளப்படும் சத்தமும் ஹோஹோவென்ற இரைச்சலும் தொடங்கிவிட்டது. “அடீ பாத்தும்மா எனக்கு இரண்டெடுத்துக்கோ” என்று கரகரத்த குரலும் எழுந்தது.

லீலாவதி மீண்டும் திரும்பினாள்.

“எல்லோருக்கும் இருக்கென்று தானே சொன்னன். ஏன் இப்பிடி அடிபிடிப்படுறீங்க. எவளவு சொன்னாலும் அவளவுதானா…?” கோபத்தோடு திரும்பி தனதறைக்குச் சென்றாள்.

லீலாவதியின் உதவிப்பெண் மேசையருகே நெருங்கி ஆளுக்கு ஒன்றாகக் கொடுக்க முனைந்தாள். ஆனாலும் ஒன்றைத் தூக்கியதும் ஒன்பது கைகள் நீண்டன.

“அடி டக்கெண்டு வாவேடி காட்ட எடுத்துக் கொள” இன்னொரு குரல்.

இந்த களேபரத்தில் சிறு குழந்தைகளும் அழ ஆரம்பித்துவிட்டன.

■■■

குழந்தைகளை மட்டுமே சுமந்து கொண்டு வந்த தாய்மார்கள் கையோடு திரிபோஷா பக்கற்றுக்களும் சுமந்து கொண்டு அந்த ஆனந்தப் பெருமிதத்தில் நடை பயின்றனர்.

பாதிப்பேருக்கு தங்கள் குழந்தையின் நிறையில் ஏற்பட்டுள்ள சாதகபாதகங்களோ சொல்லப்பட்ட கலந்துரையாடலின் தாக்கமோ தெரியவில்லை. திரிபோஷா கிடைக்க வேண்டுமென்பதைத் தவிர வேறெந்த நோக்கமும் அவர்களுக்கில்லை.

“சிங்கள மிஸ்ஸாக ஈந்தாலும் ஜாதிபோல ஹராம் ஹலால் பேசின கேட்டோ. ஏங்கடூரில டசின் கணக்கிலீக்கிய ஆலிமாக்களுக்காலும் அப்படிப் பேசத் தெரியவேன். சென்னதெல்லாம் மெய்தான். நாங்க யோசின பண்ண வேண்டிய விஷயம்” ஃபிர்தௌசியா தனது கருத்தை வெளிப்படுத்தினாள்.

“நாசமாப் போனவனியள் டீவியல்ல தொண்டேத் தண்ணி வத்தங்காட்டீம் கொரோட்டுக் கொரோட்டு, இப்ப எல்லாருக்கும் எல்லா ஜாதீம் தெரீம்” அதற்கு அனுசரணை வழங்கினாள் ராஹிலா.

“எங்கட ஹக்க நாங்க என செஞ்சாலும் அவளுயளுக் கேத்தியன்” வகுப்பறையில் பின்வரிசையில் அமர்ந்திருந்த ஒருத்தியாக இருக்க வேணடும் அது.

“ஓங்கட ஹக்கல்ல ஓங்கட புள்ளேட ஹக்கு” சட்டென்று யாரென்று தெரியாத பதிலடிக் குரல்.

“ஓரத்துக்காகும்கடி ஓரத்துக்காகுங்கொ. ஓங்களியளட ரோட்டோ. காரு பஸ் போறல்லயா” ராஹிதாவின் கவனம் இன்னொரு பக்கமாக இருந்தது.

இத்தனைக்கும் மத்தியில் “அடி இப்ப ஒருபக்கேட்டு எவளவுக்கோ தெரிய எடுக்கிய…” மெல்ல காதுக்குள் வாய் வைத்தாப் போல நஜீமா கேட்டாள்.

“சுல்லி பாருக் எவளவு தாரோ அதுதான் வெல. எங்களுக்கு சும்மா கெடக்கியதுதானே. எவளவு தந்தா எனத்தியன்?” ஜெஸ்மினா அலட்சியமாகச் சொல்லிச் சிரித்தாள்.

எல்லோரும் எப்படியோ பாதித் தூரத்திற்கு மேல் கடந்துவிட்டார்கள்.

எதுவும் பேசாமல் எல்லாவற்றுக்கும் காது கொடுத்தபடிதான் மஸீதா பேகமும் பர்ஸானாவும் நடந்தவண்ணமிருந்தனர்.

அந்த அமைதியை கலைக்குமாப்போல “நான் மாமியக் கொஞ்சம் பாத்திட்டு வரோணும். அதுக்கென்டு வாரத்துக்கு கெடக்கியல்லயேன். மஸீதாம் வாரா?” என்று பர்ஸானா கேட்டாள்.

“நீங்கள் பெய்த்திட்டு வாங்க பர்ஸானா. சொணங்கீட்டே. புள்ளயள் ரெண்டுபேரும் பாத்துக் கொண்டு நிக்கியாயீக்கும்” என்றவாறு விடை பெற்றுக் கொண்டாள்.

திரிபோஷா விடயத்தில் சென்டரில் சொன்னபடி பர்ஸானாவின் நடவடிக்கை அமுலில் இருந்தது. பேகத்தின் நிலைப்பாடுதான் திண்டாட்டமாகவிருந்தது.

பள்ளிவாசலை நெருங்கி மரைக்கார் வளவுக்கு திரும்பி நடக்கும்போது அவளது கண்ணில் நிஸாமியாவின் வீடு தெரிந்தது. இன்று கிளினிக் வராதவர்களில் அவளும் ஒருத்தி. அந்த வீட்டுக்கு ஏறினாள் மஸீதா பேகம். கதவில் மெல்லத் தட்டினாள்.

“மஸீதாவா வாவா” என்றபடி வந்த அவளது முகத்தில் களைப்புத் தோய்ந்திருந்தது.

“எனத்தியன் இன்டக்கி வரல்ல?” கேள்வி எழுப்பினாள்.

“உம்மக்கு சொகமில்ல. இனி நான்தானே எல்லம் பாத்துக் கொள்ளோணும்”

“மெய்தான் மெய்தான்” என்றபடி திரிபோஷா பேக்கை நீட்டினாள்.

“ஆ... ஏன்ட பங்க கொணந்தா?”

அந்தக் கேள்விக்கு சரியான பதில் சொல்லாமல் “ம்” என்று சப்பி விழுங்கினாள் மஸீதா.

“சின்னவனுக்கு திரிபோஷா இல்லாமலேல. அவன் வெளணக்கும் கேக்கிய அந்திக்கும் கேக்கிய” ஜஸாகல்லா என்று பெருமிதப்பட்டாள்.

“பொறகு வாரனே. திரிபோஷா விடயத்தில் திடமானதொரு முடிவுக்கு வந்தவளாக அங்கிருந்து இறங்கினாள் மஸீதா

(முற்றும்)

# வினை முடியும் வாழைவரை...



உன் கூரிய அலகால்
என்னைத்துளையிட்டாய்...
துளையிட்ட பொந்தில்
நீ வசிக்க இடம் கொடுத்தேன்
நன்றியுபகாரமாய்
வேர்துளைத்து
வீழ்த்தியெனைப்போகிறாயா
மரங்கொத்தியே...???

பெரும் புயலுக்கும்
பேய்மழைக்கும்
என்னில் அடைக்கலம் கண்டாய்

என்னில் உதிர்ந்த சருகுகளுக்குள்ளும்
இறந்த என் கிளைகளுக்குள்
புளுக்கள் தேடி
ஜீவிதம் கொண்டாய்

என் கிளைகளில் அமர்ந்து
விலங்கிடப்பட்ட
உன் பாடலைப் பாடி மகிழ்தாய்

என் இலைளையும்
பூக்களையும் கிழித்து
முட்டையிட்டு இனம்பெருக
நீ மெத்தை அமைத்தாய்

என் கிளைகளை
வழிந்தோடும் எச்சங்களால்
வர்ணம் தீட்டிவைத்தாய்

வாழ இடம் கொடுத்தவனையே
வீழக் கொத்திவிட்டு
வீராப்பாய் பாடிப்பறக்கும்
மரங்கொத்தியே
தெரிந்துகொள்
நீ எத்தனை மரங்களை
கொத்திக் குடைந்து வாழ்ந்து
வீழ்த்திப் பறந்தாலும்
எந்த மரமும்
துரோகத்திற்காயும்
நன்றி மறத்தலுக்காயும்
வருந்துவதில்லை
இருந்தாலும் ஒரு வாழைமரத்தில்
உன் நீண்ட அலகு மாட்டிக்கொண்டு
காப்பாற்ற
யாருமற்ற தனிமையில் நீ சாகும் வரை
மாத்திரமே
இதுவெல்லாம்.

**அஸீஸ் எம் பாயிஸ்**

## அவள் அவன்

ஓடைக்குள் இறங்கும் காட்டாறு பெண்
யுகாந்திர ரகசியச்சொல் இடை இடையில் இல்லை
காட்டின் வழித்தடம் ரேகைகள்
தொண்டைக்குழிச் சுனை
வார்த்தைகள் சுழல்
பரிவர்த்தனை செய்யும் விழிகள் கூர்முனை
மினுங்கும் தோல் வரிப்புலிக்கோடுகள்
சிவந்த மாமிசத்துண்டு இதழ்கள்
நரம் சினம்
அறைந்து சாத்தப்படும் கதவுகள் காதுகள்
தேய்ந்து வளரும் பிறை முதுகுத்தண்டு
வளைந்து நிமிரும் சிலை அவள்
அவளின் மொத்த நரம்புகளுக்குள்
அகப்படாமல் ஓடும் புரவி வேகம் விதி
நுரையீரல் வரை இழுக்கும் புகையில்
ஏகப்பட்ட பெயர் பிழைகள்
கண்ணீர் கசிந்து காணாமல் போகும் காட்சிகள்
சலனமற்று உறைந்து போகும் சிந்தனை
வரலாற்றில் தேடப்படும் ஓர் அத்தியாயம்

ஓர் அந்தி
அவளுக்கு அவன்களின் அடையாளம்.



## நான் குப்பைக் கவிதை

நெகிழிக்கவிதைகள் நான்
தூக்கியெறியப்பட்டும் யுகம் யுகமாய்
மக்கிப்போகாமல்
ஆழ்கடல் மீன்களின் குடல்களுக்குள் ஒழிந்து
இரைப்பையின்
மூச்சுக்குழாய் மத்தியில் இளைப்பாறுகின்றேன்

தேர்வு மற்றும் தேர்தல் முடிவுத்தாள்கள்
கவிதை நான்
இருபுறமும் வயிறு புடைத்த
சாம்பல் நிற கழுதையின் கடவாய் பற்களில்
அரைபடுகின்றேன்

செயற்கை முறையில் பழுக்கவைக்கப்பட்ட
பழங்களின் கவிதை நான்
இதோ முந்நூறு கிலோமீட்டர் தொலைவில் தான்
மேட் இன் வாசிங்டன் இருக்கிறது என்று சொல்ல
திராணியற்று
உருக்குலைந்து கொண்டிருக்கிறேன்



எந்த கவர்ச்சியுமற்ற சாதாரண
பெண் கவிதை நான்
ஆயினும் பாதி எரித்து பாதி புதைத்து
இதோ மீதியை வெறிநாய்கள்
கடித்துக் குதறுகின்றன

மாடுகள் மற்றும் ஆடுகளின் உரித்த
தோல்க்கவிதைகள் நான்
உயர்ரக தோள்பட்டைகளில் பைகளாக
கால்களில் செருப்புகளாக கிடப்பதை தவிர்க்க
உப்புக்கற்களில் பதனிட மறுத்ததால்
இலகுவாக்கும் பொருட்டு நெருப்பில்
வாட்டப்படுகின்றேன்

அதிகாரவர்க்க நாடுகளின் எலக்ட்ரானிக்
கழிவுக் கவிதைகள் நாங்கள்
கப்பல்களால் புலம்பெயர்ந்து
மொழிப்பெயர்க்க மனமற்று
துறைமுக நிலங்களில் அணுக்கசிவுககளை
விதைத்துக்கொண்டிருக்கிறோம்

மக்கும் பச்சை குப்பைகளையும் மக்காத சிவப்பு
குப்பைகளையும்
ஒரே உறைக்குள் செலுத்தும்
பொறுப்பற்ற பிரக்ஞை
கவிதை நான்
ஏரிகள் முழுவதும்
இறைந்து கிடப்பதால் தாகமெடுக்கிறது
வழிப்போக்கன் கழிக்கும் சிறுநீர் பெருநீராகி
மிதக்கவைக்கிறது

ஆனால் புழுக்கள் அரித்து மண்ணோடு
மண்ணாகி
விளைந்துவரும் ஓர் அரிசியை
யார்வேண்டுமானாலும்
தின்று பசியாறிக்கொள்ளலாம்

மேலும் நீங்கள்
நான் வேறு
கவிதை வேறு
குப்பை வேறு
என்றும் திரித்து சொல்லலாம்

**பாலைவன லாந்தர் கவிதைகள்**

"டெல்யூரைட் இன்ஸைட்" என்ற தளத்தில் பிரசுமான அமெரிக்கக் கவிஞர் **ரோஸ்மெர்ரி வாஹ்டோலா ட்ரோம்மர்** எழுதிய பொருட்செறிவுள்ள ஆங்கிலக் கவிதை.
தமிழில்
**ஸ்ரீ என் ஸ்ரீவத்ஸா (Sri N Srivatsa),**
**நொய்டா, இந்தியா**

ஆனால், அதற்குப் பதிலாக நாம் நம்
கோப்பையில் அன்பையூற்றி நமது உதட்டினருகே
கொண்டுசென்று பருகுகிறோம்.

அன்பு மட்டுமே அர்த்தமுள்ளதாக
இருக்கிறவரையில் மீண்டும் பருகுகிறோம்.

அன்பு மட்டுமே கோப்பையை மீண்டும்
நிரப்புகிறது.

# இந்த உலகம்தன்வழியில் என்னை நடத்தும் நாளொன்றில்

# #On_a_Day_When_the_World Has_Its_Way_With_Me

ஒவ்வொரு நாள் மாதிரியே காதல் மட்டுமே
நம்மைக் காப்பாற்றுமென்று
இந்த நாளும் தெளிவாகிறது.

ஒரு பிரமாண்டமான, பொருள் விளங்காத
வழியிலல்ல! ஆனால்,
அச்சுறுத்தக்கூடிய
ஒரு குறிப்பிட்ட வழியில்.

இப்போது மன்னிப்பது போல திரும்ப
ஊசலாடுவதற்குப் பதிலாக நமது கையையே
பிடித்துக் கொண்டிருப்பதைத் தேர்ந்தெடுப்பது
போல,

நாம் வருந்தக்கூடிய ஒன்றைச் சொல்வதற்கு
முன்னதாக மூன்றுமுறை ஆழமாக
சுவாசிப்பதுபோல,

நம்முடைய வாழ்க்கைப் பாலையில் தாகித்துக்
கொண்டிருப்பதிலிருந்து அன்பு நம்மைக்
காப்பாற்றுகிறது,
ஆனால் நாம் அதை முதலில் தேர்ந்தெடுத்து
அதைக் காப்பாற்றினால் மட்டுமே.

இப்போது, கோபமான சொற்களின்
இந்தக் கணத்தில்,

இறுகப் பற்றிய எண்ணங்களின்
இந்தக் கணத்தில்,

நாம் விஷத்தையும் ருசிக்கக்கூடிய இந்தக்
கணத்தில்,



Like every day, this day
it is clear that only love
will save us. Not in the grandiose

abstract way, but in the alarmingly
specific way. As in forgiveness, now.
As in choosing to hold
our own hand instead

of swinging back. As in taking
three deep breaths before saying
something we regret. Love saves us


from thirsting in the desert of our lives,
but only if we save it first by
choosing it, now in this moment

of angry words, now in this moment
of clenched thoughts, now in
this moment when we'd rather

taste venom, but instead, we
pour love into our cup and
bring it to our lips and drink

and drink until once again
only love makes sense,
only love refills the cup.

**Rosemerry Wahtola Trommer**
[Published in Telluride Inside]



# நவீன நாஸ்திகத்தின் வரலாறும் அதன் எல்லைகளும்

அஷ்ஷெய்க் றிஸான் சுபைதீன் (நளீமி)

ஐரோப்பிய கிறிஸ்தவ சித்தாந்தகங்களின் இறுக்கமான நிலைப்பாடு மதத்திற்கும் அறிவியலுக்குமான முரண்பாட்டைத் தோற்றுவித்திருந்தன என்பதனைப் பார்த்தோம்.

இதன் விளைவாக அறிவியலுக்கு என்று ஒரு அணியும் மதத்திற்கு என்று ஒரு அணியும் என இரு அணிகள் வரிந்து கட்டிக் கொண்டு முட்டிமோதிக் கொண்டிருந்தன.

இந்தப்போட்டியில் விஞ்ஞானத்தின் வளர்ச்சி கிறிஸ்தவ மதத்திற்கு குறிப்பாகவும் ஏனைய மத சித்தாந்தங்களுக்கு பொதுவாகவும் பாரிய சவாலாக தோற்றம் பெற்றுவரத் தொடங்கியது.

உலகத்தில் நடைபெறும் எந்தவொரு செயலுக்குமான மதம்சார் விளக்கங்கள், விஞ்ஞான விளக்கங்களால் எவ்வாறு புறத்தொதுக்கப்படத் தொடங்கின என்பதனை சில உதாரணங்களோடு பார்க்கலாம்.

வானவில் தோன்றுவதன் காரணத்தை கிறிஸ்தவர்கள் பின்வருமாறு புரிந்து வைத்திருந்தனர். அதாவது **இதன் பிறகு உலகத்தை பிரளயத்தைக் கொண்டு அழிக்க மாட்டேன் எனும் வாக்குறுதியை நோவாவிற்கு இறைவன் கொடுத்திருந்தான் அதனை நினைவூட்டவே வானவில் தோன்றுகின்றது.**

மறுபுறத்தில் விஞ்ஞானிகளோ சூரிய கதிர்கள் அண்டவெளியில் காணப்படும் நீர் துணிக்கைளில் பட்டுத் தெறிப்படையும் போது வானவில் தோற்றம் பெறுகின்றது என தெளிவு படுத்தினர். எனவே மக்கள் அதுவரையில் இறைவன் அடிக்கடி வானவில்லை தோன்றச் செய்கின்றான் என கொண்டிருந்த பக்தியுடன் கூடிய நம்பிக்கை புயலில் சிக்குண்ட சாம்பலாய் கலைந்துபோனது.

மனிதர்களுக்கு நோய்கள் ஏற்படுவது சாத்தானின் தீண்டல், மற்றும் இறைவனின் தண்டனை ஆகும் என நோய்கள் தொடர்பில் கிறிஸ்தவ தேவாலயங்கள் மக்களுக்கு அச்சமூட்டி எச்சரிக்கை செய்துவந்தனர். எனவே அவற்றிலிருந்து மனிதனை சரியாகப் பாதுகாப்பதற்காக இரகசியங்களையும் ஓதல்களையும் தெரிந்து வைப்பது மதபுரோகிதர்களாவர்.

அவர்களுக்கு தேவையான தொகைகளை வழங்கினால் அவர்கள் அதனை சுகப்படுத்துவதற்கான மந்திரங்களை செய்வார்கள். இது இறைவனுக்கும் மனிதனுக்குமிடையில் இடைத்தரகர்கள் என்ற உயர் நிலையை இவர்களுக்கு வழங்கியிருந்தது.

1595ல் நுணுக்கு காட்டியின் கண்டுபிடிப்பும் அவற்றின் ஊடான அவதானிப்பும் பெரும் ஏமாற்றத்தையும் ஆச்சர்யத்தையும் மக்களுக்கு வழங்கியிருந்தது. நோய்கள், தொற்றுநோய்கள், கொள்ளை நோய்கள்

போன்றவற்றிற்கு காரணம் கண்ணுக்கு புலப்படாத வைரஸ்கள் மற்றும் நுண்ணங்கிகளாகும். எனவே அவற்றை கட்டுப்படுத்துவதனூடாகவே நோய்களைக் கட்டுப்படுத்த முடியும் என கூறப்பட்டதோடு மாத்திரமல்லாது அதற்கான மருந்துகளும் இந்த கண்டுபிடிப்புக்களின் அடிப்படையில் வெளிப்பட்டது.

எனவே இங்கும் இயற்கை நிகழ்விற்கான மதவிளக்கங்கள் பிரயோசனமற்றவையாக மாற்றமடைந்தன. விஞ்ஞானம் ஒவ்வொரு கண்டுபிடிப்புக்களின்போதும் ஆன்மீகம் சார்ந்த விளக்கங்களை விடுத்து பொருள் முதல்வாத விளக்கங்களை வழங்கத் தொடங்கின.

### கடவுளும் கடிகாரம் செய்பவனும்.

விஞ்ஞான விளக்கங்களால் கடவுளின் வகிபாகம் இல்லாமல் செய்யப்பட்டு நிகழ்வுகள் வர்ணனை செய்யப்பட்டதனால், இப்போது உலக நிகழ்வுகளுக்கான செயற்பாடுகளில் கடவுளின் பங்கு என்ன என்ற விவாதம் தொடங்கப்பட்டது.

கோள் மண்டலமானது ஒரு கடிகாரத்தை செய்பவன் அதற்குத் தேவையான பொறிகளை ஒழுங்குபடுத்தி அமைத்து அதனை இயங்கச் செய்த பின்னர் அதன் இயக்கத்தில் அடிக்கடி தலையீடு செய்வதில்லை என்பது போல, கடவுள் உலகத்தை தேவையான விதிகளையும் இயங்கியல் ஒழுங்குகளையும் அமைத்ததன் பின்னர் உலக இயக்கத்தில் எந்த தலையீட்டினையும் செய்வதில்லை என்ற பிரபலமான கருத்து பல ஆராய்ச்சி யாளர்களாலும், விஞ்ஞானிகளாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

குறிப்பாக ஐஸக் நியுட்டன் இந்த கருத்தியலை சிறப்பாக முன்வைத்தார். இதற்காக தனது இயங்கியல் மற்றும் புவியீர்ப்பு விதிகள் என்பவற்றின் செயற்பாடுகளைத் துணைகொண்டார்.

பிரபஞ்ச இயக்கத்திற்கான ‘‘இயந்திர‘‘ விளக்கம் பின்னர் அனைத்து செயற்பாடுகளிலும் பொருத்திப் பார்க்கப்படலாயிற்று.

பிரித்தானியாவின் பிரபல நாஸ்த்திக தத்துவவியலாளரான தோமஸ் ஹோப்ஸ், மனித உடலின் செயற்பாட்டை பௌதீகவியல் விதிகளால் ஆளப்படும் பொறிகளின் கூட்டு செயற்பாடு என வர்ணித்தார்.

இவ்வாறே அனைத்து பௌதீக வெளிப்பாடுகளும் இயந்திரத் தன்மை வாய்ந்த சித்தார்த்தங்கள் என்ற எல்லைக்குள் புரிந்து கொள்ள முயற்சிக்கப்பட்டது.

இதற்கிடையில் கோள்களின் ஓட்டம் தொடர்பான கணிப்பீட்டிற்கும் தொலை நோக்கியுடனான அவனதானத்தில் பெறப்பட்ட கணிப்பீட்டிற்கும் இடையில் சிறு வித்தியாசத்தை அவனதானித்தார் நியுட்டன்.



கால ஓட்டத்தில் இவ்வேறுபாடு நீடிக்குமானால் ஒன்றில் சூரியன் எல்லாக்கோள்களையும் விழுங்கிவிடும் அல்லது சூரியனின் ஈர்ப்பு விசையிலிருந்து அவை விலகி சென்றுவிடும்.

இங்கு கோள்களின் ஓட்ட வித்தியாசத்தை சீர் செய்வதற்காக கடவுள் அடிக்கடி தலையீடு செய்கிறார் என்று நியுட்டன் கருதினார். எனவே பூலோக இயக்கத்தில் கடவுளின் மறைகரம் அவசியம் வேண்டும் என்று கருதப்பட்டு கடவுளுக்கு என்று சிறு இடம் ஒன்று மீண்டும் வழங்கப்பட்டது.

ஆனால் பிரான்ஸிய வானவியலாளரான லாப்லாஸ், நியுட்டனால் இயற்கை விதிக்

கோட்பாட்டின் படி விளக்கம் வழங்க முடியாதிருந்த கோள்களின் ஓட்டத்தின் கணக்கீட்டிற்கும் அதன் உண்மையான ஓட்டத்திற்குமான வேறுபாட்டினை பின்வருமாறு தீர்க்க முற்பட்டார். அதாவது இவ்வேறுபாடு குறித்த காலத்தின் பின்னர் கோள்கள் தம்மைத் தாமே சீரமைத்துக்கொள்கின்றன. அங்கு கடவுள் அதனை சீர்செய்யத் தலையீடு செய்யத்தேவையில்லை என்றார். எனவே நியுட்டனால் கடவுளுக்கு வழங்கப்பட்ட சிறு இடமும் மீண்டும் இல்லாமலாக்கப்பட்டது.

எனவே பின் வந்த காலங்களில், குறிப்பாக அறிவியல் புரட்சிக்கு தலைமை வழங்கியிருந்த ஐரோப்பாவில் கடவுளை புறத்தொதுக்கி விஞ்ஞானம் வளர்ச்சி அடையும் கலாசாரம் நன்கு வேரூன்றி வளரத்தொடங்கியிருந்தது.

இந்த அறிவியலில் ஏற்பட்ட ஓர வஞ்சனையுடன் கூடிய பாரம்பரியம் இன்றும் ஓரளவு வீரியத்துடன் தொடர்கின்றது என்பது உன்மையே.

இப்போது மத்திய காலப்பகுதியின் பின் அரைவாசியிலிருந்து வந்த கருத்துக்கள், கண்டுபிடிப்புக்கள் அனைத்தையும் மீண்டும் ஒரு முறை ஆராய்ச்சிக்கு உட்படுத்திப் பாருங்கள். இதில் எந்தக் கண்டுபிடிப்பு கடவுளை மறுப்பதாக அல்லது கடவுள் என்ற ஒன்று இல்லை என்று முடிவாக்கியிருக்கின்றன. அல்லது மதங்களில் அடிப்படைகளை இல்லாமல் செய்திருக்கின்றன.

எந்த மதமாக இருந்தாலும் பிரபஞ்சம் தொடர்பில் மூன்று கருத்துக்களை கொண்டிருக்கின்றன.

1. **இப்பாரிய உலகத்தை கடவுள் எனும் ஒரு சக்தி படைத்திருக்கின்றது.**

2. **இவ்வுலகத்தின் படைப்பிற்கு பின்னால் ஒரு திட்டமும் நோக்கமும் கடவுளுக்கு இருக்கின்றது.**

3. **கடவுள் வரையறுத்துள்ள ஒழுங்கு விதிகளை உலகம் பிரதிபலிக்கின்றது.**

புவி மையக் கோட்பாடாக இருந்தாலும், சூரிய மையக் கோட்பாடாக இருந்தாலும் இதில் எந்தக் கருத்தும் எப்படி கடவுளின் இருப்பை மறுக்க முடியும்?.

நோய்களை நம் உடலில் உண்டாக்குவது நுண்ணங்கிகளாக இருந்தாலும், வைரஸ்களாக இருந்தாலும் அவைகள்தான் காரணம் என அறிவியல் விளங்கப்படுத்தும் போது கடவுள் என்ற படைப்பாளன் எப்படி இல்லாமலாக்கப்படலாம்?

வானவில் தோன்றுவதற்கு காரணத்தை விஞ்ஞானம் விளக்கும்போது அதன் செயற்பாட்டைத்தானே விளக்கினார்கள். இன்னொருவகையில் சொல்வதானால் "எவ்வாறு?" என்ற கேள்விக்குத்தானே விடையை சொல்ல முடிந்துள்ளது. "ஏன்?" என்ற கேள்விக்கு பதில் சொல்ல முடியவில்லையே. இங்கு கடவுளின் செயல்பாடு எப்படி இல்லாமல் செய்யப்பட்டது?.


எனவே இதுவரை சொல்லப்பட்ட வரலாற்று சுருக்கத்திலிருந்து அறிவியல் காரணங்களுக்காகவன்றி வேறு ஏதோ காரணங்களுக்காக கடவுள் எனும் நம்பிக்கை விடுவிக்கப்பட்டு விளக்கம் சொல்லப்பட்டுள்ளது என்பதனைப் பார்க்கலாம். இது அறிவியல் ரீதியான காரணம் அல்ல. உளவியல் சார்ந்த நிலைப்பாடுகள்தான் கடவுள் தலையீடற்ற விஞ்ஞான விளக்கங்கள், பொருள்முதல் வாத விளக்கங்கள் போன்றவற்றிற்கு காரணங்களாக அமைந்தன என துணிந்துகூறலாம்.

அத்தகைய உளவியல் காரணங்கள் எவை? அவை எவ்வாறு நாஸ்த்திக சிந்தனை வளர்ச்சியடைவதற்கு காரணங்களாக அமைந்தன என்பதனை அடுத்த இதழில் பார்க்கலாம்.

**01 வது அத்தியாயம் இதழ் -09 ல்**
**02 வது அத்தியாயம் இதழ் 10 (இந்த இதழில்)**
**03 வது அத்தியாம் அடுத்த இதழில் எதிர் பாருங்கள்)**

# எனக்குள் வாழும் நான்...!

கல்ஹின்னை
ஃபஹ்மி ஹலீம்தீன்



நான் வேண்டுதல் செய்து
இவ்வுலகில் பிறந்தவனல்ல.

என் பிறப்பு இறைவன் எனக்குத் தந்த வரம்.

அதை நான் என்றுமே வெறுத்ததில்லை.
விரக்தியோடு நான் வாழ்ந்ததுமில்லை.

பிறந்த பயனை அடைய நினைக்கிறேன்.

பிறருக்கும் பயனுள்ளவனாக வாழ
முயற்சிக்கிறேன்.

இடையூறுகள் இல்லாத வாழ்வை
நேசிக்கிறேன்.

நான் எவருக்கும் போட்டியாளனல்ல.
எவரும் எனக்கு போட்டியாளராக
இருக்கத் தேவையுமில்லை.

பொறாமையற்ற மனிதர்களோடு
பயணிக்க ஆசைப்படுகிறேன்.

எதிரியென்று எவருமில்லா உலகத்தில்
வாழ நினைக்கிறேன்.

துஷ்டர்கள் நடமாட்டமில்லா
தூய்மையான ஒரு பூமியை
தேடிக் கொண்டிருக்கிறேன்.

துருப்பிடித்த இதயங்களிடம்
இடைவெளிகளை ஏற்படுத்திக் கொள்ள
விரும்புகிறேன்.

அக அழுக்குப் படிந்த அறிவாளிகளை
தூரமாய் துரத்திவிட நினைக்கிறேன்.

முகமூடி அணிந்த சில
உறவுகளிடமும் நட்புகளிடமும்
ஏமாந்து போகிறேன்.

அன்புக்கு அடிபணிந்து
அசிங்கத்தைப் பூசிக் கொள்கிறேன்.

ஏற்றிவிட்ட ஏணியை
ஏறி உதைத்து ஏளனம் செய்வோரை
ஏறெடுத்தும் பார்க்காமல் தவிர்க்க
எட்டியே நின்று கொள்கிறேன்.

நன்றி மறந்த மனிதர்களை மறக்காமலிருக்க
ஒரு நாய்க் குட்டியையேனும் வளர்க்க
பிரியம் கொள்கிறேன்.

நடுக்காட்டில் விட்டுச் சென்ற
நம்பத் தகாத சில சகவாசங்களை
மறக்க முயற்சிக்கிறேன்.

புறாக்கள் கூட்டமாக இருக்கும் இடத்தில்
உட்கார்ந்து
சமாதானத்தை சுவாசிக்க நினைக்கிறேன்.

விதி வரைந்த கோடுகளின் வளைவு
நெளிவுகளை
கவனமாகக் கையாழ்கிறேன்.

வலிகளை வழிகளாக்கி
வாழ்க்கையை விருப்பத்தோடு வாழ்கிறேன்

இனி எனக்கான சொச்சமுள்ள நாட்களை
இப்போதுள்ள எனக்காக வாழாமல்
மறுமையின் எனக்காக வாழப் போகிறேன்.

# சோலி குறைவான ஞாயிற்றுக்கிழமைகள் ....

லலிதகோபன். தி



அனுபவப் பகிர்வு

மிச்சம் சின்ன வயசுல அதாவது பட்டாம்பூச்சிகள் "மூத்திர கஞ்சா" செடிகளால அடிச்சு பிடிச்ச நாட்களில சனியும் ஞாயிறும் புருசனும் பெண்டாட்டியும் மாதிரி விளையாடு வதற்கென்றே ஒதுக்கப்பட்ட நாட்கள். அப்பாவின்ர கண்டிப்பிலயும் கவனத்திலயும் நகர்ந்த பள்ளி நாட்களில இந்த வார இறுதிகள நான் கழிக்கிறது அனேகமா அம்மம்மாவின்ர வீட்டிலதான்.

வார இறுதி நாட்களின்ர குதூகலம் அனேகமா வெள்ளி இரவுல அம்மம்மா வீட்டு முத்தத்தில வளச்சிருந்து சாப்பிடுற சாப்பாட்டோடே தொடங்கிடும். வெள்ளிக்கிழம மாலயில அம்மம்மா வீட்டில இருந்து மாமாமார் யாராவது வருவாங்க நம்மள கூட்டிப்போறதுக்கு. பிறகென்ன நம்ம ராஜாங்கம்தான் சனியும் ஞாயிறும்.

டியுசன் வகுப்புக்களுக்களின்ர நிறமே நமக்கு என்னண்டு தெரியாது. நமக்கு தெரிஞ்சதெல்லாம் "மாலை முழுதும் விளையாட்டு" அல்ல அல்ல "நாள் முழுவதும் விளையாட்டு". சனிக்கிழமை விடியத்துல மாமாக்களோட பயிர்த் தோட்டத்துக்கு போய் தண்ணி பாய்ச்சி காடெல்லாம் விளையாடி வந்து சேர மதியமாகும். மாமரத்து நிழலில மதிய விருந்து. குட்டித் தூக்கம் கழிய மாலை முழுவதும் மீண்டும் விளையாட்டு.

இரவு முற்றத்துல பாய் விரிச்சி "முகத்தார் வீடு" நாடகமும் அம்மம்மாவின்ர கதைகளும் கேட்டு விழி மூட மணி பத்தாகிடும். இனி அடுத்த நாள் ஞாயிறு அதி விஷேசமான நாள்.

"கம்பசுல" இருந்து மாச லீவுக்கு கடைசி மாமாவும் வந்து நிண்டா அது இன்னும் அதி விசேசம். அம்மம்மா விடிகால நாலு மணிக்கே எழும்பி "பாலப்பம்" சுட தொடங்கினாவெண்டா விடிய எழும்பி நாம கண் முழிக்கிறது அப்ப சட்டிலதான். ஆச்சி கடைசி அப்பம் சுட்டு முடிக்கிற காலம எட்டு மணி வரைக்கும் நமக்கு கொண்டாட்டம்தான்.

பிறகு பாரை மீன் பால் சொதியோட மதியம் ஒரு புடி புடிச்சா அடுத்த இரவுச் சாப்பாடு ஞாயித்து கிழமயில அந்தியில அஞ்சரை மணிக்கு. ஏனெண்டா இந்த ஞாயிறு பின்னேரம் ஆறு மணிக்கு திரும்பவும் வீட்ட போகோணும் அடுத்த நாள் பள்ளிக்கூடம் எண்டுறதால. அத நெனச்சாலே வயிறு கலங்கும். அந்த மணல் வீதியால அம்மம்மாட கைய புடிச்ச மாதிரியே சிணுங்கி சிணுங்கி வீட்ட போன சுட்டிப்பையன்தான் நான்.

வனம் போல கிடுகிடுவென காலம் வளர்ந்து போச்சு. இப்ப நாம ஓ.லெவலும் கல்லூரிலயும் படிக்கிற காலம். இந்த காலத்துல சனி ஞாயிறு சந்தோஷங்கள முழுசா விழுங்கி போட்டுது "டியுசன் பசாசுகள்".

எப்பவாவது இந்த டியுசன் வாத்திமார் லீவு தாற நாட்களில குளக்கர பக்கமாயும் காட்டு பக்கமாயும் போகக்குள்ள நம்மளோட கூடப்படிச்சதுகள்ல கொஞ்சம் குறைவா படிச்சதுகள் தோட்டக்கரைகளில வேல செஞ்சு கொண்டு நமக்கு மரியாத தருங்கள். "படிச்ச பசங்களாம்" நாங்க எண்டு.

எனக்கெண்டா தலைய கொண்டு எங்கயாவது முட்டோணும் போல கிடக்கும். இவர் பிள்ளையார் இந்த மாதிரி ஞாயித்து கிழமளில என்னட்டா நிறைய திட்டு வாங்கி முடிவார். அறிவ கொஞ்சம் அதிகமா தந்து என்ர சுதந்திரத்த பறிச்சதுக்காய்.

பிறகு டவுன் வாழ்க்கை படலம். அங்க ஒரு போடிங் ஹவுஸ். அனேகமா திங்களில இருந்து சனி வரையும்தான் நமக்கு டியுசன் படிப்பும் லைப்ரரி படிப்பும். ஞாயிறு எனக்கு நானே ஓய்வு தாற நாள். ஞாயிறு வகுப்பு இருந்தாலும் "இம்போட்டண் செக்சன்" இல்லாட்டி நமக்கு ஹொலிடேதான்.

கொஞ்ச நேரம் லைப்ரரிக்கு போய் பத்து மணியோடே போடிங் ஹவுசுக்கு வந்திடுவன் "வீரகேசரி" பேப்பரோட. அத படிச்சி முடிக்க மதிய விருந்து ஸ்பெஷலான கறிகளோட. பிறகு தூக்கமும் பின்னேரம் "சும்மா உலாத்தலுமா" போனது அந்த வாழ்க்கை. என்ன வாழ்க்கடா அது.

இதுவெல்லாம் கடந்து இப்ப நாம நிக்குறது "நர்சிங் றெயினிங்" காலத்துல. இப்பதான் ஞாயித்துகிழமயின்ர அர்த்தம் முழுசா தெரியிற காலம். அப்புடி ஒரு கவனிப்பு அம்மா நம்மள. அஞ்சு நாளும் காஞ்சி கருவாடா போன நம்ம வயித்துக்கு நிம்மதியா பாலூத்திற நாள் இந்த தினம். பிறகு வீடியோ படமும் பாத்து முடிய பின்னேரம் நாலு மணி. அம்மம்மாட வீட்ட இருந்து சிணுங்கிய சின்ன பொடியன் இப்ப மனசுக்க சிணுங்குவான்.

எண்டாலும் ஞாயித்து கிழம நாலு மணி தாண்டி வாற பேருந்துகளில எல்லாம் நம்ம கேங்குகளும் கேக்குகளும் (பெண் நண்பிகள்) நிரம்பி இருப்பாங்க. அந்த பயணங்களுக்காகவே அந்த ஞாயிறு மாலைகள் பிடிக்கும். எப்பவாவது கிட்டுற சன்னல் இருக்கையில சாஞ்சி இடைக்கால பாட்டுகள கேட்ட மாதிரி பயணப்பட்ட அந்த நினைவுகள்.

றூமுக்கு வந்தா ஆரோ ஒரு நம்மட அல்லக்கைகள் வந்து சேர்ந்திருக்கும். உதுகள் ஆரையாவது சோடி சேர்த்து கொண்டு போய் "கல்லடி" கடற்கரையில குந்தினா எழும்ப மணி இரவு எட்டாயிடும். அப்புறமா ரூமுக்கு வந்து கதையளந்து எல்லா பக்கிரிகள் பரதேசிகளும் ஒண்டு சேர்ந்து ஒவ்வொரு பார்சலா பிரிச்சு சாப்பிட்டு முடிக்க மணி பதினொண்டு.

இடையில வந்து போன "யாரோக்களும் ஞாயிறின் நினைவுகளும்" அது வேற கதை. இங்க தணிக்கை செய்யப்பட்டிருக்கு. அதெல்லாம் ஆற்ற முடியாத கண்ணீர் காவியங்கள்.

சில கிழமயில வீட்ட போகாம போடிங் ஹவுசில நிண்டா "மூணு சோ" படம் பாப்பம் எல்லா வெங்காயங்களுமா வண்டி கட்டிப்போய். அப்புடி இருந்த நாம அந்த காலத்துல. இனி ஒரு நாளும் கிட்டாது காலம பத்து மணி மட்டும் தூங்கி கழிச்ச ஞாயிறுகள். ஒருவரும் இல்லாத ஞாயிறு வீதிகளில "பைசிக்கிள்" ஓடினதும் ஒரு காலம்.

ரெயினிங் முடிச்சி நிரந்தரமா வேலைக்கு வந்த பிறகு ஞாயிறு எண்ட நாள் இரிக்கெண்டே தெரியா. விடிஞ்சி வேலைக்கு போன இரவு எட்டு மணிக்கு ரூமுக்கு வந்து தூங்கி போன நாட்கள். கேட்டா அது டபுள் டியுட்டி. இல்லாட்டி மோனிங்கும் நயிட்டும் இல்லாட்டி ஈவினிங்கும் நயிட்டும். சுடுகாடு போகுமட்டும் இந்த டியுட்டி பசாசு நம்மள விடாது போல.

எப்பவாவது ஞாயிறு ஒரு சிப்ட் அதாவது மோனிங் மட்டும் வாற நாளில இவன் மகன் மதுரங்கனோட திருகோணமலை பீச்சுல இருக்கிற நேரங்கள்தான் இண்டைக்கு ஞாயிறு எண்டு சொல்லுது.

என்ன போல வயசுல ஞாயிறு பத்தி எழுத மதுரங்கனுக்கு ஒண்டுமே இருக்க போறதில்ல. ஏனெண்டா இன்னும் கொஞ்ச நாளில அவன் படிப்பு இயந்திரத்துல மாட்டுப்பட்டு இழுபடப் போறான். காலத்தின்ர கொடுமை இது.

# மயிலிறகு

உ .நிசார் – மாவனல்லை

ஆதில், குஞ்சுவீட்டுக்குள் கடை வைத்திருந்தான். அதில் அரிசி, சீனி, கோதுமை மா, மரக்கறி, பிஸ்கட் வகைகள் என பல பொருட்கள் விற்பனைக்கு வைக்கப் பட்டிருந்தன. பொருட்களைக் கொள்வனவு செய்ய அவனின் நண்பர்களான ஹம்ஸா, சாதிக், அஸீனா, லைலா, அஸ்லம், சுலைஹா என பலரும் வந்து வரிசையாக நின்று கொண்டிருந்தனர்.

ஒவ்வொருவராகப் பொருட்களை விலைக்கு வாங்கிக் கொண்டு விலகிச் செல்ல அடுத்த சந்தர்ப்பம் அஸீனாவுக்குக் கிடைத்தது. தனது சிறிய முக்காட்டை இழுத்து தலையை நன்கு மூடியவாறு அவள் கடையின் ஓர் ஓரமாக நின்று குரல் கொடுத்தாள்.

“மாமா, எனக்கு அரிசி ஒரு கொத்தும், மா ஒரு றாத்தலும், சீனி அர றாத்தலும் தாங்கே”.

எப்போதும் அஸீனாவின் குரலில் ஆதில் கட்டுண்டு போவான். அவளின் அழகில், அவள் நடக்கும் நடையில், பார்க்கும் பார்வையில் அவனுக்கு ஒரு பிடிப்பு இருந்தது. அந்தச் சின்ன வயதிலும் அவளைக் காணும் போதெல்லாம் அவன் ஒரு கற்பனை உலகுக்குள் புகுந்து விடுவான்.

ஆதில், அஸீனாவின் அழகை ரசித்தவாறு கேட்ட சாமான்களை ஒவ்வொன்றாக நிறுத்து அவளின் முன்னால் வைத்தான்.

“சரி, புள்ள சரி, மொத்தக் கணக்கு பத்து ரூபாவும் அம்பது சதமாகுது.”

அஸீனா கற்துண்டுகளான காசை எடுத்து, எண்ணி அவற்றை ஆதிலின்

கைகளில் வைக்கும் போது அவளின் கன்னங்களைத் தொட்டு மகிழ அவனுக்குள் ஒரு சிறிய ஆசை வந்தாலும், மிகவும் சிரமப்பட்டு அவன் அதைத் தவிர்த்துக் கொண்டான்.

குஞ்சுவீட்டில், மட்டுமல்ல பாடசாலை, மத்ரஸா என பல்வேறு இடங்களிலும் ஆதிலும், அஸீனாவும் சந்தித்துக் கொள்ளும் போதெல்லாம் அவர்களுக்குள் ஒரு நட்பு, ஒரு புரிந்துணர்வு, ஒரு அந்நியோன்யம் ஏற்பட்டுவிட்டது.

ஒருநாள் மத்ரஸா ஆரம்பிப்பதற்கு முதல் அஸீனா தனது குர்ஆன் கிதாபுக்குள் இருந்து ஓர் அழகிய மயிலிறகை வெளியே எடுத்து எல்லோருக்கும் காட்டினாள்.

அதைப் பார்த்துவிட்டு அதன் அழகில் எல்லோரும் பிரமித்துப் போனார்கள்.

“குர்ஆனுக்குள்ள மயிலிறக வச்சா, அது குட்டி போடுமாம்.”

அக்காலச் சிறுவர்களுக்குள் அப்படியொரு நம்பிக்கை இருந்தது.

“மயிலிறகு குட்டி போடாது. அது பெருகும் எண்டு செல்லு.” ஆதிலின் யதார்த்தம் வெளியாகியது.

“அஸீனா, அதிலிருந்து எனக்கு ஒரு இறகு பிடுங்கித் தாவே.”

லைலா அப்படிக் கேட்க, அஸீனா மயிலிறகில் இருந்து ஒரு கீற்றைப் பிடுங்கிக் கொடுத்தாள்.

“அஸீனா, எனக்கும் ஒண்டு தாவே… எனக்கும் ஒண்டு தாவே...”

ஒவ்வொருவராக அவ்வாறு கேட்டு நின்றனர். யார் எதைக் கேட்டாலும் அதை அவர்களுக்குக் கொடுக்கும் மனப்பக்குவம் அஸீனாவிடம் இருந்தது. அதனால் அவள்,

அவர்கள் எல்லோருக்கும் மயிலிறகின் ஒவ்வொரு கீற்றாகப் பிடுங்கிக் கொடுத்தாள்.

“அஸீனா, எனக்கு இல்லையா?”

கடைசியாக ஆதில் கேட்டான்.

“ஐயோ! ஆதில் எல்லோருக்கும் குடுத்திட்டேனே. மொதல்ல கேட்டிருந்தா தந்திருப்பேனே. மயிலிறகுட கண் மட்டும்தான் இப்ப மிஞ்சியிருக்கு. நான் இப்ப என்ன செய்ய? சரி நான் அத குர்ஆனுக்குள்ள வச்சிறேன். அது பெருகக்குள்ள எடுத்துத் தாறேன்.”

ஆதில் ஒன்றும் பேசவில்லை. மற்றவர்களுக்கெல்லாம் மயிலிறகு கொடுத்தவள் தனக்கு அதில் ஒன்றைத் தராததையிட்டு அவனுக்குள் மனவருத்தமொன்று ஏற்பட்டு விட்டது.

அடுத்தநாள் அஸீனா நேர காலத்துடனேயே மத்ரஸாவுக்கு வந்து ஆதிலை எதிர்பார்த்துக் காத்திருந்தாள். சற்று நேரத்தில் ஆதில் அங்கே வர அஸீனா அவனருகில் ஓடிச் சென்றாள். அவன் தனது முகத்தை ஒரு புறமாகத் திருப்பிக் கொண்டு வேறு சில நண்பர்களுடன் ஓடிப் பிடித்து விளையாடச் சென்றுவிட்டான்.

சற்று நேரத்தில் மத்ரஸா ஹஸரத் அங்கே வர மாணவர்கள் எல்லோரும் ஓடிச் சென்று தமது இருக்கைகளில் அமர்ந்து கொண்டனர். அதன் பிறகு கிராத்துடன் மத்ரஸா ஆரம்பமாகியது. குர்ஆன் ஓதும் போது அஸீனா, ஆதிலை அடிக்கடி நோட்டமிட்டபடி இருந்தாள். ஆதில் அதைக் கண்டும் காணாதவன் போல செயற்பட்டான். மத்ரஸா விட்டு மாணவர்கள் கலைந்து செல்லும் சமயம் அஸீனா ஓடிச் சென்று ஆதிலிடம் நின்று கொண்டாள்.

“ஆதில் நீ என்னோட கோவமா?”

“அஸீனா நான் என்னத்துக்கு ஒன்னோட கோவிச்ச வேணும்.”

“ஆதில் அந்த மயிலிறகுக்குத்தானே நீ என்னோட கோவிச்சி கொண்டாய்?. இந்தா ஈக்கு அந்த மயிலிறகு. அத நீ வச்சிக்கோ. குர்ஆனுக்குள்ள வச்சி அது பெருகினா எனக்கும் ஒண்டு தா.”

அவள் குர்ஆன் கிதாபுக்குள் இருந்த மயிலிறகை எடுத்து ஆதிலின் கையில் வைத்தாள்.

“ஐயோ! நீ ஆசப்பட்ட மயிலிறகு எனக்கென்னத்துக்கு? அநுராதபுரத்தில் ஈக்கிற எங்கட மாமாவுக்கு ஒரு கடிதம் போட்டா அவர் எனக்கு மயிலொண்டயே கொண்டு வந்து தருவார்.”

ஆதில், அஸீனாவின் கையைத் தட்டி விட்டு நடக்கத் தொடங்கினான். அஸீனாவால் அதைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அடுத்த நாள் அஸீனா மத்ரஸாவுக்கு வரவில்லை. அங்கு வந்திருந்த பெண் பிள்ளைகள் ஏதோவொன்றை தமக்குள் குசுகுசுத்துக் கொண்டிருந்தனர். அதைக் கண்ணுற்ற ஆதில் சுலைஹாவிடம் ஓடி வந்தான்.

“சுலைஹா என்ன இது குசுகுசுப்பு?”

“ஆதில் இதெல்லாம் பொம்புளப்புள்ளகளுட விசயம். ஆம்புளப் புள்ளகள் அதெல்லாத்தையும் கேக்கத் தேவ இல்ல.”

அப்போது அவ்விடத்துக்கு சாதிக் வந்தான்.

“ஆதில் இங்க வா. நடந்தீர விசயத்த நான் ஒனக்கிட்ட செல்லுறேன்.”

சாதிக், ஆதிலை ஒரு புறமாக அழைத்துச் சென்று அவனின் காதோடு காதாக நடந்திருக்கும் விசயத்தைச் சொல்லி வைத்தான்.

“அஸீனா பெரியமனுசியா கிட்டாளாம். அதுதான் அவள் மத்ரஸாவுக்கு வர இல்ல.”

“சாதிக், அப்ப அஸீனா எப்ப மட்டு மத்ரஸாவுக்கு வருவாள்.?

“இனி அவள் மத்ரஸாவுக்க வர மாட்டாள்.”

“ஆனா ஸ்கூலுக்கு வருவாள்தானே.”

“வருவாள், வருவாள். ஏழாவது நாள் சடங்கு முடிஞ்சி, அதிலிருந்து ஏழு நாள் கழிஞ்சி அவள் கட்டாயம் ஸ்கூலுக்கு வருவாள். எங்கட தாத்தா பெரிய மனிசியான நேரமும் உம்மா அப்பிடித்தான் நடந்து கொண்டா.”

“சாதிக், அதுவும் அப்பிடியா?”

ஆதில் தனது மனதைச் சமாதானப்படுத்திக் கொண்டான்.

அஸீனாவின் ஏழாவது நாள் சடங்கு முடிந்ததை ஆதில், சாதிக்கிடம் இருந்து அறிந்து கொண்டான். ஆதிலுக்கு, அஸீனாவைக் காண இன்னும் ஒரு வாரம் காத்திருக்க வேண்டியிருந்தது. அவன் அந்த ஒருவாரத்தையும் நாட்களை எண்ணி எண்ணிக் கழித்தான். அந்த ஒரு வாரம் கழிந்துவிட்டது. இரண்டு, மூன்று வாரங்கள் கழிந்து ஒரு மாதமும் ஆகிவிட்டது. அஸீனா பாடசாலைக்கு வரவில்லை. அதைப் பற்றி அவனது தாய், தந்தையருக்கு இடையே ஏற்பட்ட உரையாடலுக்கு அவன் ஒருநாள் மெதுவாகக் காது கொடுத்தான்.

“இங்க கேளுங்க, புதிய மத்திசம், அவர்ட மகள ஸ்கூலுக்கு அனுப்பாம நிப்பாட்டிட்டாராம்.”

“குறைசா, அவங்க பரம்பரப் பணக்காரரு. அவங்களுக்கு என்னத்துக்கு இந்தப் படிப்பு? இன்னும் ரெண்டொரு வருசத்தில அவர் அவளுக்கு நல்ல எடமொண்டப் பாத்து கலியாணம் ஒண்டையும் செஞ்சி வச்சுவாரு.”

“இப்படி ஒரு கதயும் ஊரில அடிபடுது. அவர்ட குடும்பத்துல பொம்புளப் புள்ளகள் சின்ன வயசிலேயே கண்ட நிண்டவனுகளோட ஓடிப் போறத்தால அவர், அவள ஊட்டுக்குள்ள அடக்கி வச்சி வளக்கப் போறாராம்.”

“பொம்புளகள் எந்த விசயத்துக்கும் கைகால் வச்சி பேசுவாங்கதானே. அதனால உடு கதய. எங்களுக்கும் புள்ள குட்டிகள் ஈக்குறாங்க.”

அஸீனா பாடசாலைக்கு இனியும் வரமாட்டாள் என்பதை ஆதில் உறுதி செய்து கொண்டான். அது அவனுக்கு மிக்க கவலையை அளித்தது. அவளைப் பார்க்க வேண்டும். அவளுடன் கதைக்க வேண்டும். அவளைக் காணாது, தான் படும் வேதனையை அவளுக்கு எடுத்துரைக்க வேண்டும் என்றெல்லாம் அவனின் சிந்தனை அவளைப் பற்றியே சுழன்றது. அஸீனாவுக்கு அவளது தந்தை விதித்திருந்த கட்டுப்பாடுகளால் அவளைப் பற்றிய போதிய விபரங்களை அவனால் பெற்றுக் கொள்ளவும் முடியவில்லை.

நாட்கள் வாரங்களாகி, மாதங்களாகி, வருடங்களாக காலம் வேகமாகச் சுழன்று கொண்டே இருந்தது. ஆதிலும் கல்விப் பொதுத்தராதர உயர்தரப்பத்திர பரீட்சைக்கு தயாராகிக் கொண்ருந்தான்.

ஒருநாள் ஆதிலின் வீட்டுக்கு வந்த ஆமினா தாத்தா, அஸீனாவைப் பெண் பார்க்க வந்த விடயம் தொடர்பாக அவனது தாயாரிடம் கதைத்துக் கொண்டிருந்தாள். அதை ஆதில் காது கொடுத்து கேட்டுக் கொண்டிருந்தான்.

“தங்கச்சி, மாப்புள்ள ஹசன் ஹாஜியார்ட மகனாம். அவர் உடுநுவரயிலேயே கோடிக்குக் கொடி போட்டவர் எண்டத்த நான் செல்லி நீ அறிஞ்சி கொள்ள வேணுமெண்டு இல்லயே. மாப்புள்ளயும் நல்ல வாட்டசாட்டமான பொடியனாம். கொழும்புல நாலாம் குறுக்குத் தெருவில மொத்த வியாபாரியாம்.”

“தாத்தா, பொண்ணுக்கு பதினேழு வருசமாவது நெரப்பமாகி இருக்காதே.”

அதுக்கென்ன தங்கச்சி ரஸூலுல்லா, ஆயிசா நாயகிய கலியாணம் கட்டக்குள்ள அவங்களுக்கு ஆறு வருசம்தானாமே நெரப்பமாகிஈந்த. புதிய மத்திசத்துட்டாரும் அவங்கட புள்ளகளுக்கு சின்ன வயசிலேயே கலியாணம் காப்பு செஞ்சி வச்சிற ஆக்களல்லென். அதப் பத்தி நான் செல்லி நீ அறிய வேண்டி அவசியம் இல்லயே.”

அன்று இரவு ஆதிலுக்கு தூக்கம் வரவில்லை. அவனுக்கு அஸீனாவை ஒருமுறை பார்க்க வேண்டும், அவளோடு கதைக்க வேண்டும் என்ற ஆசை அடிக்கடி வர, அவன் அதைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தான். அஸீனாவின் வீட்டுச் சூழலாலும் அவளுக்கிருந்த பாதுகாப்பினாலும் அது சாத்தியப்படாது என்பதை அவன் உணர்ந்து கொண்டான்.

சுலைஹா, அஸீனாவின் தோழி என்பதை ஆதில் அறிந்து வைத்திருந்தான். அதனால் அடுத்த நாள் பாடசாலைக்கு வந்த ஆதில், சுலைஹாவைச் சந்தித்தான்.

“சுலைஹா, நீ அஸீனாவிட ஊட்டுக்கு பக்கத்து ஊட்டுலதானே ஈக்கிறாய். அதனால நீ அவள அடிக்கடி சந்திச்றாயா?”

“உம்மோ! அஸீனாட ஊட்டுல வேலைக்கு ஈக்கிற ஆலியா மாமி, யாரு சரி அங்க வந்தா ஒடனே அஸீனாவுக்குப் பக்கத்தில வந்திடுவா. வந்தவங்க பேசுறது, கதச்சிறது எல்லாத்தயும் கேட்டுக்கொண்டு ஈப்பா. அதனால நான் ஈந்து நிண்டுதான் அஸீனாவிட ஊட்டுக்கு பெய்த்து அவளுட சொக நலத்த விசாரிச்சிட்டு வருவேன்.”

“சுலைஹா, நீ எனக்கு ஒரு ஒதவி செய்ய வேணும். நீ அடுத்த மொற அவளச் சந்திச்சப் போனா, நான் அவளுக்கு ஸலாம் சென்னேன் எண்டத்த மட்டும் அவளிட்ட செல்லிட்டு வந்திடு.”

“ஆதில், நான் அவளச் சந்திக்கப் போன நேரங்களில அவள் ஒன்னைப் பத்தியும் கேப்பாள். அதனால நான் இண்டெய்க்கே அஸீனாவிட ஊட்டுக்குப் பெய்த்து நீ சென்ன ஸலாத்த அவளுக்கு எத்திவச்சிட்டு வாறேனே.”

அதன்படி அன்று மாலை சுலைஹா அஸீனாவின் வீட்டுக்குச் சென்றாள். வீட்டு முன் வாசலில் அஸீனாவின் தாய் இருந்தாள்.

“மாமி, அஸ்ஸலாமு அலைக்கும்.”

“வஅலைக்குமுஸ்ஸலாம், ஆ.. இது சுலைஹா மகளென... பக்கத்து ஊட்டுல ஈந்தாலும் நீ எங்க எங்கட ஊட்டுக்கு வந்தாய்?”

“அப்படி ஒண்டும் இல்ல மாமி, ஸ்கூலுக்குப் போறத்தால, கிளாஸுகளுக்குப் போறத்தால அங்க, இங்க போக நேரம் இல்ல மாமி. சரி மாமி சரி. அஸீனா இப்ப எங்க ஈக்கிறா?”

“அவள் அது அங்கால காமராவுல எப்ப பாத்தாலும் மொகத்த தூக்கி வச்சிக் கொண்டு ஈக்குறாளே. நீயாவது பெய்த்து அவளோட சிரிச்சிப் பேசிக் கதச்சிட்டு வா மகள். அவளுக்கு அது ஒரு ஆறுதலா ஈக்கும்.”

சுலைஹா அதன் பிறகு அஸீனாவின் அறை வரை வந்தாள்.

“அஸ்ஸலாமு அலைக்கும் அஸீனா நான் சுலைஹா வந்தீக்குறேன்.”

“வஅலைக்குமுஸ்ஸலாம், சுலைஹா, ஒன்னச் சந்திக்க வேணுமெண்டுதான் நானும் ஈந்தேன். நீயே வந்திட்டாய். அது எனக்கு சந்தோசமா ஈக்கு.”

அஸீனா மகிழ்ச்சி மேலீட்டால் சுலைஹாவின் கைகளைப் பிடித்து கதிரையொன்றில் உட்கார வைத்து விட்டு, அவளும் பக்கத்தில் இருந்த கதிரையொன்றில் அமர்ந்து கொண்டாள். அஸீனாவுக்கு, சுலைஹாவிடம் கதைக்க பல விடயங்கள் இருந்தன. தனது வீட்டுக்குள் இருக்கும் அடக்கு முறை, தனது தந்தையின் பிடிவாதம், பலவந்தமாக தனக்கு செய்து வைக்கப் போகும் திருமணம் என்பவற்றையெல்லாம் அஸீனா கதைக்க, அவையெல்லாம் சுலைஹாவுக்கு மிக்க கவலையை அளித்தது.

“அஸீனா, நீ சென்னதெல்லாத்தயும் கேக்க எனக்கும் கவலயாக ஈக்கு. பொம்புளகளால என்னதான் செய்ய முடியும்? நீ கவலப்படாதே. அல்லாட மேல நம்பிக்க வச்சி வாரத்துக்கு மொகம் குடுக்கப் பாரு.”

சுலைஹா, சொன்ன வார்த்தைகள் அஸீனாவுக்கு ஆறுதல் அளித்தது. அப்போது அஸீனாவின் தாயார் கொண்டு வந்து கொடுத்த தேநீரை அருந்திய பின் சுலைஹா, தான் வந்த விடயத்தை எடுத்துச் சொன்னாள்.

“அஸீனா இங்க கேளேன். ஆதில் ஒனக்கு ஸலாம் சென்னான். நான் இங்க வந்ததே அத ஒனக்கு எத்தி வச்சத்தான்.”

“ஆதில் எனக்கு ஸலாம் சென்னானா? வஅலைக்குமுஸ்ஸலாம், அவன் என்ன மறந்தீக்க மாட்டான், எண்டு எனக்குத் தெரியும். நானும், அவனும் சின்ன வயசில எவ்வளவு அன்போடு, ஆதரவோடு பழகினோம்.

குஞ்சு வீடு கட்டி வெளயாடினோம். சுலைஹா, இண்டு அதெல்லாம் ஒரு கனவாப் பெயித்திட்டுது. ஆதிலுக்கு குடுக்க நான் மிச்சம் காலமாக ஒரு பொருள பாதுகாத்து வச்சீக்கிறேன். நீ அத கொண்டு பெய்த்து அவனுக்குக் குடுக்க வேணும்.”

உடனே அஸீனா தனது அலுமாரி வரை வந்து அதற்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஒரு பொருளை வெளியே எடுத்தாள். அதன் பிறகு அப்பொருள் சுற்றப்பட்டிருந்த கைக்குட்டையை அகற்ற, அங்கே அலங்கார வேலைப்பாடுகளுடனான ஒரு கண்ணாடிச் சட்டகம் தென்பட்டது.

“சுலைஹா, இந்தக் கண்ணாடி பிரேமை நான் தந்ததாக செல்லி, நீ அத ஆதிலிடம் ஒப்படைக்க வேணும். இதுக்குள்ள இருக்கிற மயிலிறகப் பத்தி நீ எனக்கிட்டயோ, அவனுக்கிட்டயோ எதுவும் கேக்கக் கூடாது. நான் இன்னும் ஒரு வாரத்துல எவனோ ஒருவனுக்கு கலுத்து நீட்ட ஈக்கிறவள். அதனால இந்த மயிலிறகப் பத்திய விசயம் காலமெல்லாம் எனக்கும் அவனுக்கும் மட்டும் தெரிஞ்திருந்தால் போதும்.”

அஸீனா அந்தக் கண்ணாடிச் சட்டத்தை எடுத்து தனது கண்களில் ஒற்றிக் கொண்ட பின் அதனைப் பத்திரமாக கைக்குட்டையால் சுற்றி ஒரு உரைக்குள் போட்டு சுலைஹாவிடம் ஒப்படைத்தாள்.

“சுலைஹா, ஏண்ட ஸலாத்தையும் அவனுக்கு நீ எத்தி வை. நான் தந்த மயிலிறக பத்திரமா கொண்டு பெய்த்து ஆதிலிடம் ஒப்படைப்பாய் எண்ட நம்பிக்க எனக்கு ஈக்கு.”

சுலைஹா, அஸீனாவுக்கு விடை கொடுத்து விட்டு புறப்பட்டு விட்டாள்.

அடுத்த நாள் பாடசாலைக்கு வந்த சுலைஹா, ஆதிலிடம் நடந்த விடயங்களைச் சொல்லி வைத்தாள். அதன் பிறகு கண்ணாடிச் சட்டத்துக்குள் வைக்கப்பட்டிருந்த மயிலிறகை ஆதிலிடம் கையளித்தாள். அதைக் கையிலெடுத்த ஆதிலின் ஏக்கம் அவனது கண்களில் புலப்பட்டதை சுலைஹா கண்டு கொள்ளத் தவறவில்லை.

**(முற்றும்)**




என் கவிதைப் பிரதியின்
ஏதோ ஓர் பக்கம்
காற்றின் பல்லிடுக்கில் சிக்கி
கழன்று விழுகிறது

அது தரையில் விழாமல்
கடந்து சென்ற சிறுமியின் கூந்தலில்
சூடப்பட்டிருக்கும் பூக்களை நோக்கி விரைந்து
பறக்கின்றன

உடன் உதிர்ந்த பக்கத்தின்
வெற்றிடத்தை பார்கிறேன்
அது பட்டாம்பூச்சி பற்றிய கவிதை

நல்ல காலம்
பிரதியின் நடுப் பக்கம்
கழன்று விழவில்லை

அவ்வாறு கழன்று விழுந்திருந்தால்
சிறுமியின் நிலமை
இன்நேரம் என்னவாகி இருக்குமோ

ஏனெனில்
அது காட்டு அரசன் பற்றிய
கவிதையாக இருக்கிறது



# பத்தி எழுதுதல் பற்றி...

நளீபா அஸீஸ் அஸீம்
வெலம்பொட

பத்தி எழுத்து என்பது ஒரு குறிப்பிட்ட பொருள் சார்ந்த அல்லது ஒரு குறிப்பிட்ட எழுத்தாளரால் செய்தித் தாளில் தொடர்ந்து எழுதப்படும் எழுத்து என்று பொருள் தரக்கூடியது. குறிப்பிட்ட இலக்கண வரம்புகளுக்குட்படுத்தப் படாமல் சுதந்திரமானதாகத் தோன்றினாலும் எளிமையான தன்மை பத்திகளுக்குண்டு. பத்தி எழுத்துக்கள் என்ற அமைப்பின் அளவுக்கு வரையறையுண்டு. ஆயிரம் அல்லது அதற்கும் குறைவான சொற்களில் சொல்லி முடிக்கப்பட வேண்டும். அப்போது தான் அதன் விடயமும் இரசனையும் புலனாகும்.

வாசகனை கருத்திற் கொண்டு வாசகன் புரிகின்ற அல்லது விளங்குகின்ற மொழியை மட்டுமே பேசுவதே பத்தியின் முக்கிய பண்பாகும். அத்தோடு பத்தி எழுதும் எழுத்தாளன் தான் சொல்ல வந்த கருத்துக்களைத் தெளிவாக முன்வைப்பதும் பத்தியின் மற்றுமொரு பண்பாகும்.

பத்தி எழுத்தாளன் பயன்படுத்தும் மொழிநடை அதாவது சொற்பயன்பாடு தனித்தன்மை வாய்ந்ததாக இருத்தல் இதன் பிறிதொரு சிறப்பம்சமாகும். இது பத்தி எழுத்தாளனை, மற்ற எழுத்தாளரிடமிருந்து வேறுபடுத்திக் காட்டக் கூடிய தனித்துவம் வாய்ந்தது எனலாம்.

சாதாரண கட்டுரையொன்றைப் போலவே முன்னுரை, உடல், முடிவுரை என்ற மூன்று அம்சங்களையும் உள்ளடக்கியதாக பத்தி அமைகின்றது. பத்தி எழுத முற்படும் எழுத்தாளன் தன் பக்க வாதத்தில் கவனம் செலுத்துவது முக்கிய விடயமாகும்.

அதுமட்டுமின்றி எதிர்தரப்பு வைக்கக் கூடிய வாதங்கள் குறித்தும் கருத்துக்களை தயார் படுத்தி வழங்கக் கூடியதாக இருக்க வேண்டும். ஒப்பீட்டு ரீதியான கருத்து முன்வைப்பானது, தான் சொல்ல வந்த கருத்தை வலுப்படுத்தும். அத்தோடு சுய அனுபவங்களை இடைக்கிடை சேர்த்தல், ஊர் சமாச்சாரங்களைச் சேர்த்தல் என்பன பத்தியை மேலும் மெருகூட்டும். உண்மையான நிகழ்வுகளையும் தான் சொல்கின்ற விடயத்துக்குள் உட்படுத்துவது எழுத்தாளனின் சாமர்த்தியமாகும். இதனால் குறித்த பத்தி மேலும் சிறப்படைகிறது.

திருத்தமான அழுத்தமான நடை, பத்தி ஒன்று வெற்றி பெறுவதற்கு காரணமாக அமைகிறது. இதில் முக்கிய விடயம் யாதெனில் குறைகளையும் குற்றங்களையும் மாத்திரம் சுட்டிக் காட்டிக் கொள்ளாமல் அதற்கான தீர்வுகளை அல்லது முடிவுகளை முன்வைப்பது பத்தியின் நோக்கங்களில் ஒன்றாகும்.

இதன் வரலாறு 1920 களிலே தொடங்கியது. இது அரசியல் சமுதாய ரீதியிலான நீதி நியாயங்களுக்கான குரலாக இன்று வளர்ச்சி பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இது எழுத்தாக மட்டுமன்றி வானொலி, தொலைக்காட்சி, இணையம் போன்ற ஊடகங்களிலும் இன்று பிரசித்து பெற்றுள்ளது. இன்றைய முக நூல்களில் பத்தி ஆதிக்கம் செலுத்துவதைக் காணக் கூடியதாயுள்ளது என்பதை மறுக்க முடியாது.

உலகளாவிய ரீதியில் பலமொழிகளில் பத்தி தாக்கம் செலுத்தி வருவதைக் காணலாம். பல வளர்ச்சிகளையும்

கண்டுள்ளது. தமிழில் பாமரன், ஞா.நிசங்கன் போன்றோர் சிறந்த பத்தி எழுத்தாளர்கள். அதே போன்று சாருநிவேதிதா, எஸ்.ரா, சுஜாதா போன்றோரும் பத்தி எழுத்தாளர்களே. கவிக்கோ அப்துல் ரஹ்மானும் பத்தி எழுத்துகளில் வெற்றி பெற்றுள்ளார் என்பதற்கு தரம் பத்து இலக்கிய நயம் பாடப்பரப்பில் மரம் உயர்திணை, மென்மையே வாழும் என்பன சிறந்த உதாரணங்களாகும்.

(இவ்வாக்கத்திற்கு ஸ்ரீதர ரங்கராஜாவின் பத்தி பற்றிய ஆக்கத்தின் கருத்துக்கள் உதவியது)

**இரத்தத்தில் அதிகூடிய சர்க்கரையை அளவை உடன் குறைக்க உதவும் வீட்டு மருத்துவம்.**

ஒரு கரண்டி சீரகம்
ஒரு கரண்டி வெந்தயம்
ஆவாரம் பூ சிறிய அளவு
கொய்யா இலை 05
மிளகு 10
ஒரு டம்ளர் நீரூற்றி அது அரை டம்ளர் ஆகும் வரை கொதிக்க விட்டு வடிகட்டி குடிக்கும் போது சர்க்கரை அளவு 500 வரை இருந்தாலும் அது உடனடியாக குறையும். இதை தொடர்சியாக செய்யும் போது சர்க்கரையின் அளவு சமநிலையில் எப்போதும் இருக்கும்.

## கலாபூஷணம் மருதூர் ஜமால்தீன்

# நினைவிலேற்று...

அதிகார மோகங்கொண்டு
ஆடிடுமுலகப் போக்கில்
சதிதொடர் புரியும் தீயோர்
சதிபல செய்துமென்ன
விதியினைக்கூட மாற்றும்
வல்லவன் நியதியின்றேல்
பதியிலேரனிதம் செய்வோர்
பதறியே அழிந்து செல்வர்.


உலகமேயவன் பிடிக்குள்
உசுப்பிடும் சக்தியுள்ளோன்
இலங்கிடுமிறையே அவனின்
இலக்கதே எம்மையாளும்
கலக்கமே கொள்ளா நன்மைக்
கருத்திலே சிந்தையூன்றித்
துலங்கிடும் பணியிறுத்தல்
தூய்மையோர் கடமையாகும்.

மக்களையாளும் மன்றம்
மனிதநல் நேர்மையோடு
பக்கசார் பற்று நீதி
பயமிலா வழங்கியுண்மை
தக்கநன் மக்கள் வாழ
தரணியில் நலம் விளைப்பின்
திக்கெலாம்மைதி தோன்றும்
தீமையோ நகர்ந்து செல்லும்.

முனிதனைப் பயமுறுத்தும்
மாக்களின் பிடியிற்செல்லா
புனிதநல்லுள்ளங் கொண்டு
புரிந்துணர் வொற்றுமையில்
நனிதனில் ஆட்சிசெய்ய
நன்மையை விதையிடாது
கனிவிலாப் பகைவிதைப்பின்
காலமும் உனைமுடிக்கும்.

ஆட்சியைத் தருவோனவனே
அதிகார மமதைபோதை
சாட்டியே அமைதியோரைச்
சிக்கவைத்தடிமையாக்கும்
போட்டியைப் பரப்புவீரேலுன்
போக்கினையழித்துண்மை
காட்டுவானிறையும் நீதி
காணுவாய் நினைவிலேற்று.

# வசந்ததீபன் கவிதைகள் (போடிநாயக்கனூர்) தமிழ்நாடு



## சுடர்ந்து சுழன்று வரும் காலம்

கண்கள் தோட்டாக்களை உமிழ தயாராகிறது
இதயம் விசையை முடுக்க தருணம் பார்க்கிறது
குறிக்குத் தப்ப கனவுகள் முயல்கின்றன
அழகோடு அலைகிறாள்
இறக்கி வைக்க தயக்கம்
சுமந்தலைய பயம்
நிலங்களைத் தின்கின்றன தொழிற்சாலைகள்
கிராமங்கள் கரைகின்றன
ஒளிய இடந்தேடுகின்றன பறவைகளும்,
மிருகங்களும்
துக்கத்தை துக்கத்தால் துரத்தமுடியாது
சந்தோஷம் சகல வேதனைகளை
மூழ்கடிக்கும்
காலாற நடந்து செல்வது சுகம்
மர்மமுடிச்சு இறுகுகிறது
புனைவாளனின் மூளை வெடிக்கிறது
புழுக்கள் பேசிக்கொண்டு வெளியேறுகின்றன
கடந்து தான் செல்ல போகிறோம்
கசிந்து உருகித் தேங்காதே
காட்டாற்று வெள்ளமாய் பிரவகித்திடு
நொடி மணியாக விரைகிறது
மணி பெருகி நாளாய் வழிகிறது
நாள் கடந்து கடந்து மரணமாய் முடிகிறது
நிறங்களின் உடைவில் சிறகுகள் துளிர்க்கின்றன
விரிவோடுகிறது வானம்
பெருங்களிப்பின் உற்சவ சீழ்க்கையொலி
தெறிக்கிறது.
நீலப்பளிங்காய் மிளிர்கிறது
நீல வானில் உலா வரும் நிலா ஒளிர்கிறது
முப்பாட்டனின் முகச்செழுமையாய் மரக்கா
மலை.
உடைந்த நீர்க்குமிழியாக மறைந்து போனது
தானியங்கள் கொழித்த காலங்கள்
பேரன்பின் சுடருள் கருமை படர்கிறது.
நிலங்கள் வழியாக வாழ்க்கை நகர்ந்தது
தாவரங்களாகவே மனிதர்கள்
வேரற்று காற்றோடு அலைபடுதல் நீங்கா சாபம்.

## பெருவெளியை நோக்கிய பயணம்

நிறைய கதவுகள் அடைபட்டிருக்கின்றன
நிறைய கனவுகள் பூக்காது
உதிர்ந்திருக்கின்றன
நிறைய கடவுள்கள் பிறந்து
கொண்டேயிருக்கின்றனர்
நகத்தைக் கடித்து மூளையைக் கசக்கி
எழுதினேன் ஒரு கவிதை
காற்று போன பலூன் மண்ணுள் புதையும்
பூவல்ல பெண்
முள் அல்ல பெண்
பூவாகவும் முள்ளாகவும் இருக்கணும் பெண்
மடுவில் வாழும் முதலையல்ல நீ
கரையோர நாவல் மரத்து குரங்கல்ல நான்
என் இதயத்தைத் தின்ன தந்திரம்
செய்கிறாயே!
உன் கண்ணீர் என்னைக் கரைக்கிறது
உன் வாடிய முகம் என் இதயத்தை
நெருப்பிலிடுகிறது
கண்மலர்ந்து சிரி நான் பறவையாகணும்
சென்ற இடங்களை சொல்லத் துவங்கினேன்
சுவையானவைகளை விவரித்தேன்
கஷ்டங்களை கண்ணீரை ஏனோ
சொல்லவில்லை
நட்சத்திரங்கள் சிரிக்கின்றன
நானும் சிரிக்கிறேன்
நிலவே நீயேன் அழுகிறாய்?
வெட்கத்தைத் தருகிறாய்
வேண்டாம் என்று தடுக்கிறேன்
வெள்ளாடாய் துள்ளி ஓடுகிறாய்
நேசிக்கிறேன்
பூஜிக்கிறேன்
யாசிப்பதாய் எண்ணி விலகாதே.
கண்ணீரில் அழியாது கனத்த துக்கம்
கனவுகளில் லயித்தால் கரையாது கடுந்துயரம்
கண்களில் கனலேந்தினால் களிப்பு
பெருக்கெடுக்கும்.
நெருங்குகிறேன் விலகுகிறாய்
விலகுகிறேன் நெருங்குகிறாய்
நீடிக்கிறது ஊடல் விளையாட்டு.

# மச்சானைப் பாத்தீங்களா...?

கம்மல்துறை இக்பால்



மாலையில் இருந்து மணக்கப் பேசி
மகிழ்ச்சியோடு தூங்கச் சென்றார்
காலையில் எழுந்து பார்த்தால்
மச்சானைக் கானல்லயே !?

பாயைக் கூட சுருட்டாமல்
பரக்கப் பரக்கப் எங்கு போனார்?
வாயை கழுவி வாரதக்குள்ள
வாசலையும் தாண்டி விட்டார்

நாட்டுக் கோழி போட்ட முட்டை
நாலு எடுத்து வச்சிருந்தேன்
மூஞ்சை அலம்பி வந்தவுடன்
முட்டைக் கோப்பி தர இருந்தேன்

கடல் அலைகள் பொங்கி எழும்
கச்சானின் காலமிது
கடற் தொழிலும் படுத்திடுச்சி
கடன் தொல்லை கூடிடுச்சி

வருமானம் பத்தலயேனு
வாய் புலம்பிக் கிடந்தாரே
கடன் ஏதும் கேட்டுப் பார்க்க
கடை வழியே போனாரோ?

கவுத்திப் போட்ட கரப்பான் பூச்சாய்
கைசேதப் படுகிறேன்
அவுத்துப் போட்ட ஆடைகளையும்
அடுக்கி வைக்க மனசில்லையே

நெல்லரிசிச் சோறு வச்சு
நெத்தலிமீன் குழம்பு வச்சு
வல்லாரைச் சம்பலும் தான்
வாய் ருசிக்க சமைச்சு இருக்கேன்

கட்டம் போட்ட சட்டையிலே
கட்டழகன் நீ நடந்தால்
கட்டிக்கவே துடிக்கும் ஐயா எம்மனசு இப்போ
எட்டநின்று ஏங்குதையா என் உசிரு



ஒங்கம்மா வயித்தினிலே
நீங்க போட்ட குஸ்தியெல்லாம்
ஒங்க மகன் என் வயித்தில்
ஒத்திகைதான் பார்க்கிறானோ?

ஊருசனம் கண்ணு பட
உசிரையே வச்ச மச்சான்
யாரு பேச்சைக் கேட்டு நீங்க
தலை மறைவாக ஆகி நீங்க?

எச்சாமம் ஆனாலும் எங்கிட்ட சொல்லாம
உச்சாவுக்கும் போகமாட்டார்
பச்சபுள்ளையாய் காலைச் சுற்றி வந்தவரு
எங்கு போனாரோ நெஞ்சு பொறுக்களையே

சிறுக்கி மவள் எவளாச்சும்
குறுக்கு வழி வந்தாளோ?
சொப்பனங்கள் கண்டுகிட்டு
சொக்குபொடி போட்டாளோ?

புறையேறும் போதெல்லாம்
புறவாசல் வருகின்றேன்
படியேறி வருகிறாரா என
பரபரப்பாய் பார்க்கிறேன்

தலை மறைவாய்ப் போன கதை
உலகறிய தெரிய வந்தால்
ஊருசனம் வாய்களுக்குள்
அரைபட்டுப் போவேனே

மஹ்ரிபுக்கும் நேரமாச்சு
மச்சானைக் காணலையே
மாமியார் கேட்டாக்கா
என்ன பதில் நான் சொல்வேன்

நீங்களும்தான் மச்சானை
தேடித்தான் பாருங்களேன்
கண்டாக்கா மச்சினி நான் தேடுறதை
மச்சானிடம் சொல்லுங்களேன்.

# பிரம்மியா சண்முகராஜா எழுதிய 'கனதி' ஒரு அறிமுக அலசல்'




**கேணிப்பித்தன் ச.அருளானந்தம்**

பிரம்மி என்ற பெயரில் கனதி என்ற சிறுகதைத் தொகுப்பினைத் தந்துள்ள பிரம்மியா சண்முகராஜா ஒரு உளவியல் பட்டதாரி. தனித்துவமான மொழி நடையும், சமூக அமைப்பில் கிடக்கும் சிக்கல்களை உளவியல் கண்கொண்டு பார்த்து அலசும் பக்குவமும் கொண்டவர். பிரம்மி துடிப்பும் ஆர்வமும் நிறைந்த இளம் எழுத்தாளர். கனதி நூலில் பதினெட்டுச் சிறுகதைகள் உள்ளன. ஒவ்வொரு கதையும் சமூக அவலங்களைச் சித்தரிப்பதை அவதானிக்கலாம்.

கனதி என்ற சிறுகதைத் தொகுப்பினை வாசித்தேன். சிந்தித்தேன் சிதறிக்கிடக்கும் சிறுகதைகளின் மொழிநடை இலக்கிய நயங்கொண்டவை. உளவியல் அறிஞர்களில் ஒருவரான சிக்மன் பிரைட்டின் சிந்தனைகளைக் காணலாம். அவற்றை நினைவு படுத்தும் சில சிறுகதைகள் மெல்லென நடைபயிலும். உளவியல் சார்ந்த எண்ணக் கருக்கள் நிறைந்த 'கனதி'யான நூலாக இச்சசிறுகதைத் தொகுதி உள்ளது.

அமரர் பேராசிரியர் செ.யோகராசா "இத்தொகுப்பில் உள்ள பல சிறுகதைகளில் உளவியல் அணுகு முறையையும் பேசாப் பொருட்கள் பேசப்படுதலையும் தரிசிக்கலாம்." எனக்கூறுகிறார். பிரம்மியாவின் முதல் கதை கானல்மீன் கொத்தி. இந்தக் கதையை வாசிக்கும்போது இளங்கோ அடிகள் இயற்றிய சிலப்பதிகாரத்தில் வரும் கானல்வரி நினைவுக்கு வந்தது. கோவலன் மாதவி காட்சி தோன்றியது. "கலவியும் புலவியும் காதலர்க்கு அளித்து கோவலனை மகிழ்விக்கும் மாதவியாக அர்த்தனா தெரிகிறார்"இக்கதையின் மூலம் ஆசிரியர் பதின்ம வயதினரின் உடல், உளச் செயற்பாடுகளை உளவியல் கண் கொண்டு பேசாப் பொருட்கள் பேசப்படுதலைக் கலைக்கண் கொண்டு நமக்குக் காட்டுவதை அவதானிக்கலாம்.

"எப்படிச் செயற்பட்டால் குறிக்கோளை அடையமுடியும் என்பதற்கான சாத்தியக் கூறுகள் பற்றி எந்த நேரமும் நினைத்துக் கொண்டிரு. கனவு காண், அந்தக் கனவே உன்னைத் தூண்டிக் கொண்டே இருக்கும்'' என சிக்மண்ட் புரொய்ட் குறிப்பிட்டுள்ளதை இந்திய ஜனாதிபதியாக இருந்த அமரர் அப்துல் கலாம் நினைவு படுத்தியுள்ளதை உணரலாம்.

இக்கதையில் வரும் சல்லாபக் கனவுத் தலைவன் அகிலன். தலைவி அர்த்தனாவின் ஊடலும், கூடலும் ஆசிரியரின் கவிதை நடையும் வாசிப்பவரை அசைத்துவிடும். கடும் வரட்சிக் காலத்தில் வெப்பக்கானல் காற்றில் அசைந்து தண்ணீர் அசைவதாகத் தோன்றும். இதனைக் கானல் நீர் எனக்கூறுவர். தலைவியின் விரகதாபம் இங்கே விபரிக்கப் படுகிறது. இந்தக் கதையைப் பலமுறை வாசித்தேன். ஒரு நல்ல திரைப்படம் பார்த்த நிறைவு.

இங்கு தலைவி குளித்து உடைமாற்றி அரைகுறையாக அணிந்து கொண்டு கலாபக் காதலன் அகிலன் முன் வந்து நிற்கிறாள். கலிங்கத்துப் பரணி பாடிய

ஜெயம்கொண்டார் கடைதிறப்புப் பகுதியில் 'முருகிற் சிவந்த கழுநீரும், முதிரா இளைஞர் ஆருயிரும், திருகிச்செருகும் குழன்மடவீர் செம்பொற் கபாடம் திறமினோ' எனப் பாடி, பின்னர் கலவிக் களியின் மயக்கத்தால் கலை போய் அகல கலை மதியின் நிலவைத் துகில் என்று எடுத்து உடுப்பீர் நீள் பொற் கபாடம் திறமினோ' எனக்காட்டுகிறார். ஒரு கனவில் நடப்பதை அப்படியே உண்மையாக நடப்பதாக ஒரு காட்சியை ஒப்புவிக்கிறார். காதல் வசப்பட்டவர்கள் கொஞ்சுவதும் காதல் மொழி பேசிக் கெஞ்சுவதும் இயல்பு. தலைவனைப் பெயரினைச் சுருக்கியும், 'ஏய் நாய்க் குட்டி' என்று செல்லமாகக் கொஞ்சுவர். இவற்றைக் கானல் மீன்கொத்தியில் காணலாம்.

தன்னைப் பணிமனைக்கு அழைத்துச் செல்லும் படி கணவனை கேட்கின்றாள். குளித்து ஆடை அரைகுறையாக அணிந்து வாசனைத் திரவியம் தடவி அழகுசேர்ப்பதில் கவனம் செலுத்தினாள். "நீங்க வாறீங்களா" என்று கேட்டவளை அப்படியே அலாக்காகத் தூக்கி அறையினுள் கலவி காண்கின்றான். அவள் மயங்கிக் கிடக்கின்றாள். அகிலன் மார்புமேல் அர்த்தனாவின் நீண்ட கரியதோகை, படர்ந்து அவனைச் சுற்றி இறுக்கிக் கிடக்கிறது. அவள் அசந்து கிடக்கிறாள். அவள் மீண்டும் குளித்து சுத்தப்படுத்திக் கொண்டு வருகிறாள். மீண்டும் ஒரு கூடல். மீண்டும் குளித்தல், விழித்துக் கொண்டவள் விரைந்து சேலைக்குள் தன்னை மாாட்டிக் கொண்டாள். எனக் கதை நகர்வதை தனது அழகு தமிழ் நடையில் பின்னிவிடுதலில் பிரம்மி ஒரு தேவதச்சன் ஆகிறார்.

கதைமாந்தர் மோட்டார் சைக்கிளில் பயணிக்கிறார்கள். அவள் வேகமாகச் செல்லுமாறு நச்சரிக்கிறாள். அவன் புன்னகைத்தவாறே மொபைக்கைச் செலுத்துகிறான். அலுவலக வாசலில் இறங்கி ஓடும்போது சேலையை, மொபைக் பிடிக்க, பறித் தெடுத்துக் கொண்டு அலுவலகத்தை நோக்கி விரைந்தாள். அவளுக்கு ஆச்சரியம். எங்கும் வெறிச்சோடிக் கிடக்கிறது. கதவைத் தட்டினாள். காவலாளி வெளியே வந்தான்.. 'என்ன மிஸ் இன்று போயா நாள். லீவு மறந்திட்டிங்களா?' காவலாளி முறுவலோடு கூறினான்.

பயம், வெட்கம் அவளை ஆட்கொண்டது. வழமையாக அவளை இறக்கி விட்டதும் நழுவிவிடும் அகிலன், இறக்கிவிட்ட இடத்திலயே கைபேசியை நோண்டிக் கொண்டு நின்றான். "என்னடி பொண்டாட்டி மீட்டிங் எப்படிப் போச்சு?" என்று கொப்பளித்துச் சிரித்தான். அடப்பாவி இன்றைக்குப் போயா என்று உனக்குத் தெரியுமா? வேணும் எண்டே மறைச்சியா?" என்று ஊடல் கொள்வதும் மொபைக் கில் போகும் போது முட்டி மோதிக்கொண்டே கெஞ்சுவதும், வீட்டுக்குப் போனதும் அவள் உடைமாற்றும் போது அகிலனைத் தேடுவதும் அவன் கதவு நிலைக்கு முட்டுக் கொடுத்தவாறு கைபேசியில் ஆழ்ந்திருந்தான். அவள் கைபேசியைப் பறித் தெடுக்கிறாள். அதனைத் தட்டிப் பார்க்கிறாள். கைபேசியில் அர்த்தனாவின் புகைப்படத்தைக் காட்சிப் படுத்தி அதன் கீழ் ஒருவரிக் கவிதை "என் தீராததேடல் என் தேவதை பாதங்கள்" பார்த்து முறுவலித்ததையும் கண்கள் பார்த்துக் கொண்டன.

தன்னை அலுவலகம் அழைத்துச் சென்ற தலைவனோடு ஊடல் கொண்டு இருவரும் தத்தம் விரகதாபத்தை வெளிப்படுத்திக் கொள்கின்றனர். வீடு சேர்ந்ததும் 'பொண்டாட்டி பசிக்கல்லையாடி? வா சமைக்கலாம். அம்மு இன்றைக்குப் புருசனோட சமையல்" என்றான். இங்கு ஒரு ஊடல். வெட்கப் புன்னகையுடன் அறை மூடப்படுகிறது. சூரியன் உச்சி வானில் உலா வரும் நேரம். அவனது மார்பு முடிகளை வருடியபடி கண்ணயர ஆயத்தமானாள்.

"ஏய் பொண்டாட்டி …அம்மு"

"நீங்க யார்ட செல்லம்"?

"இன்றைக்கு போயாதானேடா………நாய்க்குட்டி…."


திடிரென ஒரு அரட்டல்……விழித்துக் கொண்டாள். தன்னை அறியாமல் கையினால் கட்டிலில் தடவினாள். நினைவுக்கு வந்தவளின் அருகில் தலையணை கூட இல்லை.

இந்தக் கதை நிறைவேறாத ஆசையினை ஆசிரியர் அழகாக இவ்வாறு முடிக்கின்றார். "தூரமாய்……பெருமூச்சின் ஓலம்

அறையை நிரப்ப, விடிந்து விட்டது என நினைவுக்கு வந்தாள் அர்த்தனா''.

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் க.பொ.த உயர்தர வகுப்பில் இந்துநாகரீகம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு இரண்டு வாரக் கருத்தரங்கினை கல்வி அமைச்சு ஒழுங்கு செய்திருந்து. எனது பாடசாலையில் நான்தான் இந்துநாகரீகம் கற்பித்துக் கொண்டிருந்தேன். ஆசிரியர் பற்றாக்குறை. காலை 8.30 தொடக்கம் 12.30 வரை விரிவுரை. 12.30 தொடக்கம் 1.30 வரை ஓய்வு. இந்த ஓய்வு நேரங்களில் விடுதியில் உள்ள கட்டில்களில் படுத்து சீலிங்கைப் பார்ப்பேன். எல்லாம் வெடித்தும் உடைந்தும் இருந்தன. ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியின் விடுதிகளின் சீலிங் வெடித்தும் உடைந்தும் கிடந்ததைக் கண்டதும் அந்த விடுதியின் நிலையைக் கவிதைப் பொருளாக்கிக் கவிதை அரங்கில் பாடினேன். பிரபல எழுத்தாளர் சொக்கன் தலைமை வகித்தவர். நான் அன்று நகைச்சுவைக்காகப் பாடிய அந்த கவிதை சீதனக் கொடுமையால் கன்னிமை கழியாத சீரிளம் பெண்களின் பெருமூச்சுகளால் சீலிங் வெடித்துச் சிதறியதாகப் பாடினேன். அன்று நகைசுவைக்காகப் பாடிய கவிதை இன்று பிரமியாவின் கதைகளைப் படித்ததும் வெகுவாகப் பொருந்தியதைக் கண்டேன்.

இக்கதைக்கு ஆசிரியர் கொடுத்த தலைப்பு 'கானல் மீன் கொத்தி ' அருமையாக அமைந்துள்ளது. இந்தத் தலைப்பே வாசிப்போரை யோசிக்க வைக்கும். கானல் கடும் வெப்பத்தினால் புவியின் கதிர்வீசலினால் நீர் அசைவது போல் மாயவலை தெரியும். அந்த மாயவலையில் மீன்கொத்தி மீன்பிடிக்க முனைதலை அருமையாகசச் சிந்திக்கத் தந்துள்ளார்



**உன்னைச் சுற்றி இருந்த சிலரின் உண்மையான முகங்களை உனக்கு வெளிப்படுத்திய அந்த சோதனையானது திடீரென ஏற்பட்டது கிடையாது, மாறாக அது இறைவன் உனக்கு வழங்கிய அன்பளிப்பு.**

# வாழ்விடம் தொலைதலின் வலி...

– நதிமகள் –

என் அறையில் காற்று வீசும் போது
கண்ணைக் கரிக்கச் செய்த
தூசுகளையும்
சிறு சிறு மாலைகளாய்
தொங்கிக் கொண்டிருந்த
ஒட்டடைகளையும்
யாரோ துடைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த அறையை சுத்தம் செய்யும்
பெரும் பணியொன்றைப்போல
இங்கே மூழ்கி கிடக்கிறார்கள்

ஒரு சிலந்தி வலையும்
சிதைக்கப்பட்டு விடுமளவு மும்முரமாய்..
ஒட்டையுடன் அதுவும் குப்பைத்தொட்டிக்குள்
போகுமளவு கடுகடுப்பாய்...

ஓர் உயிர் வாழ்ந்த வீடு
சிதைக்கப்பட்டு விட்டது.
அந்தச் சிலந்தி பார்த்துப்பார்த்து
மெல்லிழையால் பின்னியமைத்த
மாளிகை அது..


இந்த சுத்தப்படுத்தலில்
சிலந்தியும் காள்கள் உடைந்து நொண்டியாகி
குற்றுயிராய் நொந்து கிடக்கிறது

கண்டது கனவாயிருகக் கூடாதா எனும்
நப்பாசையில் விழித்துப்பார்க்கிறேன்
உண்மையிலுமே யாரோ இந்த அறையை
சுத்தப்படுத்தியேதான் இருக்கின்றார்கள்

ஆனாலும் குற்றஉணர்வின்றி ரசிக்கின்றார்கள்
அறை சுத்தமானதென்று
சிலந்தியின் வாழ்விடத்தை நாசம் செய்தலென்பது
அவர்களுக்கு அத்தனை சிரமமன்று.

# பக்குவம் கொடுத்த புன்னகை

ஷபானா ஆதம்லெப்பை
ஓட்டமாவடி



ஒழுகிக் கரையும் ஓட்டை வீட்டில் ஒதுக்குப்
புறமாய் சுருண்டு கிடந்தவன் அவன்

தூக்கத்தில் கால் நீட்டினால் மழையில்
நனையுமென்று மடக்கிக்கொள்வான்

கந்தல் துணிதான்
அவனுக்கு ஆடை
அதுவே அவன்
குளிருக்கும் போர்வை

வெயிலின்
புழுக்கத்தால்
புழுங்கிச் சாவான்

இருளில்
நுளம்பிற்கு
இரையாவான்

பத்துப் பாத்திரம்
தேய்த்து படிக்க
வைத்தாள்
அவன் தாயோ

பழைய கஞ்சி உண்டு
பனை ஓலையில் படுத்துறங்கி
குப்பிவிளக்கு வெளிச்சத்தில் படித்தான்

கைகொடுத்த கல்வியில்
இன்று
ஐந்தாறு மாடிவீடு
ஆறேழு காரு
அனுபவிக்க அன்னை அவள் அருகில்
இல்லா
குறை மட்டும் அவனுக்கு

கைவிட்ட
சொந்தங்கள் இன்று உறவு
கொண்டாடுகிறார்கள்

துரத்திவிட்ட
சமூகத்தவரும்
இன்று
புகழ்ந்து பேசுகிறார்கள்
அவனை

சொத்துக்கும்
செத்தவனுக்குமே
மதிப்பு என்ற அவன் தாய் வாக்கு
சட்டன நினைவிற்கு
வர புன்னகைத்தான்

சுயநலமில்லா ஏழ்மை வாழ்வு
கற்றுக்கொடுத்த
பக்குவம் பெற்றவன் அவனாகையால்...

**வாழ்வை பின்னடைவாக்கப் பழக்கும் ஸ்னூஸ்...**

**( SNOOZE...SNOOZE...SNOOZE...)**

காலையில் 6 மணிக்கு அலாரம் வைத்து 10 நிமிடம் ஸ்னூஸ் பண்ணி ஸ்னூஸ் பண்ணி பின்னாடி போகும் பழக்கத்தால் தினமும் நாம் மூளையின் சப்கான்சியஸ் (subconscious brain)பகுதியினையும் அதற்கு பழக்கி விடுகிறோம். இந்த செயல்முறையே நம் வாழ்வின் எல்லா செயல் முறைகளிலும் பிரதிபலிக்கத் துவங்குகிறது. இதனால் இது நம்மை பின்னோக்கி நகர்த்தி சோம்பேறியாகப் பழக்கி வாழ்வில் நிரந்தரப் பின்னடைவை ஏற்படுத்தி விடுகிறது. இப்போது புரிகிறதா நாம் ஸ்னூஸ் பண்ணுவது அலாரத்தை அல்ல நமது வாழக்கையை என்பது?

# ஏட்டுப் பரணி




நூல் : புழுதி
வகை : கவிதை
கவிஞர் : காரையன் கதன்
வெளியீடு : தாயதி
பக்கங்கள் : 112
விலை : ரூபா. 560.00
கவிஞரின் தொடர்பு : +94742397395

சாதாரணமான சனங்களின் கதையை அவர்களின் வாழ்வியல் சிக்கல்களை மிக எளிமையாக முன்வைக்கிறார் காரையன் கதன். அந்தச் சம்பவங்கள் நமக்குள் எழுப்பும் கேள்விகளும், அனுபவ ஊடாட்டமும்தான் கவிதைகளின் அடிநாதமாக எழுந்து நிற்கின்றன. கவித்துவம் என்று சொல்லி, அதிகமும் அறிமுகமற்ற சொற்களை பயன்படுத்தாமல் கைவிட்டிருப்பதே இந்தக் கவிதைகளின் தனித்துவம். அகராதியை பக்கத்தில் வைத்துக் கொண்டு கவிதைகளை வாசிக்க வேண்டிய தேவையை வாசகர்களுக்கு 'புழுதி' என்ற இந்த கவிதைத் தொகுப்பு உருவாக்காது என தாயதி நம்புவதாக பின்னட்டைக் குறிப்பு சொல்கிறது.

**சமூகத்தில் படிந்த ஒரு சொட்டுப் புழுதி இது.. சுவைக்காக;**

**ஒழிவிடம்**

**கழிப்பறைகள் கழுவும் எனக்கு**
**சுத்தமான ஒரு**
**கழிப்பறை வேண்டும்**

**பீடிக் கழிவுகளும்**
**சாராய போத்தல்களும்**
**கழிவறைக்குள்**
**கழிவுகளாக**

**பொதுக் கழிப்பறைதான்**
**என்றுமே**
**எல்லா ஊர்களிலும்**
**ஒழுக்க சீலர்களின்**
**ஒழிவிடமும்**
**மறைவிடமும்.**

இது போல் ஏராளமான புழுதிப் படிவுகளை சேகரித்து வந்திருக்கிறார் காரையன் கதன். எந்த சமூகத்திலும் இவ்வாறான புழுதிகள் என்றுமே தவிர்க்க முடியாதவைகளே. சமூகத்தின் குறைகளை கண்டு கொள்ளாத அரசியல் வாதிகளுக்கு மத்தியில் சமூக அவல அரசியலைப் பாடும் ஒரு கவிஞனாக கதன் மிளிர்கிறார்.




வகை: கவிதை
பக்கங்கள் : 80
விலை : ரூபா.290
வெளியீடு : புதுப் புனைவு இலக்கிய வட்டம் - மருதமுனை
நூல் : விசித்திரங்களால் நிறமூட்டப்பட்ட உலகு
கவிஞர் : ஏ.எம்.குர்ஷித்
கவிஞரின் தொடர்பு : +94722573155

யாருடைய ஒப்பனையும் பாவனையுமில்லாதது குர்ஷித்தின் கவிதைகள். தனக்கேயுரிய தனி மொழியொன்றுடன் வலம் வருகிறார். இவரது கவிதைகள் பாவ ஒப்புக்கோடலாய் பெண்ணுணர்வுகளை உள்வாங்கி வலிகளாய் வெளிப்படுகின்றன. குரல்வளை நெறிபட்டுக் கொண்டிருப்பவர்களின் குரல்களாயும் கேட்கின்றன. மேலும் எதிரே நடப்பவற்றுக்கு ஏதும் செய்யவொண்ணா பெருமூச்சுகளாயும் வெளிவருகின்றன. குர்ஷித் பழகுவதற்கு மென்மையும் இனிமையும் உண்மையுமானவர் இவரது கவிதைகள் போல என்கிறார் பின்னட்டைக் குறிப்பில் அம்ரிதா ஏயெம்.

**நகரம் சபித்தல்**

**சந்துள் திரும்புகையில்**
**தவறவிட்டாள் வண்ணக் குடுவையை**
**சிறுமி**
**சிந்திய கபில நிறத்தை**
**மரமாக்கினாள்**
**இலைகள் தளிர்த்தது**
**பூக்கள் பூத்தது**
**பறவைகள் வந்து பழங்கள் அருந்தின**
**தொடர்ந்தும்**
**அழித்தழித்து வரைந்தாள் சிறுமி**
**கட்டிடங்கள் முளைத்தது**
**நகரங்கள் தோன்றின**
**பின்**
**தரித்திரங்கள் தொடங்கியிருந்தன.**

**இலக்கு அழித்தல்**

நீக்கமற நிறைந்திருந்தது குட்டை
கல்லெறிந்தனர் சிறுவர்கள்
பிம்பம் கூறுற்று தளம்பின
திரும்ப வந்த நாளும்
எறிவதைத் தொடர்ந்தனர்
அறிவதை அறியாச் சிறுவர்கள்
பதினாறாவது நாள் கடந்த பின்னர்
குடம்பியாயும்
வாற்பேத்தையாயும்
இறந்து கிடந்தன
நீர் வாழ்வன.

# உன்னை நீ விரும்பிடு...

பாலமுனை பஸீனா

ஜகம் தனில் நிமிர்ந்து நீ
நிற்பதற்குப் பெண்ணே!
யுகம் தாண்டி சாதனைகள்
கற்பதற்குத் துணி கண்ணே!

கடந்தவைகள் தொலைந்தவைகள்
நினைந்து
உன்னைத் தொலைத்திடாதே பெண்ணே!
வருபவைகள் தருபவைகள் ஏற்க
துணிச்சல் எடுத்திடு நீ கண்ணே!

வெளுத்ததெல்லாம் பால் என நீ
நம்பிடாதே பெண்ணே!
உனை வெளுத்து நீ எழுந்து கொள்ள
முனைந்திடு என் கண்ணே!

பெண்ணியமே கண்ணியம் என்ற
வீண்வாதம் தேவையில்லை பெண்ணே!
உன் எண்ணமே ஈட்டித்தரும்
கண்ணியம் என
ஆசிகள் கூறுதிந்த மண்ணே...

கூவல்களும் கேவல்களும் கண்டு
உடைந்திடாதே பெண்ணே!
அவையெல்லாம் உன்னை ஏற்றிவிடும்
ஏணியென உறுதிகொள் கண்ணே!


உன் தோற்றத்தில் நாட்டம் கொள்ளும்
வலைகளுக்குள் சிக்கிடாதே பெண்ணே!
உன்னை வெற்றிக்குத் தோற்றப்பண்ணும்
கலைகளைக் கற்றுத் தேர்ந்திடு நீ கண்ணே!


தொடங்கல்கள் தரும்
தடங்கல்கள் கண்டு
துவண்டிடாதே கண்ணே!
சவால்களை சர்வசாதாரணமாய்க்
கடந்து எழுந்து வா
நீதான் சிங்கப்பெண்ணே!

அடுப்பங்கரையோடு மட்டும் நின்று
தினம் வெந்தொழியாதே பெண்ணே!
அரசியல் ஆதிக்கம் வரை
நீ வெகுண்டெழுந்து வா கண்ணே!

தினம் தினம் உன்னை நீ
பட்டை தீட்டிக்கொள் பெண்ணே!
பாண்டித்தியம் பெற்றால் நீயும்
தொட்டிடலாம் விண்ணே!

இவை அனைத்திற்கும் அடித்தளமாய்
முதலில் உன்னை நீ விரும்பிடு பெண்ணே!
இந்த உண்மை நீ உணர்ந்திடு
கண்ணே!






# நூல் அறிமுகம்

**அஷ்ஷெய்க் அஹமட் பிஸ்தாமி**

**நூல்: துயில்**
**எழுத்தாளர்: எஸ். ராமகிருஷ்ணன்**
தேசாந்திரி பதிப்பக வெளியீட்டின் என் இருபத்து ஒன்பதாவது நூலாக மேற்படி நூல் அமைந்துள்ளது.

இது ஒரு நாவல் சற்று தடித்து பெருத்த ஒரு நூல். 592 பக்கங்களைக் கொண்டுள்ளது. விலை இந்திய ரூபாய் 525/- முதல் பதிப்பு 2018. மொத்தமாக 32 அத்தியாயங்களை கொண்டுள்ளது.

நின்று நிதானமாக சுவைபட வாசிக்க வேண்டும். வரலாற்று பின்புலம் இருப்பின் நூலின் உள்ளடக்கத்தை புரிவது இலகுவாக இருக்கும். கிறிஸ்தவ பிரச்சாரம் எந்த அளவு திட்டமிடப்பட்டு பரவலாக்கப்பட்டுள்ளது என்பதனை தெளிவாக புரிந்து கொள்ள முடியும். குறிப்பாக கல்விப் பின்புலம் அற்ற மக்கள் வாழும் பகுதிகளில் அதன் செல்வாக்கு எப்படி காணப்பட்டது என்பதனையும் கிறிஸ்தவ தேவாலயங்களால் மக்கள் எப்படி லாவகமாக அதன் பக்கம் திசை திருப்பப் பட்டிருக்கின்றனர் அதற்கு சேவகம் செய்வதை எவ்வளவு உயர்வான கடமையாக கருதி செயற்படுகின்றனர் என்பதனையும் காணலாம். கண்முன்னே அழகான ஒரு திரைப்படம் காட்சிப்படுத்தப்பட்டு அதனை பார்த்துக் கொண்டிருக்கும் உணர்வை தருகிறது நாவல். இந்திய துணைக் கண்டத்தின் பட்டி தொட்டிகளை அதன் மக்களது வாழ்வியலை நாவல் நன்றாக படம் பிடித்துக் காட்டுகிறது.

இந்திய துணைக் கண்டத்தில் பரவலாக காணப்பட்ட கிறிஸ்தவ தேவாலயங்கள் அதன் பின்புலம் உலகளாவிய கிறிஸ்தவ மிஷனரி பிரச்சாரத்தின் அகன்ற பக்கங்கள் போன்றவற்றை பின்புலமாகக் கொண்டு நாவல் நகர்கிறது. குறிப்பாக கிறிஸ்தவ தேவாலய திருவிழா மற்றும் நாட்பட்ட நோய்கள், வியாதிகள் போன்றவற்றை தீர்த்துக் கொள்ள வரும் ரோகிகள் வழியாக மருத்துவ உலகின் மர்ம பக்கங்களை தோலுரித்து முடிச்சுகளை அவிழ்ப்பதாக உள்ளது.

நாவலின் பிரதான பாத்திரங்களாக அழகர் மனைவி சின்ன ராணி மகள் செல்வி காணப்படுகிறார். இவர்கள் அல்லாத இன்னும் பல சுவையான பாத்திரங்களையும் நாவல் எமக்கு அறிமுகம் செய்து உரையாட வைக்கிறது.

அத்தோடு மருத்துவ உலகுக்கு எதிராக மதம் சார்ந்த நம்பிக்கைகள் சடங்குகள் சம்பிரதாயங்கள் போன்றன எவ்வளவு திட்டமிட்டு தன் பங்கை ஆற்றி வருகின்றன அவை மனித வாழ்வை எந்த அளவு குரூரமாக பாதித்து வாழ்வை முடித்துக் கொள்ள வைக்கின்றன என்பதனையும் நாவல் அழகுற விபரிக்கிறது.

பொருளாதார மையம் கொண்ட உலகில் குறிப்பாக மனிதப் பெண் உடல் எவ்வளவு கீழ்த்தரமாக வணிக பண்டமாக விளம்பரப் பொருளாக இலாபத்தை மட்டுமே கொண்டு பயன்படுத்தப்படுகிறது என்பதனை குறியீட்டு வடிவில் சொல்வதாக நாவல் அமைந்திருக்கிறது. கடற்கன்னி வேஷம் இட்டு தன் துயரங்களை எல்லாம் விழுங்கி

தன் கணவனது கண்டிப்பான கட்டளைக்காக சின்ன ராணி படும் பாடு அவலம் அவஸ்தை இங்கே அடுக்கடுக்காக சித்தரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் ஜிக்கி நடத்தி வந்து விபச்சார விடுதி பெண்கள் எப்படி தம்முடலை விற்று ஆண்களின் இன்பத்தை போக்க தம்மை பயன்படுத்திக் கொள்கின்றனர் என்பதனையும் காணலாம்.

இந்தியாவில் வேர்விட்ட கிறிஸ்தவ தேவாலயங்களில் காணப்படும் பல பொறிமுறைச் செயல்பாடுகள் நகர்வுகள் மக்கள் கிறிஸ்தவ சமயத்தின் மீது கொண்டுள்ள ஆர்வம் போன்றனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும் கிறிஸ்தவ பிரச்சாரம் எந்த அளவு கனகச்சிதமாக இந்தியாவில் ஊடுருவி வேர் விட்டு கால் பதித்து உள்ளது, தன் பங்கை கனகச்சிதமாக நிறைவேற்றி வருகிறது, அதனால் கவரப்பட்ட மக்கள் அவர்களது மனோநிலை மனக்கட்டமைப்பு போன்றவற்றை தெளிவாக உயிர்ப்புடன் முன்வைக்கிறது.

மேலும் கிறிஸ்தவ தேவாலயத்தை மையப்படுத்தி நோயாளிகளுக்கு நோய் நிவாரணம் வழங்குவதை மக்கள் எப்படி எதிர்கொள்கின்றார்கள் நோய்மையால் வாடுவோரது உளவியல் நிலைப்பாடுகள், நவீன மருத்துவத்தை எதிர்ப்போரது உளவியல் மனோநிலை போன்ற இரு துருவ முரண்பாடுகள் விரிவாக அலசப்படுகின்றன.

மொத்தத்தில் நவீன மருத்துவம் அதன் அவசியம், முன்னேற்றம் ஆரோக்கியமான வாழ்வு போன்றவை அழுத்தமாக பேசப்படுவது போலவே மதம் சார்ந்த குருட்டுத்தனமான நம்பிக்கைகள் மரபுகள் ஐதீகங்கள் காரணமாக உண்மையான நோய்களும் வியாதிகளும் அடையாளம் காணப்படாமல் நோயாளிகள் பலிக்கடாக்களாக ஆக்கப்படுவது இன்றளவும் உள்ளதை ஊகிக்க முடியும். இவ்வளவு பேராபத்தான நிலை அது. நூல் எம்மோடு அருகில் நின்று மனச்சாட்சியை தட்டி எழுப்பி உரையாடுகிறது.

வழமை போல எஸ். ராமகிருஷ்ணன் தனக்கே உரித்தான பாணியில், தனக்கே வாகான சொற்கள் வழியாக மிக அருமையாக நாவலை நகர்த்திச் செல்கின்றார். சோவெனப் பொழியும் அத்தனை துளிகளையும் பூமி உறிஞ்செடுப்பது போல நாவலின் சொற்களை ஈரலிப்புடன் உள்வாங்கலாம். இயல்பான மொழியோட்டம் இறுதி வரி வரை இழையோடியுள்ளது.

ரயிலில் தொடங்கி ரயிலோடே முடிகிறது கதை.

ஆத்திகுளம் ரயில் நிலையம் கதை ஆரம்பமாகும் இடம். 1982 கதை முடிவடையும் இடம் 1982 ஆம் வருடம் ஒன்பதாவது திருவிழா. இரண்டு புள்ளிகளுக்கும் இடையில் கதையின் நகர்வு, வீச்சு, பேச்சு, போக்கு, திருப்பம் அனைத்துமே நெடுந்தூர ரயில் பயணம் போல வாசகர்களை காடு மேடு எல்லாம் கண்ட கண்ட திக்கு திசை எல்லாம் அழைத்துச் சென்று இன்பம் தருவதாக அமைகிறது.

வாழ்வின் எல்லா விதமான பரிமாணத்தையும் ஒவ்வொருவரது வாழ்வின் துயர் நிறைந்த பக்கங்களையும் வாழ்வின் நோக்கையும் எதற்காக வாழ்கின்றார்கள் எதனை நோக்கி அவர்களது வாழ்வு நகர்கிறது எதன்பால் இன்னொருவரால் அடுத்தவர்கள் அழைத்துச் செல்லப்படுகின்றார்கள் போன்ற வாழ்வியல் யதார்த்தங்களை துல்லியமாக நூல் எடுத்து சொல்கிறது.

நெடுந்தூரப் பயணம் ஒன்றில் அமைதியாக இருந்து வாசிப்பதற்கு மிகப் பொருத்தமான நூலாக இந்த நாவலை பரிந்துரைக்க முடியும்.

பதுளை ஸிபானா fபதா



# வறுமையின் அடிமைகள்

விடிவுதரா விடியல்கள்.
பசுமையற்று உண்டிச்சுருங்கி எழுந்திருக்கும்
எலும்புக்கூடுகள்...
அரை மயக்க நிலை விழிகள்
புன்னகை வற்றிய உதடுகள்.
தூக்கத்தை உண்ணும் காய்ந்த வயிறுகள்
தூக்கம் துரத்திய கனவுகள்.

யாரைப் பற்றியும் தேடல்கள் அற்ற பார்வை
சிந்தை முழுவதும் பசி.. பசி.. என்ற
ஒற்றைச் சொல்லின் எதிரொலி

ஒலியமிழ்ந்து வெளிவரும் சில வார்த்தைகள்
சோர்ந்து விழுந்து கிடக்க
ஓட்டை விழுந்த பாய்த் துண்டு

பசியிலழும் வறுமையின் வாரிசுகள்...
தேற்றிட திராணியற்ற குடிசை ராணிக்கும்
பசியாற்ற குடித்த தண்ணீரை வியர்வையாய்
வெளியேற்றி உழைக்கும் வீட்டு
தலைவனுக்கும் கனவு ஒன்றுதான்
ஒரு பிடி உணவு
மீண்டும் இரவு
வழமையான விடியல்
ஒப்புவித்த அதே கெடுபிடிகள்
கனவு ஒன்றுதான்
ஒரு பிடிஉணவு
ஏனெனில்....
அவர்கள்
பசியினால் மூளை சலவை செய்யப்பட்ட
வறுமையின் அடிமைகள்...

# நிறைவேறாக் காதல் !

மு.ஹ. முர்ஷிதா ஷிரீன்
சம்மாந்துறை

கன்னிப் பருவத்து
கனவுகளின் நிஜங்களாய்
பகைமையும்
பட்டாம் பூச்சியாகி
சிறகடித்து வலம் வருகையில்

துரோகங்கள் தூதானதால்
நொறுக்கப்பட்ட இதயங்கள்
இருப்பிடம் தொலைத்து தூரமானவை
செய்தியாகி, பின்
துரோகத்து வாடை நுகர்வில்
உருப்பெருக்கப்பட்டு
பேணுதல் இஞ்சளவும் இல்லாமல்
கால்கைகளுடன்

உச்சம் தொட்ட உணர்வையும்
உருக்குலைத்து
மீளெழுவிடாமல்
முட்டுக் கட்டையாய்
முழு மதி
தொலைந்து அமாவாசையாய்

எது எவ்வாறெனினும்
பீனிக்ஸ்சாய் பிறப்பெடுக்கையில்
இரும்பு இதயங்களின்
இட்டுக் கட்டுகளால்
அல்லலே அனைத்துமாகி
இருளாகிறது இதயம்
சிலுவை சுமந்த
ஏசுநாதர் போல்
நிமிடங்கள் கரைந்து
வருடங்கள் பிரசவிக்கப்படுகையில்
வம்சம் பேசும்
வரலாற்று தளும்பாய்

அற்புதம் அனைத்தும் இழந்து
அகதியாய்
அவதியுறுகிறது
நிறைவேறாததொரு நிஜக் காதல்.

# துரோகம்...



- தோப்பூர் எம்.என். பாஜித் -

கவலைகள் குளிக்கும்
கண்ணீர் நிறைந்த
கரிய இரவுகள் கூடிய உப்பு தேசம்
வலிகளும் வடுக்களும்
நிரம்பிய வன்மப் பிரதேசம்

நிகழ்வுகள்
நிதர்சனமென்று
நம்பிக்கை கொண்ட மனம்
கலங்கி நிற்கும் கண்ணீர் தேசம்

காயங்களால் நிரப்பப்பட்ட
கலியுகம் நிறைந்த பாசங்கள்
வேசமிட்டு பரிதவிக்கவிட்ட இடம்

மரணத்தின் வலியைவிட துரோகத்தின் வலி
கொடுமையானது என உணரப்பட்ட
உண்மைப் பிரதேசம்

அதிகம் நேசிக்கப்பட்டவர்களால் வழங்கப்படும்
நம்பமுடியாத கொடூரம் நிறைந்த
கொடிய பரிசு........


முகமறிந்தவர்களால்
முதுகில் குறிவைத்துக் குத்தப்பட்ட
முதிர்ச்சி நிறைந்த முக்கிய புள்ளி .....

உள்ளங்கள் உடைந்து
உறவுகள் சிதைந்து
மௌனங்களும் கண்ணீரும் சந்திக்கும்
கலிகள்கள் நிறைந்த முற்றுப்புள்ளி.... ..

பட்டங்களாலும் படிப்பறிவாலும் வென்றுவிட
முடியாது.
பட்டறிவாலும் அனுபவத்தாலுமே
அதைக் கடந்து விட முடியும் என்பதை உணரும்
உன்னத புள்ளி .......

துரோகத்தை சிலர் துணிந்து வென்று விடுவர்
பலர் முடங்கிக் துவண்டு விடுவர்

இறைவா டை... துரோகத்தை
சந்திக்க வைக்காதே துரோகம் சதிகளில் மிகக்
கொடியது.... கொடியது .....



இதயக் கூடு மலர்கிறது
மனதாரப் பகிரும் போது

அன்பைப் பகிரும் போதும்
அறிவைப் பகிரும் போதும்
உணவைப் பகிரும் போதும்
ஆறுதலாய் சில வார்த்தைகளைப்
பகிரும் போதும்
இதயத் தோட்டம் மலர்கின்றது

மனிதத்தையும்
பண்பாட்டையும்
பகிரும் போது
ஒரு மலர்
பூங்காவனமாய் ஆகிறது

அங்கு மனிதம் சுமந்த
வண்ணாத்திகள் வலம் வருகின்றன

– முபர்ரிஜ் நயீம் –



# தியாகத் திருநாள்

ஹுமைரா அல் அமீன்
பதுளை

அரை மணி நேரத்திற்கும் மேலாக அந்த இறைச்சிக்கடை வாசலில் நிற்கும் கூட்டத்திற்குள் முட்டி மோதிக் கொண்டு கால் கடுக்க நிற்கிறார் இஸ்மத் நானா. அது நகரின் ஒரே இறைச்சிக்கடை என்பதால் அங்கே விரைவாகவே இறைச்சி முடிந்து விடும். பிற்பகலில் கடையை அடைத்தும் விடுவார்கள்.

இஸ்மத் நானா கேட்ட இருநூற்றைம்பது கிறாம் இறைச்சி இன்னும் கிடைத்த பாடில்லை. கடைக்காரரோ, அவருக்குத் தெரிந்தவர்களுக்கும் தொடர்ந்து வாங்குபவர்களுக்கும் என்று முதலிடம் கொடுக்கிறார். இறைச்சி வெட்டுபவரிடம் சொல்லி அவர்களுக்கான இறைச்சியைப் பொதி செய்து கொடுத்துக் கொண்டிருக்க, இஸ்மத் நானாவுக்குப் பிறகு வந்த பலரும் வாங்கிச் சென்று விட்டார்கள்.

பணத்தைக் கொடுத்திருக்காவிட்டால் திரும்பியாவது சென்றிருக்கலாம். பணத்தையும் கொடுத்தாகி விட்டது. அதனால் நின்று வாங்கியே ஆக வேண்டும். இறைச்சியும் முடிந்து கொண்டிருக்கிறது. கிடைக்குமா? என்று மனதுக்குள் எழுகின்ற கேள்வியோடு இஸ்மத் நானா மீண்டும் மீண்டும்

“இருநூற்றைம்பது கிராம்” என்று சத்தமாகக் கேட்கிறார்.

“கொஞ்சம் இருங்க, நானா. டெய்லி கஸ்டமர்ஸ்கு முதல்ல கொடுத்து முடிக்கனும்” என்று சொல்லிக் கொண்டே,

“அந்த டை போட்ட மாத்தியாவுக்கு ஒரு கிலோ வெட்டு தம்பி”

என ஏவிய கடைக்காரர் மீது ஆத்திரமாக இருக்கிறது இஸ்மத் நானாவுக்கு. இருந்தாலும் குழந்தைகளின் முகம் ஒரு கணம் கண்ணெதிரே வரவும் பொறுமையோடு காத்திருந்தார்.

இஸ்மத் நானா ஒரு மூட்டைத் தூக்கும் தொழிலாளி. தூக்கும் மூட்டைகளின் அளவுதான் கூலி கிடைக்கும். மாதம் ஒரு நாளோ அல்லது இரண்டு மாதங்களுக்கு ஒரு முறையோ தான் கொழும்பிலிருந்து பெரிய லொறியாக வரும். அந்த நாளில் கொஞ்சம் அதிகமாக வேலையிருக்கும். கூலியும் ஏனைய நாட்களை விட கொஞ்சம் அதிகமாகக் கிடைக்கும்.

இஸ்மத் நானாவுக்கு ஐந்து பிள்ளைகள். நான்கு பெண்களும் ஒரு ஆண் குழந்தையுமாக ஐவருமே பாடசாலை செல்பவர்கள். அவர் உழைப்பு போதாது என்றாலும் அவர் மனைவி ரஹ்மத்தும்மா அந்த வருமானத்தை எப்படியோ சமாளித்து குடும்பத்தை நடத்திக் கொண்டிருக்கிறாள். ஒரு நாளைக்கு ஒரு கறி தான். அதுவும் பருப்போ சம்பலோ குறைந்த செலவில் செய்யக் கூடிய ஏதாவது தான் இருக்கும்.

கூலி கூடுதலாக கிடைக்கும் இந்த ஒரு நாளில் மீனோ இறைச்சியோ முட்டையோ வாங்கி வருவார். அதிலும் இறைச்சி கொண்டு வரும் நாள் குழந்தைகளுக்குப் பெருநாள் தான். அவரும் மனைவியும் ஆணத்தை மட்டும் ஊற்றிக் கொண்டு கறி முழுவதையும் குழந்தைகளுக்காக தியாகம் செய்து விடுவார்கள்.

அவர் அந்த இறைச்சிக் கடையின் தொடர் வாடிக்கையாளர் பட்டியலில் இல்லைதான். அதனாலேயே இறைச்சிக் கடைக்காரருக்கு அவரை பெரிதாக அறிமுகமும் இருக்கவில்லை. அடிக்கடி பார்க்காத அவர் முகம் ஞாபகத்திலும் நிற்கவில்லை.

இருந்திருந்து ஒரு நாள் குழந்தைகளுக்கு சுவையாக சாப்பிடுவதற்கு என்று வாங்கிச் செல்லும் இறைச்சிக்காக நேரம் சென்றாலும் பரவாயில்லை என்று காத்திருந்தார் இஸ்மத் நானா.

“எங்க போனாலும் தெரிந்தவங்களுக்கும் கொஞ்சம் ஸ்மாட்டா உடுத்தி வாரவங்களுக்கும் தான் முதலிடம் கிடைக்கிது. எங்களப் போல ஏழைகளுக்கு தானே இருந்திருந்து இறைச்சி சாப்பிட கிடைக்கிற. அத யோசிச்சாவது இறைச்சி முடிய முன்னுக்கு ஒரு துண்டு தந்தாங்க எண்டால் சரிதான்?” என்று அவர் மனம் குமுறிக் கொண்டிருக்க, ஒரு வாறாக அவர் கேட்ட இருநூற்றைம்பது கிறாம் இறைச்சிப் பொதி கைக்கு வந்தது. ஏதோ பெரிய பொக்கிஷம் கிடைத்து விட்டதைப் போல உள்ளம் துள்ளிக் குதிக்க மகிழ்ச்சியோடு வீடு நோக்கி நடந்தார் இஸ்மத் நானா.

வீட்டுக்கு சென்று மனைவியிடம் கொடுக்க அவளும் நேரம் சென்றிருந்தாலும் பரவாயில்லை என்று சமைப்பதற்காகப் பொதியைப் பிரிக்கிறாள். அங்கே சிறிய ஒரு இறைச்சித்துண்டும் சவ்வும் முள்ளுமாக, இந்த ஒரு துண்டு இறைச்சியை ஐந்து பிள்ளைகளுக்கும் பிரிப்பதெப்படி. யோசனையோடு சிறிய துண்டுகளாக வெட்டி சமைக்கிறாள் ரஹ்மத்தும்மா.குளித்துவிட்டு சமையலறைப் பக்கம் வந்த இஸ்மத் நானாவிடம்,

“பாத்து கேட்டு வாங்குற தானே. இப்படி சவ்வும் முள்ளுமா தந்திரிக்கிறாங்க. இருந்திருந்து கொண்டுவாற இறைச்சித் துண்டுலயும் திங்கிறதுக்கு ஒண்டுமில்லாட்டி என்ன செய்ற?”

என்று அவள் கேட்ட கேள்விக்கு பதில் சொல்லாமல் அமைதியாக முன் அறைக்குச் செல்கிறார் இஸ்மத் நானா. அந்த இறைச்சியை வாங்குவதற்கு அவர் பட்ட பாட்டை அவளிடம் சொல்லிப் புரிய வைத்து விட முடியுமா என்ன?

அன்றைய நாளிலும் எப்போதும் போலவே அரையும் குறையுமான இறைச்சிக் கறியை ஐந்து குழந்தைகளுக்கும் பகிர்ந்தளித்து அகமகிழ்கிறார்கள் தாயும் தகப்பனும். அவர்கள் இருவரும் சரியாக இறைச்சிக் கறியொன்று சாப்பிட்டு எவ்வளவு காலம் ஆகிறது என்பது ஞாபகத்தில் கூட இல்லை.

இஸ்மத் நானாவின் வீடு நகர் புறத்திலிருந்து கொஞ்சம் தள்ளியதான ஒரு கிராமத்தில் இருக்கிறது. அந்த ஊரில் முஸ்லிம்கள் அவர்கள் குடும்பம் மட்டும் தான். அதனால் அவர் தொழுகைக்காக நகரிலுள்ள பள்ளிக்குத் தான் போவார். பள்ளி வரியெல்லாம் சரியாகக் கொடுத்து விடுவார். ஆனாலும் நோன்பு காலங்களில் வரும் ஸகாத் ஸதகாக்களோ, ஹஜ்ஜுப் பெருநாளின் குர்பான் பொதிகளோ அவர் வீட்டைத் தேடி வருவதில்லை. அவராகச் சென்று கேட்கும் போது எஞ்சியிருப்பதுமில்லை.

ஹஜ்ஜுப் பெருநாளைக்கு இன்னும் ஒரு வாரம் தான் இருக்கிறது. “இந்த முறை ஹஜ்ஜுப் பெருநாளைக்காவது ஒரு குர்பான் பொதி கிடைத்தால்..?” இஸ்மத் நானா ஏக்கப் பெருமூச்சோடு அஸர் தொழுகைக்குச் செல்வதற்காக எழுந்தார். எப்போதும் போல தொழுகை முடிந்ததும் உணவில் பரக்கத்தை வேண்டியும் பிரார்த்தித்துக் கொண்டார்.

நாட்கள் விரைவாகக் கடக்க நாளைய பெருநாளுக்காய் முஸ்லீம்கள் எல்லோரும் மகிழ்ச்சி பொங்க தயாராகிக் கொண்டிருந்தார்கள். இஸ்மத் நானாவும் தன்னால் முடிந்த வகையில் குழந்தைகள் ஐவருக்கும் உடைகளை வாங்கிக் கொடுத்தார். ஆனால் சமைப்பதற்கு விசேடமாக எதுவும் வாங்க அவரிடம் பணமிருக்கவில்லை.

மறுநாள் காலையில் மனைவி குழந்தைகளோடு பெருநாள் தொழுகைக்காக பள்ளிக்குச் சென்றவர், தொழுகை முடிந்ததும் மனைவியையும் குழந்தைகளையும் வீட்டுக்கு அனுப்பி விட்டு குர்பான் ஏதாவது கிடைக்குமா என்று பள்ளியிலேயே காத்திருந்தார். வெகு நேரமாகக் காத்திருந்தும் பள்ளியில் எந்த

அறிவித்தலும் இல்லை. "சரி இருக்கும் எதையாவது சமைத்து குழந்தைகளின் பசியைப் போக்குவோம்" என்று எண்ணியவறாக வீட்டை நோக்கி நடந்தார் இஸ்மத் நானா. முஸ்லிம் வீடுகளைக் கடக்கும் போதெல்லாம் சமைக்கும் வாசனை அவர் நாசியைத் துளைத்தது. "என் குழந்தைகளுக்கும் இப்படி வாசனையான ஒரு உணவை எப்போது சமைத்துக் கொடுக்கக் கிடைக்குமோ?" என்ற கவலை அவர் கண்களில் கண்ணீரை நிறைக்க, நடை தளர்ந்தவராக மெதுவாகவே வீடு நோக்கி நடந்தார்.


வீட்டை நெருங்கும் போது வீட்டினுள் இருந்து வந்த பெருநாள் உணவின் வாசனையில் ஆச்சரியமடைந்தவர் ஸலாம் சொல்லிக் கொண்டு வீட்டினுள் சென்றார். மஞ்சள் சோறும் இறைச்சிக் கறியும் கத்தரிக்காய் பொரியலும் என்று மனைவி ரஹ்மத்தும்மா சமைத்து பரிமாறத் தயாராக வைத்திருந்த உணவுகளைப் பார்க்க அவரது ஆச்சரியம் இன்னும் அதிகமானது.

"எப்படி இதெல்லாம்?" இஸ்மத் நானா கேட்க,

"ரஹீம் ஹாஜியார் குர்பான் பார்ஸலோட இன்னும் அரிசி கறி சாமான் எல்லாம் அனுப்பியிருந்தாரு. நீங்களும் பசியோட வருவீங்க எண்டு உடனே சமைச்சேன். இந்த முற ரஹீம் ஹாஜியார் டவுன்ல யாருக்கும் குர்பான் பார்சல் குடுக்கல்லியாம். பள்ளி மஹல்லா லிஸ்ட்ல இரிக்கிற கஷ்டமான ஆக்கள பாத்து தானாம் குர்பான் பார்சல் பிரிச்ச. நல்ல பெரிய பார்சல். நெறப்பமா இறச்சியும் இருந்திச்சி. அரிசி கறிக்கெல்லாம் சேத்து தானாம் குடுத்த. பள்ளில இருந்து வாரதோடயே கொண்டு வந்தும் தந்துட்டாங்க" என்று புன்னகையோடு சொன்னாள் ரஹ்மத்தும்மா.

மனமெங்கும் மகிழ்ச்சியும் திருப்தியும் நிறைய இறைவனுக்கு நன்றி சொல்லி ரஹீம் நானாவுக்காக பிரார்த்தித்து விட்டு மனைவியோடும் குழந்தைகளோடும் சாப்பிடத் தொடங்கினார் இஸ்மத் நானா.

**(முற்றும்)**




**எஸ். ஃபாயிஸா அலி**

உறவென்று
நம்பிக் கொண்டிருப்பவர்களால்
ஏற்கனவே
நாம் கைவிடப்பட்டிருக்கிறோம்
என்பதைக் காலந்தாழ்த்தியே
நம்மால்
உணர முடிகின்ற
கணங்கள்தான்
ஆகவும் கொடுமையானவை.

அந்த இடைப்பட்ட காலங்களில்
நாம் என்னவாக இருந்திருக்கிறோம்
என்பதை
உப்புச்சாரலோடு
உணர்ந்து கொள்வதிலிருந்து
தொடங்குகிறது...
நமக்கே நமக்கான
சுயபச்சாதாபங்கள்.

# வேரும் விழுதுகளும்.

வேரை மறந்து
வாழும் விழுதுகள்
நாளும் மலிந்து
கடக்குது பொழுதுகள்

விதைத்தவன்
அழுவதும்
சுமந்தவள்
விழுவதும்
காலங்காட்டும்
புது விதக் கோலம்

துயரில் தாங்கும்
உறவுகள் எங்கே
உயிரில் கலந்த
உணர்வுகள் எங்கே

மாயம் செய்யும்
ஆசை தனிலே
மூழ்கும் போது
பாரம் நெஞ்சிலே

பூவையும் காயையும்
தாங்கிய வேர்கள்
பூமியினுள்ளே
மறைந்தே மணக்கும்

உறவுகள் என்னும்
விழுதுகள் தாங்க
கிளைகள் பரப்பும்
நிழல்கள் கொடுக்கும்

விதைகள் போட்ட
வேரை மறந்தால்
வதைகள் கொண்ட
வாழ்வே அமையும்

அட்பப் பொருளும்
காசுத் தாளும்
கடமை மறக்கச்
சொல்லும் ஒரு நாள்

அந்நாள் மனிதம்
அழியும் நாளே
படைத் தோன்
நம்மை
இகழும் நாளே

**கிழக்கு வானம்**
**முஸ்தபா மௌஜூத், தோப்பூர்**

# வானொலி..




**பஸ்லா பர்ஸான்**
**காத்தான் குடி**

காற்றில் கலந்து வானில் மிதந்து..
கீற்றாய் வந்து காதில் பாயும்...

இசையாய் அசைந்து திசைகள் பரந்து...
பசையாய் ஒட்டி மனதில் பதியும்...

அலையாய் நடந்து கலைகள் பயின்று ...
வலையாய் இன்பச் சிறையில் தள்ளும்...

கடல்கள் கடந்து மடல்கள் பகர்ந்து...
உடல்கள் பிரிந்தாலும் உள்ளங்களை
இணைக்கும்...

குரல்கள் வழியே நிரல்கள் கேட்டு...
விரல்கள் அசைத்தே விருந்தும் சமைக்கும்...

காலைப் பொழுதில் சாலை எங்கும்...
வேலைக்கு ஊக்கம் தந்தே சிறக்கும்...

மாலை நேரம் ஓலை ஆகும்...
மாலையாக மணமாய் மனதை வருடும்...

காலை மதியம் இரவு எனவே...
வேளை மூன்றும் செய்திகள் பகரும்...

காற்றின் மொழியாய் வீற்றே இருக்க..
ஆற்றும் சேவை என்றும் வாழ்க...

# பெண்ணின்றி அமையாது உலகு

(சந்தக் கவிதை)

கிண்ணியா சபீனா



கண்ணியங் கண்டிடும் கருவறைப் பெருமையும்,
பெண்ணியங் கொண்டிடும் பெரிதெனும் பொறுமையும்,
தண்ணொளி மின்னிடும் தளர்விலாத் தகைமையும்,
மண்ணிலே பெண்ணினால் மலர்ந்திட மணக்குதே!

மென்மையிற் பெண்மையின் மெருகிடும் மேன்மையும்,
நன்மைகள் அள்ளிடும் நலமெனும் வாண்மையும்,
இன்புடன் மங்கையின் இணைவினிற் கேண்மையும்,
அன்னையின் அன்பிடும் அறங்களும் அழகே!

மங்களம் வாழ்வினில் மாண்புடன் பொங்கிட,
சங்கமந் தந்தவன் சந்ததம் போற்றிட,
நங்கையின் நெஞ்சினில் நளினமுன் னயமிடத்
தங்கிடுந் துணிவினாற் றரணியும் நிமிருமே!

அஞ்சுகப் பெண்ணிலா அவனியும் குழம்பிடும்,
கொஞ்சிடும் மனுவினக் குலமதும் அழிந்திடும்,
விஞ்சிடும் பன்முகம் வியந்திடத் தருமவள்,
நெஞ்சினில் நிம்மதி நிரப்பிடும் அருவியே!

உலவிடும் அறிவையு முரிமைக ளிழந்திட,
நிலவிடுங் கொடுமைகள் நிரம்பியும் வழிந்திட,
பலவிதப் பரிமளம் பறிபடும் நிலையெழ,
பலமிடும் பக்குவம் பற்றிடத் துடிப்பளே!

கற்றிடும் பெண்ணவள் கருத்துடன் நடந்திடப்,
பெற்றிடும் பண்பினாற் பெருமையைப் பற்றிடச்,
சுற்றிடுந் துன்பமுஞ் சொட்டிலா துதிர்ந்திடும்,
அற்றிடா தின்பமும் அருவியாய்க் கொட்டுமே!

# மைல் கணக்கு தொலைவில் நீ...

மைல் கணக்கு தொலைவில் நீ இருக்கிறாய்...
தாங்கிட முடியாமல் நான்
தனிமையில் தவிக்கிறேன்

மீள முடியாத ஒவ்வொரு தாக்கத்திலிருந்தும்
என்னை மீட்க முயற்சித்தேன்

என்னுள் புதைந்த உன்னை
மீட்க முடியாத அளவிற்கு
தொலைத்து விட்டேன்...


என் அத்தனை புன்னைக்கு பின்னாலும்
என் அத்தனை அழுகைக்கு பின்னாலும்

உன்னோடு நான் வாழ்ந்த
அந்த குறுகிய காலத்தின்
அதீத தாக்கம் உண்டு

உன் மீது நான் கொண்ட ஈர்ப்பிற்கு
பெயர் வைக்க முடியவில்லை என்னால்

ஆனால் அது காதலை விட
ஆழமானது என்பது மட்டும் உறுதி

உன்னிடத்தில் உன் அன்பை தவிர வேறு
எதையும் எதிர்பார்த்ததில்லை என் இதயம்






காயம் பட்ட பல ஆறாத தழும்புகளுக்கு
உன் அன்பான இரண்டு வார்த்தைகள் தான்
மருந்து

உன் பாசமான பார்வையும்
பேச்சும் போதும் எனக்கு
என் ஏக்க தாகம் குறைந்து
உன் அன்பில் குழைந்து விடுவேன்

எத்தனை பேர் என்னை சுற்றி
நடமாடினும் உறவாடினும்
உன்னைப்போல் யாரும்
என்னை இப்படி நேசிக்கவில்லை

விதி போட்ட விளையாட்டு
நீ தொலைவாகி போனாய் என்னை விட்டு

இன்னும் ஏதோ ஒரு ஏக்கம்
மீண்டும் யாவும் மாறாதா என்று

என் நடுங்க வைக்கும் இரவுகளை இனிதாக்கியவள்
நீ...

அலங்கோலமான என் கடந்த காலத்தில்
ஓர் அழகிய பக்கம் நீ...

இன்றும் என் வாழ்வில் நான் படிக்க விரும்பும்
இலக்கணக் கவிதை நீ...

என் அன்பு எத்தனை ஆழம் என்று
நீ... அறிந்திருக்க வாய்ப்பில்லை

என் வலிகள் எத்தனை கனம் என்றும் என்னால்
புரியவைக்க முடியவில்லை...

வேலிகள் பல கடந்து உன்னை நாடி வருவது
என்னவோ உன் அன்பிற்காக மட்டுமே...

நீ தூரமாகத்தான் இருக்கிறாய்...
ஆனால் என்றும் மிக ஆழமாக இருக்கிறாய்...



# கவிஞர் ஜலீலா முஸம்மில் ஏறாவூர்

# காஸா எனும் கர்பலா...



அதிகொடூரத்தின் கேந்திரம்
இஸ்ரேலெனும் தந்திரம்
அராஜகத்தின் அடித்தளம்
அகிலத்திற்கோர் அவமானம்

வந்தேறிகள் வக்கிரமாய்
வலிந்து பிடுங்கும் அவலமிது
ஏதிலியாய் சொந்தநிலத்தில்
ஏங்குகின்ற நிலையிது

ஏகாதிபத்திய ஈனர்களின்
ஏவுகணைத் தாக்குதலால்
இலங்குகின்ற இறைசுவனம்
தவழுமந்தப் பால்முகங்கள்

எட்டப்பன் வேலை பார்க்கும்
எத்தர்களின் இழிவினிலே
இளங்கொழுந்து மழலையரும்
இரையாகிப் போயினரே

காஸா
ஷஹீதுகளின்
கருவறையாய் மிளிர்கிறது
சொர்க்கத்து செம்மலர்களின்
செழுங்காப்பகமாய்ப் போனது

சேற்றின் சகதியிலே
சயனம் கொள்கின்றார்
காற்றின் மாசுதனை
சகித்து வாழுகிறார்

பாதுகாப்பான இடமில்லை
பரிதவித்து வாழுகிறார்
புறாக்கூடு போன்றதொரு
கூடாரத்தில் வசிக்கின்றார்

கூழோ கஞ்சியோ
குடிப்பதற்கு அரிசியில்லை
புல்லறுத்துக் கூழ்சமைத்து
பசியின் குரூரத்தை வெல்கின்றார்

துயரத்தின் காட்சி கண்டு
துக்கிக்கும் எம் நெஞ்சங்கள்
தேற்றிடவும் பசியாற்றிடவும்
தேசங்கள் வரவில்லை

நாதியற்று வாழ்ந்தாலும்
பீதியுற்று ஓடவில்லை
கதிகலங்கும் நிலைவரினும்
கனக்குமவர் கொள்கைகள்

குண்டு மழைப் பொழிவினிலே
குழந்தைகளும் பலியாகிடவே
குரூரமிக்க கயமை கண்டு
கொந்தளிக்கும் இதயங்கள்

செல் வீழ்ந்து கட்டடங்கள்
சிதிலமாகிக் கிடக்கையிலே
சிக்கிய சகோதர ஓலத்தில்
செவிப்பறைகள் வெடிக்கிறதே

சாத்தானியத்திற்கு சாவில்லையா
சத்தியவழிக்கு இடமில்லையா
சூழுமந்த இடர்போக்க
சுற்றங்கள் வரவில்லையா

சாம்பலும் புகையும்
ஷஹீதுகளின் இரத்தமுமாய்
தூயநிலத்தில் தோய்ந்ததம்மா
தீன்சுவனவாடை காஸாவில் வீசுதம்மா

பலத்த ஈமான் கொண்டவர்கள்
பழுத்த இறைபக்தி பேணுபவர்கள்
ஞாலத்துவாழ்வை அற்பமாக்கி
சுவனத்தின் சுவைகாணப் பிறந்தவர்கள்

ஏது செய்ய சகோதரமே
ஏகனவன் உதவி வரும்
ஏந்துகின்ற இருகரங்கள்
எத்தனையோ உமக்காக

நீர்க்குமிழி வாழ்க்கையிது
நிலையில்லா உலகமிது
பீசபீல் மௌத்தினிலே
பெருஞ்சுவனம் பெற்றிடுவீர்

துயர் செரித்து அருள் செழிக்க
தூயவனை சிரம்பணிந்தோம்
தியாகத்தின் தேசமதில்
தழைக்கும் சமாதானம் இறைஞ்சுகிறோம்

காஸாவெனும் கர்பலாவில்
காத்திருங்கள் கண்மணிகாள்
காப்பவனாம் அல்லாஹ்வின்
மகத்தான நற்சேதி உண்டு உங்களுக்கு

# பாதை செ(ா)ல்லாது போதை



## கலேவெல லரீபா பதுர்தீன்

போதைக்கு அடிமையாகிய மானிடா
வாழ்வைத் தொலைக்கிறாய் ஏனடா?
பேதை மனமே
அதில் நீ காணும் சுகம் தான் ஏதடா?

உற்றமும் சுற்றமும்
உனை விலக்க
உதவாக் கரையென்று
ஊரெல்லாம் தூற்ற
கற்கும் வயதில் இது ஏனோ?
பெற்றவர் கனவுகள் வீண் தானோ?

அழிவின் பாதையை நாடி
அழகென்று உலவுகிறாய் கூடி
வழி தவறி நீயும் ஓடி
வாழ்வினைத் தொலைக்கிறாய் தேடி

தள்ளாட வைக்கும் உனையும்
தள்ளியே விட்டிடும் படுகுழியில்
பள்ளத்தில் வீழ்த்திடும் அறிந்திடு
பாவம் என்பதை உணர்ந்திடு

உடலும் மனமும் சிதைந்து
உண்மை உருவும் அழிந்து
இனிய வாழ்வும் மறைந்து
இழிவடையும் உன் வாழ்வு ஒழிந்து

விட்டே போதையை ஒழித்திடு
விரைந்து நீயும் திருந்திடு
விழிப்பை மனதில் ஏற்றிடு
விலகியே நடக்கப் பழகிடு

# துரோகம்



உள்ளம் உடைந்து ஊமையாய் அழுகிறது
இமையில் நழுவும் கண்ணீத்துளி
வலியைப் பாடி நகர்கிறது

ஒரு பொழுதில் உண்மையென, உயிரென
நேசித்த உறவாயிருந்தாய் நீ

இன்று சுயரூபம் காட்டி
எண்ணுயிர்க் கொன்று போனாய்

நீ கொடுத்த துரோகத்தின் வலிகளை
எந்த வார்த்தைகள் கொண்டு
நானெழுத?

நீளும் இரவினில்
தூங்காத நினைவினில்
நித்தமும் என் இருவிழி அருவி
கொதிக்கிறது

நீ சிதைத் நெஞ்சில்
இன்னும் காய்ந்திடாத அன்பின் ஈரம்

துரோகத்தை பரிசாக்கி
பிரிவை வரமாய்த் தந்து செல்லும்
உனக்குப் புரியுமா என் உண்மைக் காதல்?

நேசங்களை விலை பேசும் தேசத்தில்
உண்மை அன்பை உன்னிடம் தேடியது
என் குற்றம்தான்.

**எம்.ஐ. நஷீஹா**
**காத்தான்குடி**



# விதியின் வழியில்..

வரிபத்தன்சேனை ரஸ்மியா

அந்தக் காலை வேளையிலும் விடாமல் பெய்து கொண்டிருந்தது மழை. திண்ணையில் கிடந்த கட்டிலில் சுருண்டு படுத்துக் கொண்டிருந்தான் அனீஸ். இரண்டு அறைகளைக் கொண்ட அந்த வீடு இனி ஒழுகுவதற்கு இடமே இல்லை என்ற நிலை போல் கூரையிலிருந்து நீர் வடிந்து கொண்டே இருந்தது. ஒழுகும் இடங்களில் பாத்திரங்களை வைத்துக்கொண்டு வந்த பசீனா நிமிர்ந்து கடிகாரத்தைப் பார்த்தாள். நேரம் காலை ஒன்பது மணியைத் தாண்டி இருந்தது. அவளது பிள்ளைகள் இருவரும் மழை நீரில் காகித கப்பல் செய்து விளையாடிக் கொண்டிருந்தனர்.

கணவன் அருகே சென்ற பசீனா அவனை எழுப்பத் தொடங்கினாள்.
“இஞ்ச எழும்புங்க 10 மணி ஆக போது இவ்வளவு நேரத்துக்கு நீங்க எழும்புற இல்லையா? எவ்வளவு நேரம் ஆகுது இன்னும் என்ன படுக்க வேண்டி கெடக்கு எழும்புங்க” அவன் தோளைத் தொட்டு உசுப்பி எழுப்பி விட்டாள். அனீஸ் எழும்புபவனாக இல்லை.

“சும்மா இரு இந்த மழைக்குள்ள ஒழும்பி என்ன செய்ய செல்றாய்? மழ உடட்டும் அப்ப எழும்புறன்”. எனக் கூறிவிட்டு மீண்டும் தூங்க தொடங்கினான்.

பசீனா “என்னே.. மழைக்குள்ள ஒழும்பி என்ன செய்றயா? கொஞ்சம் ஒழும்பி இந்த ஊட்ட ஒங்கட கண்ணால பாருங்க ஒழுகி ஒழுகி ஏனம் வைக்க எடமும் இல்ல ஊட்டுல.. ஒங்களுக்கு என்ன படுத்துட்டீங்க நானும் என்ற பிள்ளைகளும் விடிய விடிய ஒரு மூலைக்க குந்தி இருந்தது ஒங்களுக்கு எங்க தெரியும் ஒழும்பி பாருங்க கொஞ்சம் நானும் எப்ப கூடி செல்றன் இந்தக் கிடுகு இறந்து பெயித்து தகட்ட வாங்கி அடிங்க அடிங்க எண்டு நீங்க காதுலையும் கேளாத மாதிரி திரியுறீங்க...”

“அசீம்ட வாப்போவ்... ஒங்களத்தான் செல்றேன்... நான் கறி வாங்கையும் ஒரு சத காசும் இல்லாம குந்தி இரிக்கன் அவர் என்னண்டும் கேட்க்காம படுக்காரு” தன் ஆதங்கத்தை வெளிப்படுத்திக் கொண்டிருந்தாள் பசீனா.

“நீ என்ன நிம்மதியா படுக்க கூட உடமாட்டியா காசில்ல காசில்ல அத செய் இத செய் எண்டு.... சும்மா கணகாட்டுப் படுத்தாம இரி. நான் என்னடி செய்ற மழையும் பெய்யுது தொழிலுக்கும் போக ஏலாம கெடக்கு. ஒரு மனுஷனுக்கும் தொழில் இல்லாம தான் கிடக்கு இருக்கிறவனும் இந்த காலத்தில இல்லாத நெலமையில தான் இருக்கான் அப்படி இருக்கக்க ஊடு ஒழுகுது ஊடு ஒழுகுது தகரத்த வாங்கி அடிங்க எண்டா அதுக்கும் காசுதானே வேணும்.... ஆரு கிட்ட போய் நாம கேட்க்குற நெலமைய வெளங்கி கத சும்மா அத இத கதச்சி வெசற கெழப்பாத செல்லி போட்டன்”

இனியும் அவள் தன்னை தூங்க விடமாட்டாள் என புரிந்து கொண்டவனாக

அனீஸ் எழுந்து சென்று பல் துலக்கத் தொடங்கினான்.

மழை சற்றே ஓய்ந்திருந்த நிலையில் சேலைத்தலைப்பால் தன் தலையினை மூடியவளாக பக்கத்து வீட்டை நோக்கி நடந்தாள் பசீனா.

"பசீனா எங்கடி போற?" தன் கணவனின் கேள்விக்கு பதில் சொல்லாமலே நடந்தாள். "இருங்க வாறன் "என்றவாறே அவள் சென்று கொண்டிருந்தாள்.

சென்றவள் பக்கத்து வீட்டு பாத்திமாவின் வீட்டை அடைந்தாள். பசீனவை கண்ட பாத்திமா

"வா பசீனா வா எங்க இந்த பக்கம்..? " என்று கேட்டாள் பசீனா கூறத் தொடங்கினாள்

"ஒரு எடமும் இல்ல பாத்திமா ராத்தா இங்க தான் வந்த ஒன்கிட்ட ஒரு ஒதவி கேட்கலாம் என்று வந்தன்" என்றாள்.

இவள் எந்த உதவியை எதிர்பார்த்து வந்திருக்கிறாள் என்பதை நன்றாக புரிந்து கொண்ட பாத்திமா "என்ன ஒதவி கேளு" என்றாள்.

"பாத்திமா ராத்தா காசிருந்தா ஒரு ஆயிரம் தா பொறகு தாரேன் அவருக்கு தொழிலும் இல்ல ஒண்டும் இல்ல பெரிய கணகாட்டா கெடக்கு வீட்டு சாமானும் இல்ல ஒன்றும் இல்ல பிள்ளைகள் பசிக்குது பசிக்குது எண்டு உசிர வாங்குது கள் அதுகளுக்கு அத இத வாங்கி குடுக்கயாச்சும் ஒரு சதக்காசுமில்ல அதுக்குள்ள மழையும் ஒண்டா கெடக்கு என்ன செய்றண்டு எனக்கெண்டா வெளங்குதில்ல"அவள் பேசிக்கொண்டே போனாள்

"ஒண்ட நெலம மட்டுமா பசீனா எங்கட நெலைமையும் அப்படித்தான் கெடக்கு பார்க்கத்தான் பணக்காரங்கண்ட பேரு நாங்க பர்ர கஷ்டம் அந்த அல்லாஹ்வுக்கு தான் தெரியும் கடையில யாபாரம் போனால் தான் காசு இல்லாட்டி அதுவும் இல்ல கோவிச்சுக்காத பசீனா எனகிட்டயும் காசு இல்ல என்ன செய்ற என்று தெரியாமத்தான் நானும் குந்தி இருக்கேன்".

பாத்திமா பதில் சொன்னதும், அதுக்கு மேல் என்ன சொல்வதென்று தெரியாமல் பசீனா எழும்பி நடந்தாள். தன் நிலையினை யாரிடம் சொல்வது என தவித்தாள். வீட்டுக்குள் வந்தவளிடம் அனீஸ்

"பசீனா சரியா பசிக்குது என்னையாசும் இருக்கா? என்றான். பசீனாவுக்கு வந்த கோபத்தில்

"என்ன இருக்கு இஞ்ச ஒண்டும் இல்ல, வாங்கி வெச்சாதானே இரிக்கிறதுக்கு" என்றாள் கோபமாக

"ஏதோ எல்லா சாமானும் வாங்கித் தந்தவர் போல கேக்காரு" தனக்குள்ளே முணுமுணுத்துக் கொண்டிருந்த அவளை பார்த்த அனீஸ்

"சரி....சரி....கோவப்படாம தேத்தண்ணி யாச்சும் ஊத்தி தா" என்றதும் அவனை முறைத்துப் பார்த்தவளாய் சென்று தேநீர் ஊற்ற தொடங்கினாள்.

தன் கணவனின் பொறுப்பில்லாத தனத்தையும் பொடுபோக்குத் தனத்தையும் நினைத்து மனம் வருந்தினாள் பசீனா. ஒரு ஏழை குடும்பத்தில் ஐந்து சகோதரிகளுக்கு இளையவளாக பிறந்த பசீனாவை அனீஸ் எதுவும் வேண்டாம் என்று கூறி மனமுவந்து கரம் பற்றிக் கொண்டான்.

அவனுக்கென இருந்த அந்த இரண்டு அறைகளை கொண்ட அந்த குடிசை போன்ற வீட்டில் பசீனாவை அழைத்து வந்து இல்லற வாழ்வை தொடங்கினான். அவர்களது அன்பின் வெளிப்பாடாய் பசீனா இரண்டு ஆண் குழந்தைகளை அடுத்தடுத்தாற் போல் பெற்றெடுத்தாள். ஆரம்ப காலங்களில் பசீனாவை நன்றாக பார்த்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக ஓடி ஓடி உழைத்தான். எந்த வேலையா இருந்தாலும் மறுக்காமல் செய்ய முன் வந்தான். தான் உழைக்கும் பணத்தை கை

நிறைய அள்ளிக் கொண்டு சென்று தன் மனைவியிடம் கொடுப்பான். ஆனால் இப்பொழுதெல்லாம் அப்படி இல்லை முற்று முழுதாக ஒரு சோம்பறியாக மாறி இருந்தான் அது மட்டும் அல்ல முதல் போல் தொழில் எதுவும் அவனுக்கு கிடைக்காமல் இருந்தது இதனால் அனீஸ் எந்த வேலைக்கும் போக பிடிக்காமல் வீட்டிலே முடங்கிக் கிடந்தான்.

கேட்டால் “இந்த மழைக்கு உள்ள எங்க வேலைக்கு போக சொல்றாய்” என காரணங்கள் சொன்னான் அந்தக் குடும்பத்தின் தலைமைப் பொறுப்பு பசீனாவின் தலையில் வந்து விழுந்தது. பசீனா வீட்டின் அத்தனை தேவைகளையும் தேடி தேடி செய்து வந்தாள். அங்கு இங்கு கடன் பட்டு நேரத்துக்கு நேரம் சமைத்து வைக்கும் உணவை உண்டு எந்த கவலையும் இல்லாதவனாக காலத்தை கழித்து வந்தான் அனீஸ்.

பொடுபோக்குத்தனமாய் நடந்து கொள்ளும் தன் கணவனின் செயற்பாடுகளை பார்க பார்க கோபம் வந்து ஒட்டிக்கொள்ளும். கணவனை வசை பாட ஆரம்பிப்பாள். ஒரு வகையில் அவன் சொல்வதும் நியாயம் என பட்டதும் வாயை மூடி மௌனியாவாள்.

பசீனா தன் வீட்டு வறுமை நிலையை நினைத்து யாரிடம் உதவி கேட்பது என தெரியாமல் தவித்தாள். அங்கலாய்த்தாள்.

நாட்கள் சில நகர்ந்தன. மழையும் விட்ட பாடில்லை. ஒழுகிக் கரையும் அந்த ஓட்டை குடிசையினை அண்ணாந்து பார்த்தாள். அவள் மனதை போலவே அந்த வானமும் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தது. பசீனா தெரிந்தவர்கள். உறவினர்கள் என எல்லோரிடமும் கையேந்தாத குறையாக தன் வீட்டு கூரைக்கு ஒரு வழி செய்ய உதவி கேட்டுப் பார்த்தாள். ஆனால் யாருமே உதவ முன் வரவில்லை. கை விரித்து விட்டனர். எங்க நிலைமையும் இப்போ அப்படித்தான் இருக்கு பசீனா தொழிலும் இல்லை ஒன்றுமில்லை வார வருமானத்துக்கும் வழி இல்லாம பெயித்து நாங்களே யாருகிட்ட கடன் கேட்கலாம் என்ற நிலையில இருக்கோம் என்றனர். பசீனா ஏமாற்றத்துடன் வீடு திரும்பினாள். மழை ஓய்ந்த பாடில்லை. பசீனா தன் வீட்டு நிலைமையை நினைத்து என்ன செய்வதென தவித்தாள்.

தன் வீட்டு நிலைமைதனை ஒருவாறு உணர்ந்து கொண்ட அனீஸ் ஏதாவது ஒரு வேலை கிடைக்காதா? தன் குடும்ப பாரம் தீர என பல இடங்களில் வேலை கேட்டான். எங்கும் அவனுக்கு வேலை கிடைக்கவில்லை. உறவினர்கள், நண்பர்கள், தெரிந்தவர்கள், என எல்லோரும் கை விரித்து விடவே வருமானத்துக்கு என்ன செய்வது நம் வறுமை நிலை தீர யாரிடம் போய் கையேந்துவது என பலத்த யோசனையில் வந்த அனீசை யாரோ ஒரு குரல் அழைத்தது.

அவன் திரும்பி பார்த்தான்.ஒரு பெண் அவளை அழைத்தாள் “தம்பி இந்த மரத்தில தேங்காய் கொஞ்சம் இருக்கு அத ஆஞ்சு தர ஏலுமா? காசு தாரேன்” என்றாள்.

அந்த நடுத்தர வயது பெண். பிள்ளைகளின் அழு குரலும் மனைவியின் நச்சரிப்பும் அவன் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்க மரங்களில் இதுவரை ஏறி பழக்கம் இல்லாத அனீஸ். அப்பெண்மணியிடம் சரி என ஒப்புக் கொண்டான்.

சைக்கிளை தள்ளி சாத்தி வைத்தவன். தனக்குள் ஒரு தைரியத்தை வரவழைத்துக் கொண்டு ஓங்கி உயர்ந்து நிற்கும் அந்த பெரிய தென்னை மரத்தில் ஏற தொடங்கினான் சிறிது தூரம் ஏறியதும் அவனுக்கு கண்கள் இருட்டிக் கொண்டு வர மயக்கம் வருவது போல் இருந்தது. அவனுக்கு தன்னை சுதாகரித்துக் கொண்டவன் மீண்டும் ஏற தொடங்கினான். கண்கள் மீண்டும் இருட்டி தலை சுற்றி வர கண்ணிமைக்கும் நொடி பொழுதில் அவன் கீழே தொப்பென விழுந்தான்.

வீட்டு வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பசீனாவை பாத்திமாவின்

குரல் அழைத்தது "பசினா.. பசீனா.." "என்ன பத்திமா ராத்தா வாங்க" என்றாள்

"பசினா… பசீனா…ஓங்கு மச்சான் தென்ன மரத்துல தேங்காய் ஆய ஏறி மரத்திலிருந்து உழுந்து மௌத்…மௌத் ஆயிட்டாராம்…"

ஒரு வாறு சொல்ல வந்த விஷயத்தை திக்கித் திணறி சொல்லி முடித்தாள். அவள். சொன்னதும் தான் தாமதம்

"எண்ட அல்லாஹ் வே" என தலையில் கை வைத்துக் கொண்டு தரையில் அமர்ந்தாள் பசீனா.

அனீசின் உயிரற்ற உடலை போலீஸ் விசாரணை போஸ்ட் மட்டம் என பல நேர பரிசோதனையின் பின் வீட்டுக்கு கொண்டு வந்து கொடுத்த பின், இறுதி கடமைகளை செய்ய ஆயத்தம் செய்து கொண்டிருந்தனர். பித்து பிடித்தவள் போல் அமர்ந்திருந்தாள் பசீனா அவளது இரண்டு பிள்ளைகளும் தாயை "உம்மா வாப்பாவ ஏன்மா இப்படி வச்சிருக்காங்க" என கேட்டு அழுது கொண்டிருந்தார்கள்.

தன் ஏழ்மை நிலையால் வந்த நிலையோ இதுவென தனக்கும் தன் பிள்ளைகளுக்கும் இனியார் துணை என கண்ணீர் வடித்தாள் தொழிலுக்கும் போகச் சொல்லி கணவனை நச்சரித்து இருக்கக் கூடாது என தன்னை தானே நொந்து கொண்டாள். யாரை நோவதென்றே தெரியாமல் தன் இரு பிள்ளைகளுடன் இனி விதிவிட்ட வழியே வாழ்க்கையென இடிந்துபோய் இத்தாவில் அமரந்தாள் பசீனா.

(முற்றும்)

**தைரொய்ட் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு**

கொத்த மல்லி ஒரு கைப் பிடி எடுத்து அதை இடித்து ஒரு கிளாஸ் அளவு தண்ணீரில் இரவு முழுவதும் ஊறவைத்து விட்டு காலையில் அதனை கொதிக்க வைத்து வடிகட்டி தொடர்ச்சியாக 48 நாள் அருந்தி வரும் போது தைரொய்ட் பிரச்சினையிலிருந்து முற்றாக விடுபடலாம்.

# புத்தளம் சஜீலா இப்ராஹீமின் கவிதைகள்

01.
சமயங்களில்…
ஆற்றுப் படுத்துவதற்காய்
நீளும் கரங்களை விட
என் கண்ணீருக்கே
அதிகம் மதிப்பளிக்கிறேன்..!!

அழுது தீர்ப்பதை போல்..
பெரும் ஆறுதலை
எந்த கரங்களும்
கொடுத்திடப் போவதில்லை…!!

02.
யாரோ ஒருவர் வாழ்க்கையில்
நான் பேரன்பாக இருந்திருக்கிறேன்
ஏனெனில்..
இந்த பூங்கொத்து
உனக்காக தான்
என அவர் பரிசளிப்பதை
காண்கிறேன்..!!


யாரோ ஒருவர் வாழ்க்கையில்
சந்தித்த சிறந்த நபராக நான்
இருந்திருக்கிறேன்
ஏனெனில்..
என் புன்னகைக்கு காரணம்
நீ தான் என அவர் கூற
கேட்கிறேன்..!!

நான் வாழ்வில்
வெற்றி பெற்ற கதாபாத்திரமாக
உணர்கிறேன் ..!!
ஏனெனில்…

அந்த யாரோ ஒருவரால்
நான் இன்னும் வாழ்ந்து
கொண்டிருக்கிறேன்..!!

# கீறல் இதழ் 09 பற்றி ஒரு வாசகியின் பார்வை

சித்தி மிஸ்றியா அமீன்
கிண்ணியா




**மின்னல்** வெளியீட்டகத்தினால் வெளியிடப்படும் கீறல் பல பயனுள்ள தகவல்களைத் தாங்கி வெளிவரும் அருமையான ஒரு சஞ்சிகை. சிறந்த இலக்கியவாதிகளின் சிந்தனைகளில் தெளிவான ஆக்கங்களால் இச்சஞ்சிகை அலங்கரிக்கப்பட்டிருப்பது சிறப்பு.

பன்முகத் திறமைகளை தன்னகத்தே கொண்ட கவிஞர் அஸீஸ் எம் பாயிஸ், அஷ்ஷெய்க் இஷட் ,எம் நிலாம் நளீமி, பேராசியர் எஸ்.எம்.அய்யூப் ஆகிய திறன் மிக்க எழுத்தாளர்கள், இலக்கியவாதிகளின் கூட்டு முயற்சியில் புஷ்பிக்கப்பட்டு, கலை இலக்கிய மலராக வெளிவரும் இச்சஞ்சிகையின் பெறுமதி அதனை கைகளில் தூக்கும் போதே பார்வையில் மிகவும் தரமானதாகவே புலப்படுகிறது.

படைப்பாளிகள் கொண்டிருக்கும் பேரறிவு, படிப்பாளிகளான வாசகர்களை உள்வாங்கிச் செய்வதற்கான சிறந்த முயற்சி எனலாம். எல்லா வாசிப்பாளர்களையும் திருப்திப்படுத்துவது மிகக் கடினம். இருந்தாலும் கீறலில் வாசிப்பாளர்கள் திருப்திப் படுவர் என்பதில் சந்தேகமில்லை

பிரசித்திபெற்ற பெரும் இலக்கியவாதிகளின் ஆக்கங்கள் இச்சஞ்சிகையை மேம்படுத்தியிருந்த போதிலும், வளர்ந்து வரும் இளம் எழுத்தாளர்களையும் ஊக்குவித்து அவர்களுக்கான களம்காட்டி இலக்கியவாதிகள் வளர வாய்ப்பளிக்கும் கீறல் உண்மையில் அதன் தரத்தை தனித்துவமாக்கிக் கொண்டதில் வியப்பில்லை.

எழுபத்தாறு பக்கங்களில் அவர்களின் விலை நிர்ணயத்திற்கு சற்றும் குறைவில்லாமல், பளிச்சென்று தரமானதாக தயாரித்திருப்பதை இங்கு குறிப்பிட்டே ஆகவேண்டும்.

நாளாந்த, வாராந்தப் பத்திரிகை தேவையான புத்தகங்களைக்கூட கையில் இருக்கும் அலைபேசிக்கே வரவழைத்து தேவையான பக்கங்களை அவசரமாக தட்டிப் பார்த்து விட்டு அலுவல்கள் அழைக்கிறதே... வாசிப்புக்கு எங்கே நேரம்... என அங்கலாய்த்துக் கொண்டே ஓடிக்கொண்டிருக்கும் இந்த யுகத்தில் நல்ல தரமான அறிவு மலர்கள் ஏங்கிக்கிடப்பது கண்கூடு.

கீறல் ஒன்பது வாசித்ததில் இது பற்றி சிறிது கூறலாமே எனத்தோன்றியது . கைகளில் எடுத்தவுடன் இதன் அட்டைப்படமே நம்மைகவர்ந்து விடுகிறது. அங்கே சற்று நேரம் நம்மை நிறுத்தி வைத்து விடுகிறது அதன் ஓவியம். அது உணர்த்தும் செய்திகளும் அருமை.

ஒரு புத்தகத்திற்கோ, சஞ்சிகைக்கோ அட்டைப்பட ஓவியம் கூட அதன்சிறப்பை உணர்த்தும் என்பது உண்மைதான் போலும்.

உள்ளே பிரதம ஆசிரியரின் சமர்ப்பணச் செய்தியுடன் பேராசிரியர் எஸ். எம் அய்யூப் அவர்களின் பட்டாம் பூச்சித் தத்துவத்தை அவர் நஸ்புள்ளாவின் கவிதையோடு

ஒப்பீட்டுக் காட்டியிருப்பதும் ஒரு கவிதை அவருக்குள் ஏற்படுத்திய அதிர்வின் தாக்கத்தை மிக அழகிய மொழிநடையில் நம்முடன் பகிர்ந்து ஆரம்பித்திருப்பது தொடக்கம், அஸ்ரப் சிஹாப்தீன் அவர்களின் “நான் ஒரு ஆபிரிக்கன்” மொழி பெயர்ப்புக்கவிதை, பிரதம ஆசிரியர் பாயிஸ் அவர்களின் “ஊசி” சிறுகதை, மேமன் கவி அவர்களின் “தப்ப முடியா வளையத்திற்குள் உலக உருண்டை”, மரீனா இல்யாஸ் சாபி அவர்களின் “இரவல் கொடு” கவிதை, அஷ்ஷெய்க் றிஷான் சுபைதீன் அவர்களின் “நவீன நாஸ்த்திகத்தின் வரலாறும் அதன் எல்லையும்” என்ற அருமையான தொடர் , அஷ்ஷெய்க் அஹமட் பிஸ்தாமியின் நூலறிமுகம், விரிவுரையாளர் எம்.அப்துல் றஸாக் அவர்களின் நாவல் விமர்சனம். அஷ்ஷெய்க் இஷட் நிலாம் (நளீமி) அவர்களின் ஜின்கள் பற்றிய தொடர் கட்டுரை, சம்மாந்துறை மசூறா அவர்களின் “நியாயப்படும் அநீதிகள்” நிந்தவூர் பர்ஸான எம்.பி அவர்களின் “எல்மிராவின் கடிதங்கள்” சிறுகதைகள் போன்ற அற்புதமான படைப்புக்கள் கீறலின் தரத்தை மேம்படுத்தி நிற்கின்றன.

மற்றும் சிறிலங்கா பென் கிளப் உறுப்பினர்களின் ஆக்கங்களும், மற்றும் பல எழுத்தாளர்களின் சிறந்த ஆக்கங்களும், கதை, கவிதைகள், கண்டு பிடிப்புக்கள், இயற்கை மருத்துவக் குறிப்பு, தத்துவங்கள், அறிவியல் தகவல்கள், சஞ்சிகை அறிமுகம், வரலாற்றுத் தகவல்கள், நூலறிமுகம், டிப்ஸ்கள் என பொருத்தமான அழகிய ஓவியங்களுடன் சஞ்சிகை மிளிர்வது சிறப்பு.

புறநகர்ப் பகுதிகளிலும் பார்க்க, கிழக்கு மாகாண பிரதேசங்களில் இலக்கிய கர்த்தாக்கள் மற்றும் இலக்கிய ஆர்வலர் அதிகம் எனலாம். இலக்கியவாதிகளின் வேடந்தாங்கல் கிழக்கு மாகாணமோ என என்று எண்ணத்தோன்றும் அளவிற்கு இங்கு எழுத்தாளர்கள் பட்டாளமே குவிந்து கிடக்கிறது. சில சமயம் இங்குள்ள மக்களின் பேச்சுக்கள் இலக்கிய ரகமாக இருப்பது கூட அதற்கான காரணமாக இருக்கலாமோ என்னவோ.

இச்சஞ்சிகையின் இன்னொரு சிறப்பம்சம், எழுத்தாளர்களும், எழுத்துக்களும் இங்கு இஸ்லாமிய வரையறைகளுக்கு உட்பட்டதாக இருப்பதும் நம் கலாச்சாரம் பேணப்படும் சிறப்பம்சம் பொருந்தியதாக காணப்படுகிறது.

எல்லோரும் விரும்பிப் படிக்கக் கூடிய இந்த கீறல் இலக்கிய சஞ்சிகையானது எதிர்கால இளசுகளுக்கான இலக்கிய சேமிப்புக்களாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

## எங்களைத் தெரியுமா?

எங்களோடு சமர் செய்ய
புறப்பட்ட சமூகமே...
நாங்கள் யாரென்று
உங்களுக்குத் தெரியுமா?

நீங்கள் மிதித்தாலும்
புல்லென நிமிர்வோம்.
நீங்கள் உதைத்தாலும்
பந்தெனச் சுழலுவோம்.

புயலே சுழன்றடித்தாலும்
வளைந்து கொடுத்து
வாழ்வில் நிலைத்திடும்
நாணல்கள் நாங்கள்.

விதவையெனப் பெயர் சூட்டினாலும்
பெற்றவைகளின் உதயத்திற்காக
கடமையுணர்வுகளை
இதயம் நிறைத்தபடி
வாழ்க்கைச் சாகரத்தில்
சுழியோடும் இல்லத்தரசிகள்.

எங்கள் உடலழகை
எங்கள் புறத்தோற்றத்தை
வியக்கும் உங்களால்
எங்கள் மனத்திண்மையை
வியக்க ஏன் முடிவதில்லை.

கலாபூஷணம்
மும்தாஜ் பேகம் ஹமீட் – ஒலுவில்.

# இதுதான் உலகா?

பண்பாட்டை பாமரன் மதிக்கிறான்
புண்படுத்துவதை படித்தவன் செய்கிறான்

தர்மத்தை பிற்படுத்துவதை பணக்காரன்
செய்கிறான்
இருப்பதைக் கொடுத்து நண்மையை
முற்படுத்துவதை இல்லாதவன் செய்கிறான்

தரம் பார்த்து தரித்திரம் அடைகிறான்
ஒருவன்
தகுதி பார்த்து தகாததை செய்கிறான்
மற்றொருவன்

தனிமையை இனிமை என்கிறான்
ஒருவன்
இனிமையை புதுமை என்கிறான்
இன்னொருவன்

புதுமையை எடுக்க
படிப்பை கெடுக்குகிறான் ஒருவன்
பதுமை பின்னே சென்று
வாழ்வை முடிக்கிறான் மற்றொருவன்

பணத்தை பதுக்கி
குணத்தை இழக்கிறான் ஒருவன்
களவை பெருக்கி
வரவை வங்கியில் பதுக்குகிறான்
மற்றொருவன்

இரத்த உறவை துண்டித்து
பெருமைக்கு வாழ்கிறான் ஒருவன்
இரத்தம் சிந்த கொலைகள் செய்து
அடுத்தவன் வாழ்வை கெடுக்கிறான் ஒருவன்

ஆபாசத்தை நாகரீகமென்கிறான்
அசிங்கத்தை அழகென்கிறான்

இவைகள் இனிதா?
மனிதா இதுதான் உலகா?
உண்மையை உணந்து
மீண்டு வா புதிதாய்

**பானு ஜிப்ரி**
**சாய்ந்தமருது**

# வாழ்க்கை

முடியாப்பொருள்,
விடையிலாக் கேள்விக்கு
அடிக்கோடிட்டு
அகராதி பார்ப்பதான தேடலாய்
இரவு பகலான சுழற்சி வரையறைக்குள்
சூட்சுமமான அழிபொருளானது வாழ்க்கை

நிரந்தரமானதாக
நீண்ட தூரமதாய்ப் போலிகாட்டி
போக்கும் வரவுமான
பொழுதுகளினோட்டத்தில்
தாக்குப்பிடிக்க மாட்டாத
தாழும் துயர் வலிகள்
ஆற்றுப்படுத்துமகவையில்
அறிய முடிவதே வாழ்க்கை

கேட்டுப்பெறாத
கிடைத்த சூழலில் முளைத்து
வரம்பாகி குடும்பம்
வரையறுத்து நிற்க
இனமத பேதத்தில் கோடிட்டு கூறுகளாய்
வளர்ச்சி நிறைவினிலே
நிறுத்திக் கொள்வதுவே வாழ்க்கை

உணர்வு பலவாகி
நினைவு சிலவாகி
வருத்தும்,வாட்டும்,
ஏங்குமங்கலாய்க்கும்,
அழும் சிரிக்கும்
அலாதிகளுக்கு அப்பால்
முதுமை நிலையாக
ஏகாந்த மனமாகி
உயிர் பற்றியுணர்த்துவதே வாழ்க்கை

**ஸ்ரீமதி சுபாஷினி பிரணவன்.**
**கொழும்பு.**



# புளி மாங்காய்..

**முப்லிஹா பிர்தவ்ஸ் –காத்தான்குடி**

அயன் பண்ணாத சட்டையுடுத்து
அழகாய் இரண்டு பின்னல் போட்டு
பாட்டா ஸ்லிப்பர் என்ற ஒன்றை
பத்திரமாய் காலில் மாட்டிக்கொண்டு

பாஞ்சி பாஞ்சி நடந்து சென்று
பஸ்லியாவையும் இழுத்துக் கொண்டு
அஞ்சு ரூபாய் கொப்பி வாங்கி
அவசரமாய் ஓடிச் சென்று

படிக்கத்தான் வேணும் எண்டு
முதல் வரியில் நானும் இருக்க
எங்கிருந்தோ வந்த பாய்ஷா
தள்ளிவிட்டால் என் பையதனை

கத்திக் கதறி முணங்கிக் கொண்டு
பின்னால் போய் இருந்து கொண்டேன்
கரிமாவும் கைரியாவும் சிரிப்புடனே
என்னைப் பார்த்து கண்ணசைத்தார்

முதல் பாடம் ஹனிபா சேர்தான்
முத்தான தமிழைத் தந்தார்
அது முடிய கைரியா எடுத்தாள்
முத்திச் சிவந்த பச்ச மாங்காய்

மூவருமே மறச்சி மறச்சி
மூக்குவடிய உறச்சி உறச்சி
முழுமாங்காய் மூணு திண்டம்
முஸ்தபா சேர் கண்டுவிட்டார்

எதையோ சொல்லி சமாளிச்சி
இன்றவல் நேரம் எழுந்து போயி
திரும்ப வந்து இருந்து பார்த்தால்
வயிற்றுக்குள்ளே ஒருவகை சத்தம்

வெறும் வயிற்றில் திண்டபுளி
வேலையைத்தான் எனக்குக் காட்ட
வெறுங்காலுடன் அவதியாக
விட்டேன் நான் வீட்டுக்கோட்டம்

ரெண்டுநாள் நான் பட்ட அவதி
யாரிடமும் சொல்ல ஏலா
வயிற்றில் இருந்த எல்லாம் எனக்கு
வயிற்றாலயாய் போய்விட்டது.

மூணு நாள் வீட்ட காஞ்சி
திரும்ப நானும் ஸ்கூல் போனேன்
தள்ளி நிண்ட கைரியாவும்
மறுபடியும் மாங்காய் என்றாள்

சுற்றி நானும் பார்த்துவிட்டு
தூஷணத்தால் ஏசிவிட்டு
நல்லபிள்ளை போன்று நானும்
முன் வரியில் அமர்ந்து கொண்டேன்.

அன்றோடு விட்ட புளிதான்
இன்றுவரை எடுக்கவில்லை
அடிவயிறு வீங்கும் போதும்
அதை நானோ தொடுவதில்லை.





உலகின் மிக நீண்ட நடைபாதை

கடலைக் கடக்க வேண்டிய அவசியமோ அல்லது வேறு எந்த குறிப்பிடத்தக்க தடையோ இல்லாமல் நடந்து செல்லும் உலகின் மிக நீண்ட வழி கேப் டவுன் (தென் ஆப்பிரிக்கா) முதல் மகடன் (ரஷ்யா) வரை ஆகும்.

விமானங்கள், படகுகள் தேவையில்லை, பாலங்கள் உள்ளன. மொத்த தூரம் 21,808 கி.மீ மற்றும் சராசரியாக 4,310 மணிநேரம் நடக்க வேண்டும். 187 நாட்கள் இடைவிடாமல் நடப்பது அல்லது 561 நாட்கள் ஒரு நாளைக்கு 8 மணிநேரம் நடப்பது. வழியில், நீங்கள் 17 நாடுகள், ஆறு நேர மண்டலங்கள் மற்றும் அனைத்து பருவங்களையும் கடந்து செல்ல நேரிடும். **(நன்றி : இணையம்)**

# “கமுக்கம்” (சிறுகதை)

ரோஷான் ஏ.ஜிப்ரி



**நெ**ருப்பு வெயிலில் காய்ந்த நெல்லுப் பாய் போல் முறுகிக் கிடந்தது வீதி. ஊரில் மனித நடமாட்டம் வெகுவாகக் குறைந்திருந்தது. காலநிலை, நாட்டு நிலவரம் என காலமும் வாட்டி எடுத்தது. சட்டியிலிருந்து அடுப்பிற்குள் விழுந்த நிலையில் வாழ்வது என்றாகிற்று ஜீவிதம். இந்தக் கூற்றுக்கு யாரும் விதிவிலக்கல்ல ஒவ்வொருவர் வாழ்விலும் ஒவ்வொரு பிரச்சினை இல்லாமல் இல்லை.

வந்திருக்கும் அழைப்பிற்கான காரணம் புரியாமல் பெரும் யோசனையில் இருந்தார் சிவராமன். மீண்டும் பேரிடி இறங்கி விடுமோ என்ற அச்சம் அவரை ஆட்கொண்டிருந்தது. அப்போதைய நிலவரம் இப்போது இல்லை. எல்லாச் செலவினங்களும் மும்மடங்காகி விட்டது இருந்தாலும் என்ன வருமோ பார்ப்போம் தனக்குள் தானே ஆறுதல் அடைந்து கொண்டார்.

முன்னர்போல் எதுவும் இல்லை தலைகீழாய் மாறிக்கிடக்கின்றது காலம். எவ்வளவு பேரம் பேசி வேலையை எடுத்து செய்தாலும் உதிரிப்பாகம் தட்டு, முட்டு சாமான்கள் வாங்கி வாகனத்தை ஒழுங்கமைத்தபின் சிறு கூலியைத்தவிர மெக்கானிக் வேலையில் பெரிதாக ஒன்றும் மிஞ்சுவதில்லை. நமக்கு ஆயிரம் பிரச்சினை இருக்கிறது என்பதற்காய் வாடிக்கையாளர்கள் மீது சுமையை ஏற்றிவிட ஒருபோதும் சிவராமன் விரும்புவதில்லை. அது அவரது தொழில் தர்மம்.

புதிதாக தொழில் தொடங்கிய பலர் மனச்சாட்சி இல்லாமல் கூலி எடுப்பதாக குறைகூறும் வாடிக்கையாளர்களுக்கு சிவராமன் போன்ற நல்ல மனிதர்கள் இருப்பது சிறு ஆறுதல்.

கண்மூடித்தனமாக காசு பார்க்க விரும்பாதவர் சிவராமன். தான் செய்த வேலைக்கு எவ்வளவு தேறுமோ அதை மட்டுமே வாங்கி வாழ்ந்து பழகிக்கொண்டவர் தனது அப்பாவின் மொத்தச் சாயலும் அவரிடம் இருப்பதாக பலர் பேசிக்கொள்வார்கள். பிறருக்கு உதவுவதை பிடிவாத குணமாக கொண்டவர் சிவராமன். காலதாமதம் ஆனாலும் நம்பிக்கையான நபராக சிவராமன் வாகனங்கள் பழுது பார்ப்பதில் அந்த ஊரில் சிறந்து விழங்குகிறார் என்றால் மிகையாகாது.

இன்றைய சூழ்நிலையில் வாகனம் பழுதுபார்க்கும் கரேஜ் நடத்தும் சிவராமன் மெக்கானிக் மிக நெருக்கடிக்குள் தள்ளப்படிருந்தார். கடை வாடகை மின்சாரம், மற்றும் தண்ணீர் கட்டணம் என எல்லாம் விஷமாக ஏறிப்போய் விட்டது கூடவே பிள்ளைகளின் படிப்பு, வீட்டுச் செலவு பெருத்த சுமையாகவே இருந்தது.

இவைகள் இங்கு எல்லோருக்கும் பொதுவானதுதான் இங்கே யாரும் சும்மா இருந்து கொண்டு சோறு தின்ன வில்லைதான் இருந்தாலும் அவரவர் பிரச்சினை அவரவர்களுக்கு. தனக்கு முன் பெரும் செலவுகள் இருப்பதாக அடிக்கடி நண்பர்களுடன் பேசுவார் சிவராமன்.

“உள்ளதும் ஒண்ட வச்சிக்கொண்டு இந்தாள் படுற பாடு அய்யய்யோபா” என்று உறவினர்கள் அலுத்துக்கொள்வதும் உண்டு.

கையில் வைத்திருந்த விலையுயர்ந்த ஸ்மார்ட் போனை கூட அண்மையில் விற்று விட்டு பணத்தை வேறொரு தேவைக்காக பயன்படுத்திவிட்டு உடுதுணி முதல் ஆடம்பரம் என தனக்கான தேவைகளை கொஞ்சம், கொஞ்சமாக குறைத்துக் கொண்டு வாழ பழகியும் கொண்டார் சிவராமன்.

நாளை பெற்றோரை கூட்டிவரும்படி பாடசாலையில் வகுப்பாசிரியை சொன்னது சுஜியின் மண்டையை போட்டு குடைந்து கொண்டிருந்தது அதிலும் இம்முறை அப்பாவை. இதுதான் அவளுக்கு பிரச்சினையே...

“எனக்கு சுத்தமா பிடிக்கல்ல கொஞ்சமாவது நாகரீகமா உடுக்கிறதும் இல்ல எப்ப பார்த்தாலும் வேலை வேலை...”

காலையிலேயே கடிந்து கொண்டவளாக தொடங்கினாள் ஆண்டு ஐந்து படிக்கும் சுஜி.

“அம்மா இண்டக்கி பேரன்ஸ் மீற்றிங் க்கு நீதான் வரணும்”
என அடம்பிடித்தாள் சுஜி.
“ஏண்டிம்மா இண்டக்கி அப்பா வருவார் நீ போ...அப்பாவைத்தானே கூட்டிவரச் சொன்னவிய”

அம்மா அப்படி சொன்னதும், சுருக்கென பாய்ந்தாள் சுஜி
“இஞ்சாரு அம்மா நான் இண்டக்கி இஸ்கூல் போறல்ல....”

உண்ட அழகுக்கும் அறிவிற்கும்
“இந்த மனுசனோட எப்படியம்மா வாழ்ந்த நீ ..”
“ஏண்டி இப்படி கேக்குற..?”
“அவருக்கும் தன் புள்ள படிக்கிற இஸ்கூல் போக ஆச இருக்காதா”
என்ற கேள்வி சுஜியின் அம்மாவின் ஒற்றை வார்த்தையிலிருந்து அறியமுடிந்தாலும் சுஜி எதையும் கண்டுகொள்ளாதவளாய் தொடர்ந்தாள்

“எப்ப பார்த்தாலும் கிறீசும், ஒயிலும் கரேஜும் என்று கிடக்கிற இந்தாளோட வாழ்க்க முழுக்க மாரடிச்சிருக்கயே அதான் கேட்டன்.”

செல்லம் அதிகம் கொடுத்ததால் கொஞ்சம் வாய் கூடத்தான். உள்ளதும் ஒன்று இல்லையா ..? அதுதான். மகள் தலைக்கேறிய கோபத்தின் உச்ச தொனியில் வினவினாள்.

தன் கணவனை மகள் சுஜி சதா கடிந்து கொள்கிறாள் முகத்தில் அடித்தால்போல் பேசுகிறாளே என காவியாவிற்கு தோன்றினாலும் திருமணம் முடித்து பல வருடங்களின் பின் தவமாய் தவமிருந்து பெற்ற மகள் என்பதால் அடக்கிக் கொண்டாள்.

”என்னடி புள்ள பேசுறாய் அப்பாண்ட காதில விழப் போகுது..”
“விழுந்தா விழட்டும் விடு” என முறைத்துக்கொண்டாள்.

இறுதியில் அவளது பிடிவாதம் வென்றுவிட்டது. அன்று அம்மாவோடே பாடசாலைக்கு போய்விட்டாள் சுஜி. அப்பாவை ஏன் கூட்டிவரல்ல என்று ரீச்சர் கேட்டால் சொல்ல ஒரு பொய்யையும் தயார் செய்திருந்தாள்.

தலைமை ஆசிரியர் உரையாற்ற தொடங்கியபோது பிள்ளைகளின் படிப்பு, பாடசாலையில் உள்ள பௌதிக வளம் சுற்றுச் சூழல் பாதுகாப்பு புதிய ஆசிரியர்களின் வருகை, பிள்ளைகளின் வரவில் உள்ள முன்னேற்றம் மற்றும் தேசிய மட்டத்திற்கு பாடசாலையின் பெயரை கொண்டு சென்ற மாணவர்கள் பற்றியெல்லாம் சிலாகித்து பேசிய பின் தொடர்ந்த அதிபர்

“பெற்றோர்கள் மாணவர்கள் முன்பாக அனைவருக்கும் முன்மாதிரியாக இருக்கும் ஒரு முக்கியமான நபரை நாங்கள் இந்த நிகழ்வில் அறிமுகம் செய்ய இருக்கின்றோம் மாற்றான் தாய் மனப்பாண்மையுடன் இவ்வளவு

உயரத்திற்கு இருவரை கொண்டு வந்து சேர்த்த ஒரு தனி நபரின் பெருமையே இங்கு இன்றைய பேசுபொருள்''

''சின்ன வயதிலிருந்தே இன்றைய பிள்ளைகள் நாகரீகம் என்ற மோகத்திற்கு பழக்கப்பட்டுப் போனதால் சில நேரம் சிலர் அறியாத்தனமாய் தாம் வந்த வழியை மறந்து விடுவது அபத்தமே!''

''நாம் ஒவ்வொருவரும் சக மனிதர்களை நேசிக்க வேண்டும். விளிம்புநிலை மக்களின் தேவைகள் உணர்ந்து சிறு உதவியானாலும் ஒரு சேவையாக செய்ய முன்வர வேண்டும் வெற்றி நிச்சயமாக நமக்கொரு விலாசத்தை பெற்றுத்தரும் என்ற ஒருவரின் கூற்று இன்று மெய்ப்பிக்கப் பட்டிருக்கிறது நமக்கெல்லாம் பெருமையே''

''ஒருவரது அர்ப்பணிப்பும், எளிமையும் தன்னடக்கமும் இவ்வளவு தூரம் உயர காரணமாக உள்ளதை உங்கள் முன்னால் கூறுவதற்கு காரணம் நம்மில் இவர்போல் இன்னும் பலர் இப்படியான சமூகம் சார் செயற்பாடுகளில் இறங்கி ஈடுபட அது ஏதுவாக அமையும்''

''யாரும் அறிந்திராத ஒரு உண்மையை கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக நாங்கள் மிகவும் இரகசியமாக பேணி வந்தோம் ஆனால் இன்று காலமும் நன்கு கனிந்து வந்த வேளை கட்டாயம் நாங்கள் இந்த கல்விசார் சமுகம் இங்கிருக்கும் பெற்றோர்கள்,மாணவர்கள் முன்னிலையில் கட்டாயம் சொல்லியாக வேண்டும்''

''அந்த நபர் வேறு யாருமல்ல இம்முறை தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் நமது பாடசாலையில் அதிகூடிய புள்ளிகளைப்பெற்று பெருமை சேர்த்த சுஜியின் அப்பா சிவராமன் அவர்களே''

அதிபர் சொல்லச் சொல்ல சுஜியின் கண்கள் கலங்கி நிறைந்தது. அவளுக்கு கிடைத்த விருதை விட பெரும் கிரீடம் ஒன்று அப்பாவிற்கு.

சுஜியின் நெஞ்சில் ஈட்டியை கொண்டு எய்த வலி அப்பாவை தான் கணித்த கணிப்பிற்கு எதிர் மறையாக எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாமல் அவர் செய்யும் இந்த மகோன்னத சேவைக்கு நிகராக வேறு என்னதான் ஈடாக இருக்கிறது?

''அப்பா நான் உங்களை அப்பாவாக அடைந்ததை பெருமையாக நினைக்கின்றேன்''

''உயரிய சிந்தனையும், சமுகப் பற்றும் மிக்கவராக உங்களைப் போன்றதோர் அப்பா கிடைக்க நான் என்ன பாக்கியம் செய்தேனோ..?''

''இதுவரையும் அம்மாதான் உலகம் என்றிருந்தேன் ஆனால் என் கணிப்பையெல்லாம் தகர்த்தெறிந்து நீங்கள் மலைபோல் உயர்ந்து சிகரமாகி விட்டீர்கள்''

''அப்பா எனது நடவடிக்கைகளால் அல்லது பேச்சினால் நான் ஏதாவது உங்கள் மனதை புண்படுத்தியிருந்தால் என்னை மன்னித்துக் கொள்ளுங்கள் அப்பா'' என்பதுபோல் சுஜியின் அழுத விழிகளிலில் கண்ணீரோடு அப்பாவைப் பற்றிய அழுக்கான எண்ணங்கள் கரைந்தோடின.

அருகே வந்து கதறிக், கதறி அழுத சுஜியின் நிலமையை கண்ட சிவராமிற்கு சங்கடமாய் போனது.

இதுவரை தனக்கு கூட தெரியாமல் இவ்வளவு பெரிய இரண்டு பெண் பிள்ளைகளுக்கு ஆரம்பக்கல்வி முதல் உயர்தரம் வரை அவர்களின் பெற்றோர்களின் விருப்பத்துடன் படிப்பிக்க மாதா, மாதம் பண உதவி செய்து எதையும் காட்டிக்கொள்ளாமல் கமுக்கமாக இருந்த கணவனை ஆச்சரியத்தோடு பார்த்து வியந்து நின்றாள் காவியா.

ஆச்சரியமும் மெய் சிலிர்ப்பும் மிகுந்த நொடிகளாய் இருந்த கணம் அது.
வெளியாகிய உயர்தர பெறுபேற்றின்படி மாவட்ட மட்டத்தில் அதிவிசேட சித்திகளை பெற்ற மாணவிகள்


இருவரையும் அருகே அழைத்து பரிசீல்கள் வழங்கியதுடன் இம்முறை தரம் ஐந்தில் புலமைப்பரிசில் வென்ற மகளை அழைத்து தன் நெஞ்சோடு அணைத்துக்கொண்ட சிவராமிற்கு “உனக்கு நீ எதிர்பார்த்த நல்ல அப்பா வாய்க்காமல் போயிருக்கலாம் ஆனால் எனக்கு சாதிக்கத் துடிக்கும் மூன்று பெண் மக்கள் கிடைத்திருக்கிறார்கள் மகளே” என்று மனதுக்குள் சொல்லிக் கொண்டார்.

அந்த கல்விசார் சமுகத்தின் முன்னே உயர்ந்த மனிதராய் விம்பம் கொண்டார் சிவராமன். **(யாவும் கற்பனை)**



## ரோபாட்டிக்ஸின் தந்தை: இஸ்மாயில் அல்–ஜஸாரி (1136–1206)

இஸ்மாயில் அல்-ஜஸாரி ஒரு பல்துறை வல்லுநர். ஒரு அறிஞர், கண்டுபிடிப்பாளர், இயந்திர பொறியாளர், கைவினைஞர், கலைஞர் மற்றும் கணிதவியலாளர், மெசபடோமியாவில் உள்ள ஜசிராவின் அர்துகிட் வம்சத்தைச் சேர்ந்தவர். “தி புக் ஆ∴ப் நாலெட்ஜ் ஆ∴ப் இன்ஜினியஸ் மெக்கானிக்கல் டிவைசஸ்“ என்பது இஸ்மாயில் அல்- எழுதிய ஒரு இடைக்கால அரபு புத்தகம். 12 ஆம் நூற்றாண்டில் ஜஸாரி. இது ஐம்பதுக்கும் மேற்பட்ட இயந்திர சாதனங்கள் மற்றும் ஆட்டோமேட்டாவை விவரிக்கிறது, இதில் கடிகாரங்கள், நீர் உயர்த்தும் இயந்திரங்கள், இசை ஆட்டோமேட்டான்கள் மற்றும் மனித உருவ ரோபோக்கள் ஆகியவை அடங்கும். அல்-ஜஸாரி ஒவ்வொரு சாதனத்தையும் உருவாக்குவதற்கான விரிவான வழிமுறைகளை வழங்குகிறது மற்றும் நிகழ்வுகள் மற்றும் வரலாற்று குறிப்புகளை உள்ளடக்கியது. இந்த புத்தகம் ஐரோப்பிய கடிகார தயாரிப்பு மற்றும் ஆட்டோமேட்டாவின் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியது, மேலும் இது இடைக்கால காலத்தில் இஸ்லாமிய உலகில் அன்றாட வாழ்க்கை மற்றும் தொழில்நுட்ப கண்டுபிடிப்புகள் பற்றிய நுண்ணறிவுகளை வழங்குகிறது. நவீன ரோபாட்டிக்ஸ் பற்றிய முக்கிய கருத்துகளை அவரது புத்தகம் பாதித்தது.




## வாப்புச்சி மரைக்கார்

இலங்கை தேசிய அருங்காட்சியகத்தின் திறப்பு விழா 1877 ஆண்டு இலங்கையின் 14 ஆவது ஆளுனர் நாயகமாக இருந்த வில்லியம் ஹென்றி கிரகெரி அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இதன் போது இதனை அத்தனை அற்புதமாய் கட்டி முடித்த “அரசி மரைக்கார் வாப்புச்சி மரைக்கார்” (சேர் ராஷிக் பரீட் அவர்களின் தாத்தா – தந்தையின் தந்தை) அவர்களின் கட்டிடக் கலைத் திறமையைப் பார்த்த ஆளுனர் அவர்கள் மரைக்காரை அழைத்து “இத்தனை அற்புதமாய் இதனை கட்டி முடித்த உங்களுக்கு நான் ஏதாவது தரவேண்டும், என்ன வேணும் கேளுங்கள்” என்று கேட்ட போது தனக்காக எதுவும் கேட்காமல் அவர் கேட்டார் “அருங்காட்சியகத்தை ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் மூடி விடுமுறை கொடுங்கள்” என்று கேட்டார் அதற்கு காரணம் ஆளுனரிடம் அவர் சொன்னார். “வெள்ளிக் கிழமை முஸ்லீம்களின் ஜூம்மா தினமாகும், ஜூம்மாவுக்கு செல்லாமல் ஒரு முஸ்லீமாவது இதனை பார்வையிட வந்தால் அது குறித்து இறைவன் என்னிடம் நாளை மறுமையில் கேள்வி கேட்கக் கூடும் அதனால் வெள்ளிக் கிழமை மட்டும் விடுமுறை கொடுங்கள்” என்று கேட்டார் அதனை அன்போடு ஏற்றுக் கொண்ட ஆளுனர் அதற்கு அனுமதியளித்தார் அன்றிலிருந்து 2010 ஆம் ஆண்டுவரை ஏறத்தாள 133 வருடங்கள் இதே நடைமுறை இருந்து வந்தது.

அது மாத்திரமன்றி வாப்புச்சி மரைக்கார் மிசநெறி கல்வியை கற்பதில் பின்வாங்கி நின்ற முஸ்லீம்களின் கல்வி வளர்ச்சிக்காக 1892 ல் தனது சொந்த செலவில் பாடசாலை ஒன்றைக் கொழும்பு மரதானையில் கட்டி அந்த பாடசாலைக்கு வருமானத்திற்காக நான்கு வீடுகளையும் கட்டி வாடகைக்கு விட்டார். அவர் உருவாக்கிய அந்த பாடசாலைக்கு அல் மதரசத்துல் ஸாஹிறா என்று பெயரும் வைத்தார் அதுதான் இன்றைய கொழும்பு ஸாஹிறா கல்லூரி ஆகும். பின்னாளில் தனது மொத்த சொத்துக்களையுமே இவர் இந்த கல்லூரியின் அபிவிருத்திக்காக வழங்கி வைத்தார் என்பதும் வரலாறு.

# படிப்பினை தர ஒரு படித்துச் சுவைத்த கதை



## நுண்ணறிவு?

மத்தியகாலப்பகுதியில் ஒரு மனிதனுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது. அவன் ஒரு கோட்டையில் ஒரு சிறிய அறையில் சிறைவைக்கப்பட்டான். அவனுக்கு மரணதண்டனை நிறைவேற்றுவதற்கு இன்னும் ஒரே ஒரு நாள், ஓரிரவு வேளை மட்டுமே எஞ்சியிருந்தது, விடிந்தால் அவனுக்கு மரண தண்டனை நிறை வேற்றப்படும்.

அன்றிரவு கைதியின் அறைக்கதவு திறக்கப்படும் ஓசை கேட்டு கவலை யோடிருந்த கைதி தலையை தூக்கிப்பார்த்தான். வாசலில் அந்நாட்டின் அரசன் காவலர்களோடு நின்றிருந்ததைக் கண்டதும் தடுமாறி எழுந்திருக்க முயற்சித்தான்.

அரசர் அக்கைதியைப்பார்த்து புன்முறுவல் பூத்தான், பின்னர் கூறினார்:

“நான் இப்போது உனக்கொரு சந்தர்ப்பத்தை அளிக்கின்றேன். நீ அதனை சரியாக பயன்படுத்திக் கொள்வாயானால் உன்னால் இன்னும் நீண்ட நாட்களுக்கு உயிர் வாழமுடியும். எனக்கூறிவிட்டு கைதியின் முகத்தில் ஏற்படும் மாற்றத்தை மெல்லிய வெளிச்சத்தில் அவதானித்தான்.

தொடந்து அரசர் கைதியைப்பார்த்து, “இந்த கூண்டில் இருந்து வெளியே செல்வதற்கான ஒரு வழி இருக்கின்றது. அதனை நீ கண்டுபிடித்தால் இங்கிருந்து விரைவாக வெளியேறலாம், உன்னால் முடியாது போனால் நாளை காலை சூரியன் உதயமானதும் உனக்கு மரணதண்டனை நிறைவேற்றுவதற்காக காவலர்கள் உனது கூண்டிற்கு வருவார்கள்”

எனக்கூறிவிட்டு காவலர்களை பணித்து கைதியின் கை கால்களில் மாட்டியிருந்த விலங்குகளை களற்றிவிட்டு அங்கிருந்து வெளியேறினார்.

அரசர் வெளியேறியதும் கைதி தாமதிக்காமல் அங்கிருந்து வெளியேறுவதற்கான வழியை தேட ஆரம்பித்தான்.

உக்கி உருக்குலைந்து போயிருந்த தரையை மூடியிருந்த “காபெட்“ துணியை தூக்கிப்பார்த்தபோது ஒரு ஆள் நுழையக்கூடியளவு பருமனுள்ள சிறிய கதவு ஒன்று தென்பட்டதும் அவனின் வேகம் கூடியது,உற்சாகம் மேலிட்டது.

அதனுள் எட்டிப்பார்த்தான். அங்கிருந்து படிகளின் தொடரொன்று கீழ்த்தளத்தை நோக்கிச்செல்வதை அவதானித்தான். மிக அவதானமாக அதில் கால்வைத்து இறங்கியபோது இன்னுமொரு தொடர் படியை அவதானித்தான்.

குளிர் காற்று அவன் மேனியை தழுவுவதை உணர்ந்தான். வெளியிலிருந்து வந்துகொண்டிருந்த குளிகாற்று வரும் இடத்தை காணும்வரை அவன் நடந்தான். அடுத்து அவன் அக்கோட்டையின் கோபுர உச்சியை அடைந்ததை உணர்ந்தான். அங்கிருந்து கீழே பார்த்தபொழுது பரந்து விரிந்திருந்த நிலம் இருளில் மூழ்கியிருப்பதை உணர்ந்தான்.

அவன் நின்று கொண்டிருந்த தரைமீது பாதத்தால் பலமாக தட்டியபோது அவன் நின்று கொண்டிருந்த கல் இலகுவாக அசைந்து கொடுத்தது. அக்கல்லை அசைக்கமுடியும் என உணர்ந்ததும்

மெதுவாக அதனை அப்புறப்படுத்தினான். அதனுள் ஒரு மனிதன் தவழ்ந்து செல்லக்கூடியளவான சுரங்கப்பாதை தென்பட்டது.

கைதி அதனுள் இறங்கி ஊர்ந்தபோது கோட்டைக்கு பக்கத்தில் அருவியொன்று ஓடுவதை அனுமானித்தான். கடைசியில் இருபுக்கம்பிகளினால் மறைக்கப்பட்ட ஒரு யன்னலின் பக்கத்தில் வந்து நின்றான். அதற்கப்பால் அவனால் செல்ல முடியவில்லை. அதனால் இரவு முழுவதும் அங்கேயே இருந்தான். எல்லா வழிகளிலும் அங்கிருந்து போவதற்கு முயற்சி செய்தான். ஆனால் முடிவில் எல்லாம் வீணானது.

கைதியின் முழு இரவும் கழிந்து யன்னலினூடாக சூரியன் உள்ளே எட்டிப்பார்த்தான். மறுபுறத்தில் இருந்து யன்னலினூடாக அரசன் அவனைப் பார்த்துக் கொண்டிருப்பதை அவதானித்தான்.

அரசன் அவனை நோக்கி ‘‘நான் நீ இன்னும் இங்கே இருப்பதை காண்கின்றேன்’’ என்றார்.

கைதி அரசனைப்பார்த்து: ‘‘ஓ..அரசரே! நீங்கள் என்னுடன் நாணயமாக நடந்து கொள்வீர்கள் என எதிர்ப்பார்த்தேன்’’ என்றான்.

இதனைக்கேட்ட அரசன் ‘‘நான் நாணயமானவனே!’’ எனக்கூறியதும் கைதி அரசனைப்பார்த்து ‘‘நீங்கள் நான் தப்பிப்பதற்கு ஒரு வழியையும் வைக்கவில்லை, அப்படியானால் அந்த வழி எங்கே’’ என்றார்.

அரசன் அவனைப்பார்த்து ‘‘சிறைக்கூண்டின் கதவை நான் மூடவில்லை, திறந்து விட்டே வந்தேன்’’ என்றார்.

**நன்றி : இணையம்.**

## கீறலோடு நீங்களும் பயணிக்க...

கீறல் கலை இலக்கிய சஞ்சிகையோடு நீங்களும் இணைந்து பயனிக்கலாம்.

உங்களின் திறமைகளுக்கு களம் தர கீறல் காத்திருக்கிறது. கவிதை, சிறுகதை, கட்டுரைகள் (இலக்கியம், அறிவியல், தொழினுட்பம், உளவியல், சமூகப் பிரச்சினைகள்) பத்திகள், நூல் அறிமுகம் இவ்வாறு சகல துறைகளிலும் நீங்களும் எழுதலாம். உங்களது படைப்புக்களை 0758832199 எனும் வாட்ஸ்அப் மூலமாக நீங்கள் அனுப்பி வைக்கலாம்

கீறல் சஞ்சிகையை தொடர்ச்சியாக பெற்றுக் கொள்ள நீங்கள் விரும்பினால் ஆண்டுச் சந்தா தாரராக இன்றே இணைந்து கொள்ளுங்கள்.

பிரதி ஒன்றின் விலை ரூபா. 350/-
தபால் செலவு ரூபா.50/-
வருடத்திற்கு 04 இதழ்கள்
ரூபா.400/- x 04 =
மொத்தம் ரூபா. 1600/-

வருடச் சந்தா ரூபா. 1600/- யினை பின்வரும் வங்கிக் கணக்கில் வைப்பிலிட்டு விட்டு பற்றுச் சீட்டினை எமது 0758832199 என்று வாட்சப் இலக்கத்திற்கு அனுப்பி வைக்கவும்.

A.A.M.FAIZ
Account No. 92351549
Bank of Ceylon, Oluvil Branch

மேலதிக விபரங்களுக்கு 0776619949 என்ற மொபைல் இலக்கத்தோடு பிரதம ஆசிரியரை தொடர்பு கொள்ளலாம்.

**அன்புடன்**
**பிரதம ஆசிரியர்**

# கீறல் சஞ்சிகை இதழ் 9 வெளியீட்டு விழா
# 24.02.2024




Cover Design : Sajith Ali

இல. 59/2, பழைய தபாலக வீதி, ஒலுவில் -07 (கி.மா) த.கு.எண் : 32360 இலங்கை.